வெளியீடு இல. 7

நடைமுறைக்கூட்டுறவு அறிவுரை

கூட்டுறவுக்கலாசாலை
வெளிப்புறக்கல்விப்பகுதி
பொல்கொல்லை.

Y.M.H.A.
THIRUNELVELY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைக் கூட்டுறவு-அறிவுரை

288

Y.M.H.A. TIRUNELVELI

கூட்டுறவுக் கலாசாலை
(பொல்கொல்லை)
வெளிப்புறக் கல்விப் பகுதி
வெளியீடு இல. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

பக்கம்

முகவுரை i

அத்தியாயம் I: கூட்டுறவுக் கொள்கைகளும் முறைகளும் 1

அத்தியாயம் II: சமுதாயத்திலே கூட்டுறவு வகிக்கும் இடம் 7

சிலவகைக் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் வெற்றிக்கும் தோல்விக்கு முரிய காரணங்களும் ... 7

கடனுதவி ... 7
விற்பனை ... 9
பண்டகசாலைகள் ... 11
சிக்கனம் ... 14
கைத்தொழில் ... 16

கூட்டுறவினால் சமுதாயத்திலேற்படக் கூடிய நன்மைகள் ... 17

கூட்டுறவின் சட்ட முறை ... 18

சட்டம் ... 18
அரசாங்கத்தின் கடமைகள் 19

அத்தியாயம் III: கூட்டுறவின் தேவையை நிர்ணயித்தல் 23

சேர்ந்துழைப்பதால் ஏற்படும் நன்மைகள் 23

எளிய முறையில் சங்கம் அமைத்தலின் முக்கியம் 24

நோக்கங்களின் திட்டமான அர்த்தம் 25

இனைகள் அல்லது தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் IV: கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்தல்	28
கூட்டுறவுச் சங்கங்களும் சட்டமும்	28
கூட்டுறவுச் சங்கங்களின் வகைகளும் நோக்கங்களும் ...	29
எல்லையைக் கணித்தல்	29
தேவையான முதலும் நடைமுறைச் செலவுகளும் ...	31
பொறுப்புக்கள்—தவிர்க்க வேண்டியனவும் ஏற்கவேண்டியனவும் ...	35
அங்கத்தவரோடு பொருந்தும் முறை ...	38
ஆரம்பவேலை ...	39
அத்தியாயம் V: நிர்வாகமும் செயலாற்றலும்	45
அங்கத்தவரின் கடமைகளும் உரிமைகளும்	45
கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்பு	49
பொதுக் கூட்டம் ...	49
நிர்வாக சபை ...	50
தேர்தல்கள் ...	51
உத்தியோகத்தர் ...	52
நடைமுறை ...	55
மற்றைய கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு ...	56
கல்வி முறை ...	56
வர்த்தகம் ...	58
சமாசங்கள் ...	60
நிதி சம்பந்தமானவை	61
வர்த்தக சமாசங்கள் ...	63
நிர்வாகம் ...	64
அத்தியாயம் VI: முடிவுரை	68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம்

கூட்டுறவுக் கலாசாலை வெளிப்புறக் கல்விப் பகுதியாரால் ஆரம்பிக்கப்பட்ட போதனு-பயிற்சிக் குழுக்களுக்கு வேண்டிய பாட விடயமாக இந்நூல் ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றது. குழு ஆசிரியர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் இச்சிறு நூலை ஆராய்வதற்கு உதவியாயமையக் கூடிய சில வினுக்கள் ஒவ்வொரு பாட இறுதியிலும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இவ்வினுக்களின் மூலம் அவர்களின் கவனம் ஊன்றி, கவர்ச்சி பெருகிப் பயனளிக்குமென நம்புகின்றேம்.

இப்புத்தகத்தை ஆங்கில மூலத்திலிருந்து மொழிபெயர்த்துப் பதிப்பிக்க அனுமதி தந்த சர்வ தேச தொழில் ஸ்தாபனத்தாருக்குக் கூட்டுறவுத்துறை மிகவும் கடமைப் பட்டிருக்கின்றது. இம் மொழிபெயர்ப்புக்குச் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தார் பொறுப்பாளிகளல்லர் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேம்.

கூட்டுறவுத் துறை,
வெளிப்புறக் கல்விப் பகுதி,
பொல்கொல்லை.

கார்த்திகை 1956.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைக் கூட்டுறவு-அறிவுரை

முகவுரை

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தார் கூட்டுறவு இயக்கத்தில் நெடுங்காலமாகக் கவனஞ் செலுத்தி வருகின்றனர். "தொழில் முறைச் சிக்கல்களுக்கும் கூட்டுறவு விடயங்களுக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பு காரணமாகத் தொழிலாளரின் பொருளாதார சமூக நிலைகளை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான கூட்டுறவு இயக்கத்தின் வெவ்வேறு அம்சங்களைச் சர்வதேச தொழில் நிலையம் கவனிக்க வேண்டும்", என்ற பிரேரணை ஒன்று, 1921-ம் ஆண்டிலேயே சர்வதேச தொழில் மகாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இக்குறிக்கோளைக் கொண்டு பல தேசங்களிலும் கூட்டுறவு இயக்கத்தை வளர்த்தோ மேற்பார்வை செய்தோ வரும் அரசாங்க உத்தியோகத்தருடனும், தனிப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனங்களுடனும், கூட்டுறவு முயற்சிகளை வளர்க்கும் உத்தியோகத் தொடர்பற்ற ஸ்தாபனங்களுடனும் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தார் நெருங்கிய தொடர்பு முறைகளை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

இவ்வித தொடர்பு காரணமாகவும், சாதனங்களின் பேறுலும், சர்வதேச தொழில் ஸ்தாபனம், எல்லாவகை அல்லது அநேக வகைக் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குப் பொதுவாகவுள்ள சிக்கல்களை விடுவிக்க வல்லதும், கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு கிளைகளைப் பற்றித் தெரியவேண்டிய விடயங்களை அறிவிக்க வல்லதுமான பொது ஸ்தாபனமாக விளங்குகின்றது. இவ்வித கடமையைச் சர்வதேச தொழில் ஸ்தாபனம் பல்வேறு வகைகளில் நிறைவேற்றி வருகின்றது. உதாரணமாக: "சர்வதேச தொழில் வர்த்தமானி" போன்ற காலாந்தரப் பத்திரிகைகளில் கட்டுரைகளைப் பிரசுரித்தும், "கூட்டுறவு அறிக்கை" என்னும் விசேட சஞ்சிகையை வெளியிட்டும், கூட்டுறவு விடயங்களில் விசேட போதனு அறிக்கைகளைத் தயாரித்தும், வேண்டுகோட்களுக்கிணைந்து ஆராய்ச்சிகள் நடாத்தியும், அரசாங்கங்களின் வேண்டுகோட்படி புதியன தேடிக் கண்டுபிடிப்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை கூறுவதற்கும் ஒத்தாசை யளிப்பதற்கும் தூது கோஷ்டிகளை அனுப்பியும் வருகின்றது.

பொருளாதாரநிலை குறைவாயுள்ள நாடுகளிலுள்ள பெருந் தொகையான தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தைக் கூட்டுறவு இயக்கத்தின் உதவியால் எவ்வளவு உயர்த்தலா மென்பதைச் சர்வதேச தொழில் ஸ்தாபனத்தார் சமீபகாலத்தில் கூட்டிய பிரதேசக் கூட்டங்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. அக்கூட்டங்களிற் பங்குபற்றிய பல நாடுகளின் அரசாங்கங்கள் மேற் தரப்பட்ட நோக்கத்திற்குக் கூட்டுறவு முயற்சியைப் பயன் ப்டுத்த முயற்சியெடுக்கின்றன. சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் பிரதேசக் கூட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள், "இவ்வேலையில் முனைந்து, பிற்போக்கான நாடுகளுக்கு ஒத்தாசை செய்வது விரும்பத்தக்கது" என்று அழுத்தமாகக் கூறி உத்தியோக முறையில் இத்தொண்டிற்கு உற்சாகமளித்திருக்கின்றன.

இது சம்பந்தமாக, கூட்டுறவு ஸ்தாபனங்களின் பிரதான அம்சங்களையும் அவற்றின் வெற்றிக்கும் தோல்விக்கும் ஏதுவாயுள்ள நிலையையுஞ் சுருக்கமாக மதிப்பிட்டு, கூட்டுறவு வளர்ச்சியில் ஈடுபடுவோருக்கும் கூட்டுறவுச் சங்கங்களை ஸ்தாபித்து நடாத்தி வருவோருக்குமுதவியாகக் கூட்டுறவுக் கொள்கைகளைப் பற்றியும் முறைகளைப்பற்றியும் ஒரு சிறு நூல் எழுத வேண்டுமென்று பன்முறை ஆலோசனை கூறப்பட்டுளது. பரந்த சர்வதேச அநுபவப் பேறுகத் தெளிந்தபடி, குறைவான அபிவிருத்தியுடைய சமுதாயங்களில் எவ்வித கூட்டுறவுச் சங்கங்கள் பயன் விளைவிக்கக் கூடியன என்றும், அவ்வித சங்கங்களை ஏன் அமைக்கவேண்டுமென்றும், அவற்றின் அமைப்புக்கும் நிருவாகத்திற்கும் தடையாயிருப்பன எவையென்றும் சுருக்கமாகத் தெளிவான நடையில் ஆராய்வதே இந்நூலின் முக்கிய நோக்கமாகும்.

இவ்விடயத்தைப்பற்றி இச்சிறுநூலில் அடங்கியுள்ளதை விட எவ்வளவோ எழுதலாம். ஆனல், இவ்விடயத்துக்குப் பிரதான வழிகாட்டியாகவே எழுதப்பட்ட இச்சிறு புத்தகம் பரந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரீக ஆராய்ச்சிக்குரிய பதங்களிலோ, முறையிலோ நடையிலோ எழுதப்படக்கூடாது என்று உணர்ந்தோம்.

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தாரின் வேண்டுகோளுக்கிணங்கி (அவர்கள் குறிப்பிட்டவகையில்) இலங்கையின் முன்னாள் பதிவாளராயும், ஜெனிவில் சர்வதேச மகா சபைக் கூட்டுறவு ஆலோசகராயும், பல ஆபிரிக்க மாகாணங்களில் பிரித்தானிய குடியேற்ற நாடுகள் காரியாலய ஆலோசகராயும் கடமையாற்றி, பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிப் பரந்த நடைமுறை அனுபவம்பெற்ற திரு. டப்ளியு. கே. எச். கம்பெல் அவர்கள் தயாரித்த நூலை ஆதாரமாகக் கொண்டே இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கின்றது.

கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதிலும் அங்கத்தவரை வழிநடத்துவதிலும் ஈடுபட்டிருப்பவரின் உபயோகத்திற்கேற்ற கைந்நூலை வேண்டிநிற்கும் அரசாங்கங்களுக்கும் தனிப்பட்ட நிலையங்களுக்கும் ஏனையவருக்கும் இச்சிறு நூல் பயன்படுமென்று நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 1

கூட்டுறவுக் கொள்கைகளும் முறைகளும்

"தங்கள் பொருளாதார சுபீட்சத்தை வளர்க்க மக்கள் தாமாக விரும்பி, சமத்துவம் என்னும் அத்திவாரத்தில், மனிதப் பிறவிகளாக ஒன்று சேரும் சேர்க்கை முறையே கூட்டுறவு" என்று விளக்கப்பட்டிருக்கின்றது. இவ்விளக்கவுரை கூட்டுறவின் நான்கு பிரதான கொள்கைகளை அடக்கியுள்ளது. அவையாவன:

1. மனிதப் பிறவிகளாகச் சேர்கிறார்களேயன்றி முதலீட்டின் பலம் பொறுத்தல்ல;

2. அவ்வித சங்க அங்கத்தினர் சமத்துவமுடையவர்களாயிருக்கின்றனர். ஒருவருக்கு ஒரே வாக்கு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை;

3. அவர்களது சேர்க்கை சுயவிருப்பத்தினாலானது;

4. அவ்விதசங்கம் குறிக்கோளாகக் கொண்ட நோக்கங்களில் எல்லா அங்கத்தவரும் பொதுப் பற்றுடையவராவர். அவற்றை அடைய வேண்டுமாயின் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டும்.

சேர்ந்து உழைத்தலே "கூட்டுறவு" என்னும் பதத்தின் பொருளாம். 'கூட்டுறவு முறை' என்று நாம் குறிப்பிடும் பொழுது, தனித்து நின்று சொந்தப் பலத்தால் பெறமுடியாத சலுகைகளை மற்றவர்களுடன் சேர்ந்து அடையும் நோக்குடன் பலர் ஒன்று சேர்தலையே கருதுகின்றோம்.

எவனொருவன் பெரும் முதலிட்டுத் தொழில் செய்கின்றானோ அவன் அற்பமுதலுடன் தொழில் செய்பவனைவிட அதிக சலுகைகளை அடைகின்றான் என்பது பொருளாதாரத் துறையில் யாவருமறிந்த விடயம். சில்லறையில் வாங்குவதை விட மொத்தத்தில் பொருள் வாங்குவது சிலாக்கியமானது. ஐந்து இறுத்தல் நிறையுடைய பொருளை வரவழைக்குமொருவன் ஒரு வாகன, புகைவண்டி, அல்லது கப்பல் நிறையுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை வரவழைப்பவனைவிட, வீதாசாரப்படி அதிக செலவு செய்ய வேண்டியவனாகின்றான்.

பொதுப்படச் சொல்லுமிடத்து, பலர் ஒன்று சேர்ந்து உழைப்பதன் பயனாக, 5 இருத்தல் நிறையுடைய பொருளையும், மொத்த வர்த்தக விகிதப்படி விற்கவோ, வேறு பொருளாக மாற்றவோ, அனுப்பவோ உதவிசெய்தலே கூட்டுறவின் நோக்கமாகும். வெளிப்புற எல்லையிலிருந்து உள்நோக்கி இயங்குதலே கூட்டுறவின் மாபெருஞ் சிலாக்கியமாகும். வெகு தூரத்துக்கப்பாலுள்ள சிறுபட பொருள் விளைவிப்பவனுடன் ஆரம்பித்து, அவனையும் அவனது சகாக்களையும் ஓர் கூட்டுறவுச் சங்கமாகச் சேர்த்து, அவ்வித பல சங்கங்களை ஒரு சமாசமாக இணைத்து, பலசமாசங்களை ஓர் சம்மேளனமாகப் பிணைத்து வருகின்றது. கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்பு: என்றும் சனநாயக முறைப்படி அமைந்தும், தனிப்பட்டவரின் சுயாதீனம் பங்கமில்லாமல் பாதுகாக்கப்பட்டும் இருக்கின்றன.

கூட்டுறவென்றால் ஒன்று சேர்ந்துழைப்பது என்று சொன்னோம். இதில், உழைப்பது என்னுஞ் சொல்லே முக்கியமானது. தாம் செயலற்றுக் கைகட்டி நிற்க, தமது கஷ்டங்களை நிவர்த்திசெய்ய அரசாங்கம் முன்வரும் என்னும் மனப்பான்மையுடையவருக்கு கூட்டுறவு எவ்வித நன்மையும் பயக்கப்போவதில்லை என்பதை மிகைபட அழுத்திச் சொல்ல வியலாது.

கூட்டுறவு எண்ணற்ற வகையுடைத்ததாயிருக்கலாம். ஆனால், வகை எவ்வாறாயினும், சங்கத்தின் குறிக்கோளை நிறைவேற்றும்பொருட்டு, தனிப்பட்ட ஒவ்வொருவனும் சேர்ந்துழைக்க வேண்டியது அவசியம். முயற்சி, நேர்மை, உறுதி யென்பவையின்றி எவ்வித கூட்டுறவும் வெற்றிபெற முடியாது. ஆனால் அநேகரிடம் இவ்வித நற்குணங்களிருந்தும், பொருளாற்றல், போதிய கல்வியறிவு, பிரதானமாக-நிர்மாணித்து நடத்துமாற்றல் முதலியவை இல்லாமையால், தங்குணங்களைப் பலன்தரக்கூடிய வகையில் உபயோகிக்க வழியின்றி வருந்துகின்றனர். இவ்வகையினருக்கேதான் கூட்டுறவு அதிக உதவியளிக்க வல்லது. இதனாற்றான், கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர், கட்டாயமாக அல்லாவிடினும் பொதுவாக, லௌகிக செல்வாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் படைக்காச் சமூகவரிசையிலிருந்து எடுக்கப்படுகின்றனர். மிகைபடச் சொல்லுங்குறை கொண்டும், கூட்டுறவென்றால் உழைப்பு என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறவேண்டியிருக்கின்றது. சிர்தூக்கின், வறுமைப்பட்டவனே. செல்வம் படைத்த தனது அயலானைக் காட்டிலும் அதிகமாக, தனது ஓய்வு நேரத்தையும் முழுச்சக்தியையும் பொருளீட்டலின் பலி பீடத்தில் பரித்தியாகஞ் செய்யத் தயாராக விருப்பவன்.

நேர்மையும் உழைக்கச் சித்தமுங் கொண்ட எவருக்கும் கூட்டுறவினால் ஏதோ ஒரு விதத்திலாயினும் பயன்கிடைக்காமற் போவதில்லை. றெச்டேல் முன்னோடிகளின் சரிதையாவருமறிந்த விஷயமாதலால் அதை ஈண்டு குறிப்பிடுதல் அவசியமில்லை. மகாவறுமை பூண்டவராயினும், நேர்மையும் உறுதியும் படைத்தவரான 26 நெசவாளரைக் கொண்ட அச்சிறு குழுவின் முயற்சியே, இன்று, உலகப்பிரசித்தி பெற்று விளங்கும் பிரித்தானிய கூட்டுறவு இயக்கத்துக்கும், ஏனைய நாடுகளிற் காணப்படும் பற்பல கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறது. வலிமை மிகக் குன்றிய முன்னோடிகளாயினும், சேர்ந்து உழைப்பதால் பெறக்கூடிய சலுகைகளுக்கு இதுவோர் கலங்கரை விளக்கமாய் மிளிர்கின்றது. இவ்வித முயற்சியின் வெற்றிக்கு இதைவிட எத்தனையோ சான்றுகளுண்டு.

வட இத்தாலியிலே, மண்வேலையாளர், தச்சர், செங்கல் வேலையாளர், பளிங்குக்கல் வேலையாட்கள், மேசன்மார், மை பூசுவோர் முதலியோரை அங்கத்தினராகக் கொண்ட சங்கங்களையடக்கிய சம்மேளன மொன்று, பிளொரன்சுக்கும் பொலோனுவுக்குமிடையே புகையிரதப் பாதை அமைக்க ஒப்பந்த மொன்றைப் பெற்றது. மற்றவேலைகளுள், 18 கில்லோ மீற்றர் (ஏறக்குறைய 12 மைல்) நீளமுடைய குகைகுடைதலும், 728 அடி நீளமுள்ள பாலம் நிறுவுவதும் இருந்தன. இவ்வேலைகளைச் செய்துமுடிக்க, முதற்றரச் சம்பளம் பெறும்கைதேர்ந்த நிர்மாண நிபுணர்கள் தேவைப்பட்டனர். சாதாரணத் தொழிலாளரை அங்கத்தினராகக்கொண்ட சங்கங்களாலாக்கப்பட்ட இச்சம்மேளனமே இவ்வித நிபுணரை வேலைக்கமர்த்தியும், அவர்களுக்குச் சம்பளங்கொடுத்தும், அவசியம் நேர்ந்தபோது அவர்களை வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யால் விலக்கியும் வந்தது.

பல வருட முயற்சியின்பேருக எவ்வளவு சாதிக்கலாமென்பதற்கு இவையிரண்டும் எடுத்துக் காட்டான திருஷ்டாந்தங்கள். இதை விளக்க, இன்னெரு புறத்தில், வேறோர் உதாரணத்தை ஈண்டுரைப்பது மிகையாகாது.

வட இந்தியாவிலே, பஞ்சாப் பகுதியிலே, ஐக்கிய நாணய சங்கமொன்றிருந்தது, அதன் அங்கத்தவரில் ஒருவராவது எந்தப் பாஷையும் எழுதவோ வாசிக்கவோ அறிந்தவரல்ல. அவ்வாறிருந்தும், அச்சங்கம் கடனுதவியும், தவணைப்பணங் குறிப்பிட்டும், அறவாக்கியும் தனது அங்கத்தவருக்கு அளவிடற்கரிய நன்மைபுரிந்துவந்தது. கல்வியறிவு குன்றிய அநேகரைப் போன்று அவர்களும் அபார ஞாபகசக்தி படைத்தவராக இருந்தனர். தனது சுற்றுப்பிரயாணத்தின்போது, காலத்துக்குக் காலம் அவ்வழிவரும் கல்வியறிவுபடைத்த காரியதரிசி வருமளவும், சங்கத்தின் கொடுக்கல் வாங்கல் அனைத்தையும் அங்கத்தினர் தமது ஞாபகத்தில் வைத்துக் காப்பாற்றி வந்தனர்.

இது விரும்பத்தக்க நடைமுறையாகாது என்பதை ஒப்புக்கொள்ளுகின்றேம். எனினும் அச்சங்கம் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்து வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. சிற்சில குழுக்கள் உதவிபெறவேண்டியவையாயிருப்பினும், "அவற்றில் விவேகமும் கல்வியறிவுமுடையவர் இன்மையால் அவை கூட்டுறவுக்கு அப்பாற்பட்டவை" என்று இடித்துக் கூறுவோருக்கு இது வோர் எதிர்க்கமுடியாத சாட்டையாக விளங்குகின்றது.

கூட்டுறவு எண்ணற்ற வகையுடையதென்றும், அதனுல் ஏதோ ஒருவகையில் பயனடையக் கூடாதவர் இல்லையென்றும் முன் கூறினேம். ஆனுல் வெற்றிக்கு ஏதுவான சாதனங்கள் உண்டா இல்லையா என்று கணிக்க வல்லவரின் புத்திமதிப்படி கூட்டுறவு முறை விவேகத்துடன் கைக்கொள்ளப்படவேண்டும். ஒரு பண்டத்துக்கு வேண்டிய மூலப்பொருளை உண்டாக்குவது, ஈறுன தேவைக்கு ஏற்றமுறையில் அதைப் பல வகையில் பதனிடுவது, பின்னுல் உபயோகிக்கப்படும் இடத்துக்கு எடுத்துச்செல்வது, வாங்குவோருக்கு வசதியான அண்மையில் கொண்டு சேர்ப்பது, இவற்றிற்கெல்லாம் எத்தனையோ வியாபாரிமார் குறிக்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியிருக்கும். இவர்களிற் சிலர் தேவையான சேவையை நியாயமான ஊதியத்துக்குச்செய்வர். வேறு சிலரோ, அநியாயஞ்செய்தும், அதனுல் கொள்ளை இலாபமீட்டியும் வருகின்றனர். ஏனையோரின் அதிருப்தியான சேவையும் அநியாய இலாபமும் அவரை விரும்பத்தகாதவராக்குகின்றன. பின் இரு சந்தர்ப்பங்களிலும், அநியாயத்தை நீக்குவதற்கும் பலனைப் பெருக்குவதற்கும் கூட்டுறவுச் சங்கத்தை அமைக்க முயல்வது நன்றென்பது வெளிப்படை.

கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டதும், அதன் நடைமுறைகளை வகுத்து, அதை வழி நடத்த உப விதிகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இவ்வுபவிதிகளில் ஒன்று, சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களாகிய "அங்கத்தவருக்குக் கடன் கொடுத்தல், அவர்களின் விளை பொருட்களை விற்றல், சேமிப்பதற்கு அவர்களுக்கு வழிகாட்டல்" ஆதியனவற்றை விளக்குகின்றது.

இவ்வித நோக்கங்களைப் பூர்த்திசெய்வதுடன், கூட்டுறவுச் சங்கமானது வேறு பல நன்மைகளையும் பயக்குகின்றது. சனநாயக ஆட்சி முறையில் சிறந்த பயிற்சியை இதன்மூலம் பெறக்கூடியதாயிருக்கின்றது. அங்கத்தவர் சமத்துவ உரிமையுடன் ஒன்று சேருகின்றனர். ஆண்டிக்கும் செல்வந்தனுக்கும் பொதுக்கூட்டங்களில் ஒரேயொரு வாக்குரிமைதானுண்டு. உடன் அங்கத்தவரின் வாக்கினுலேயே சங்க உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டும், அவசியம் நேர்ந்தபோது விலக்கப்பட்டும் வருகின்றனர். பெரும்பான்மையோரின் சித்தத்துக்குக் கீழ்ப்படிய எல்லோருங் கற்றுக்கொள்ளுகின்றனர்.

கூட்டுறவுச் சங்கங்களின் கருமங்கள் ஒழுங்காகவும் வர்த்தக முறையிலும் நடைபெறுகின்றன. காலந்தாழ்த்தாமையின் முக்கியத்துவம் உணர்ந்தறியப்படுகின்றது. சங்கத்தின் கருமங்களைச் சுமுத்திரையாகச் செய்தலாலே மனேதிடனும் தன்னம்பிக்கையும் வளர்ந்து வருகின்றன.

யார் யாரிடம் போதிய சக்தியும் முற்போக்கான ஆற்றலுமுண்டோ, அவர்களுக்கெல்லாம் அவற்றைப் பயன்படுத்தி விருத்திசெய்ய முன்னெருபோதும் கிடைக்காத சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. இதனுல், மறைந்துகிடக்கும் ஆற்றல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியாகி அபிவிருத்தி செய்யப்பட்டுவருகின்றன. தீய வழியில் செலவிட்டோ, பாவிக்கப்படாமல் அழிந்தோபோகும் சக்தி, இதன் மூலம் பிரயோசனமும் சாதகமுமான வழிகளில் உபயோகப் படுத்தப்படுகின்றது.

இவ்வாறு, கூட்டுறவுச் சங்கமானது, சுதந்திரமுடையதாக வும், தனது கருமங்களைச் செய்துமுடிக்கவேண்டிய பூரண அதி காரமுடையதாகவும் இயங்கிவருகின்றது. சட்டத்தாலும் உப விதிகளாலும் வரையறுக்கப்பட்ட எல்லைகளுக்கடங்கிச் செய லாற்றிவரும் பட்சத்தில், அதன் கருமங்களில் குறுக்கிட எவருக் கும் எவ்வித உரிமையுமில்லை.

அத்தியாயம் I

வினாக்கள்

1. ஓர் கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபிப்பதால் உண்டாகக்கூடிய நன்மைகளெவை?
2. கூட்டுறவுச் சங்கத்தில் காணப்படும் விசேட அம்சங்கள் யாவை?
3. கூட்டுறவாளரிடம் நேர்மையும் உழைப்பு விருப்பும் ஏன் இருக்கவேண்டும்?
4. கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏன் உபவிதிகள் இருத்தல் வேண்டும்?
5. "சனநாயக ஆட்சிமுறையிலே கூட்டுறவு சிறந்த பயிற்சியளிக்கின்றது." இதை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் II

சமுதாயத்திலே கூட்டுறவு வகிக்கும் இடம்

மட்டான கல்வியறிவும் செல்வமுமுடையவர்களுக்கு தேவைப்படக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் எவையென்றும் அவை எக்காரணங்கொண்டு வெற்றியடைந்தோ தோல்வி யுற்றோ வருகின்றனவென்றும் இங்கு சுருக்கமாய்க்கூறுவோம்.

சிலவகைக் கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றின் வெற்றிக்கும் தோல்விக்குமுரிய காரணங்களும்

கடனுதவி

அநேக நாடுகளில் குடியானவர்கள் கடனில் அமிழ்ந்தி யிருக்கின்றனர். இதற்குக் காரணங்கள் பல. சேமிக்கும் பழக்க மின்மை, சேமிப்பைப் போட்டுவைக்க நாணயமும் வசதியுமான இடமின்மை, தம்வருவாய்க்கேற்ற செலவு செய்யத் திட்டமி டும் ஆற்றலில்லாமை, பயன் தரும் கடன்களெவை, பயன் தரா தன எவையென்றும், நீடிய தவணைக் கடன்களெவை குறுகிய தவணைக் கடன்களெவையென்றும் பேத முணரும் விவேகமின்மை, கடனுதவிக்கு ஏற்ற வழிவகைகளின்மை ஆதி யனவே இந்நிலைக்குரிய காரணங்களாகும்.

பயிர்த் தொழில் செய்பவனுக்கு நிலந்திருத்தவும் விதை வாங்கவும் உழவுச் செலவு முதலியனவற்றுக்கும் பெருந் தொகையான பணம் கடனாகத் தேவைப்படுகின்றது. அத்துடன் அறுவடைவரையும் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு. இவைகளுக்கிடையில், மழையின்மை, பெருவெள்ளம், பயிரழிக்கும் நாசகிருமிகள் முதலிய ஆபத்துகளுக்குப் பயந்தே வாழவேண்டியவனுயிருக்கின்றான். பயிர்செய்யப் போதிய பண மில்லாதவனுயிருப்பதால் ஊர் வியாபாரியே அவனுக்குத் தஞ் சம். அவனிடமேதான் பணஉதவி நாடி அவன் செல்கின்றான். தருணம் பார்த்திருக்கும் வியாபாரியோ-அறுவடையின்போது, தான் குறிப்பிடும் அளவு தானியத்தை தான்சொல்லும் விலைக் குக் கொடுப்பதாகக் கமக்காரன் ஒப்புக்கொண்டபின்னரே-கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க உடன்படுவான். இவ்வாறு விதிக்கப்படும் விலையோ-சந்தையில் பெறக்கூடிய விலையிலும் மிகக் குறைந்ததாகவே இருக்கும். அறுவடையின்போது, வரும் ஊதியத்தை வீணில் கரைத்தலாலோ, அதைக்கொண்டு இன்னும் நிலம் வாங்கு வதன் பயனுகவோ, குடியானவன் வாங்கிய கடனை இறுக்க முடி யாதவனுகின்றுன். சிலவேளைகளில் கடுங்கோடை காரணமா கவோ, கடும்வெள்ளம் காரணமாகவோ பயிர் அழிவதும் உண்டு. அவ்வாறு நிகழும்போதும் கடனிறுக்க வகையற்றுத் திகைப்பவன், அடுத்த போகத்தில் பயிர் செய்வதற்கும் கடன் படுவதால் மீளவழியின்றிக் கடனுக்குப் பலியாகின்றுன்.

நிலம் பலருக்குச் சொந்தமானதாயின் கஷ்டப்பட்டுத் தொடர்ந்து சேமித்தலே ஈடேறுவதற்குரிய ஒரே மார்க்கம். தனிப்பட்டவருக்குச் சொந்தமான நிலமாயிருக்குமாயின், வரை யறுக்கப்படாத உத்தரவாதமுள்ள கடனுதவிச் சங்கங்களை ஸ்தா பித்து, அவைமூலம் வேண்டிய சலுகைகளைப் பெறலாம். ஒரு சிறு வட்டாரத்தில் வசிக்கும் நாணயமுள்ள அங்கத்தவர், தங் கள் வரையறுக்கப்படாத கடனுத்தரவாதத்தை ஒருமித்து ஈடாக வைத்து, அங்கத்தவரல்லா தோரிடமிருந்து கடனெடுக்கின்றனர். சங்கம் இக்கடனைக்கொண்டு அங்கத்தவரின் நியாயமான தேவை களைப் பூர்த்திசெய்தும், அறுவடையின்போது அவர்களிடமிருந்து வரவேண்டிய கடனை அறவிட்டும் வருகின்றது.

இவ்வித சங்கங்களின் வீழ்ச்சிக்கு ஏதுவாயிருக்கக்கூடிய காரணங்களாவன :-

1. சங்கத்தினிடமிருந்து பெற்ற கடனுடன் நில்லாது அங்கத் தவன் அவ்வூரிலுள்ள வியாபாரியிடமிருந்தும் கடன்வாங்கி அறு வடையின்போது, அறு வட்டிபெறும் வியாபாரியின் கடனையே முதலில் தீர்த்தல்;

2. பயன் தராவிடினும் அவசியமான நோக்கங்களுக்கு, உதா ரணமாக-சுகயீனம், சாவீடு, விதைப்புக்கும் அறுவடைக்கும் இடைப்பட்ட காலத்தில் வேண்டிய ஜீவனம் முதலியவற்றுக் குச் சங்கங் கடன் கொடுக்க மறுத்தல்;

3. நிர்வாக சபையினர் தம் பொறுப்பை மறந்து, பெருந் தொகையான பணத்தைத் தாமே கடனுக எடுத்துத் திரும்பிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டத்தவறல்-இதனுல் கடன் இறுக்கத்தவறும் மற்றவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க முடியாமை;

4. ஒரு அறுவடையின்போது செல்லக் கட்டக்கூடிய தொகைக்கு மேற்படப் பழைய கடனைத் தீர்ப்பதற்குக் கடன் கொடுத்தல்;

5. பழைய கடன் தீர்க்கப்படாதபோதும், அடுத்த அறுவடையின்போது முழுக்கடனும் கட்டப்படும் என்று எதிர்பார்த்து, புதுக்கடன் ஒன்று கொடுத்து, பழைய கடனைக் கட்டப்பட்டதாகப் பாவித்து, அத்தொகையையும் அதற்குரிய வட்டியையும் புதுக் கடன் தொகையுடன் சேர்த்து எழுதல்;

6. மற்ற அங்கத்தவர், தம்மிலும் அதிக செல்வாக்கும் கல்வியறிவுமுடைய ஒருவரிடம் சங்கத்தின் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் விட்டுவிட, அவர், ஒன்றில் அலுத்துப்போதல் அல்லது மிடைவருங்கால் சங்கத்தின் பணத்தைத் தம் சொந்தத் தேவைக்குத் துர்ப்பிரயோகஞ் செய்தல்.

7. நிர்வாக சபையும் பொதுக் கூட்டமும் போதிய கண்காணிப்புச் செய்யாமையால் காரியதரிசியோ தனுதிகாரியோ சங்கப் பணத்தை அபகரித்தல்.

வீழ்ச்சிக்கு ஏதுவாகிய இக்காரணங்களெல்லாம் பிழையான அமைப்பாலும் குறைவான கண்காணிப்பாலும் உண்டாவதனுல், சங்கத்தை முறையாய் அமைத்துப் போதியளவு கண்காணித்து வருவதனுல் இவற்றை நீக்கலாம்.

விற்பனை

குடியானவர்கள், பொதுவாக மற்றவர்களுடன் சேர்ந்து தம் பொருளை விற்கவேண்டிய வழிவகைகளை வகுக்க வகையற்றவர்களாகவும், அவசியமாகப் பணம் தேவைப்படுகிறவர்களாகவும் இருப்பார்கள். அறுவடை எப்போ வரும் என்று காத்திருந்து, வேளை பார்த்து வந்துகூடும் அயல்ப்பட்டின வியாபாரிகள், தனித்து நிற்கும் உற்பத்தியாளரிடம் தரப்படுத்தாத விளைபொருளை அரு விலைக்கு அடித்துக்கொண்டு போகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியாளர், விளைபொருள் விற்பனைச் சங்கமொன்றை ஸ்தாபித்து, எல்லோருடைய விளைபொருட்களையும் ஒன்று சேர்த்து, தரப்படுத்தி, பொருள் தேடிவரும் வியாபாரிகளிடம் பேரம்பேசி, அவர்கள் விலை நியாயமற்றது என்று காணும்போது வேறு வியாபாரிகளுடன் தங்களுக்குச் சாதகமான விலைக்கு விற்க ஒழுங்கு செய்தும், வியாபார ஒப்பந்தங்கள் செய்தும் பெரும் பயனடையலாம். கூட்டுறவுச் சங்கத்துக்குக் கொண்டுவரப் பட்ட பொருள் தனிப்பட்ட தன்மையை இழக்கின்றது. அது தரப் படுத்தப்பட்டு, ஒவ்வொரு தரத்திலும் எவ்வளவு என்பது மட் டுமே கொணர்ந்த அங்கத்தவருக்குக் குறித்துக் கொடுக்கப்படு கின்றது. தனது கிட்டங்கியில் உள்ள பொருளைப் பிணையாக வைத் துச் சங்கம் கடன் பெற்று, பொருள் கொடுத்த அங்கத்தவருக்கு அப்பொருளின் மதிப்பிட்ட விலையின் 60% வீதத்துக்கு மேற்ப டாது முற்பணம் கொடுக்கின்றது. பொருள் முழுதும் விற்பனை யானபின், செலவு, கழிவு முதலியன நீங்க, மீதியான பணம், கணக்கிடப்பட்டு, பொருள் கொடுத்தவருக்குக் கொடுக்கப் படுகின்றது.

இவ்வகைச் சங்கம் வெற்றியெய்தாதற்குரிய காரணங்களிற் சில பின்வருமாறு :-

1. "கடனுதவி" என்னுந் தலையங்கத்தின் கீழ் விவரிக்கப் பட்டபடி, பல அங்கத்தவர் கடன் பட்டிருந்தும், விளைபொருட் சங்க உத்தியோகத்தருக்கு அதைத் தாமாக வெளியிடாமல் மறைத்து வைத்ததாலும், அவர்கள் அதைக் கண்டுபிடிக்கத் தவறியதாலும் அன்னார் விரும்பியும், தம்பொருளை விளைபொ ருட் சங்கத்துக்குக்கொண்டுவர முடியாமை.

2. வியாபாரிகளுடன் பொருள் கொடுக்கத் தான்செய்த ஒப் பந்தத்தையொட்டி, இன்னின்ன வேளைகளில் விளைபொருள் கொண்டுவந்து கொடுக்கவேண்டும் என்று சங்கம் அங்கத்தவ ருக்கு அறிவித்திருந்தும், ஞாபகமறதி காரணமாகவோ காலந் தவறுதலாலோ, குறிப்பிட்ட இடத்திலும் நேரத்திலும் அவர்கள் பொருளைக் கொண்டுவரத் தவறுகின்றனர். ஒரு புதுச் சங்கம் தனது முதல் ஒப்பந்தத்தையே சுமித்திரையாக நிறைவேற்றத் தவறினால் வேறு ஒப்பந்தங்களைப்பெற முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அங்கத்தவரிற் சிலர் அரைமனதுடையவராய், தம் விளை பொருளின் ஒரு பகுதியை வியாபாரிகளுக்கு விற்றுவிட்டு எஞ்சியதையே சங்கத்துக்குக் கொடுக்கின்றனர்.

இங்கும் சங்கத்தை உருவாக்கும்பொழுது போதிய அக்கறை எடாமையும், நிர்வாக சபையினர் மட்டுமன்றி அங்கத்தவர் அனைவரும் சங்கத்தில் பற்று வைத்தாலன்றி சங்கம் வெற்றியீட்ட முடியாதென்பதை உணராமையுமே தோல்விக்குக் காரணங்களாகும்.

பண்டகசாலைகள்

சில்லறை வியாபாரி, சமூகத்துக்கு உதவியான சேவை புரியும் வியாபாரிமாரில் ஒருவன் என்பது மறுக்கமுடியாத உண்மை. அவன் தனது முதலைச் செலவிட்டு, கடை வாடகைக் கொடுத்து, அதற்குவேண்டிய தளபாடங்களையும் கணக்குப் புத்தகங்களையும் வாங்குகின்றான். கடைக்கு வேண்டிய வேலையாட்களையமர்த்தி, பண்டங்களைச் சேகரித்து, பாவிப்பாளருக்கு வேண்டிய விதத்திலும் வசதியான இடத்திலும் அவற்றை வைத்திருக்கின்றான். இவ்வித செலவுக்கும் அவன் படும் பிரயாசைக்கும் நியாயமான ஊதியத்தை அவன் பெறவேண்டியவனாகின்றான். அவன் அடையும் இலாபம் இச் செலவுகளுக்கும் நியாயமான ஊதியத்துக்குமாயின் குறைகூற இடமில்லை.

ஆனால் சன நெருக்கடியில்லாத புறப்போக்கான தூரக் கிராமங்களில் இவ்வாறு நடப்பதில்லை. அவ்விடங்களில் கேட்பார் யாருமில்லாமையால் கடைக்காரனின் இலாபம் ஒற்றைக்கு இரட்டியாகவே இருக்கும். நிறுவையில் கள்ளஞ்செய்தும், இழக்கமான பொருட்களைக் கலந்தும் கொள்ளையடிப்பான். இவற்றை நாம் கவனமாய் ஆராயவேண்டும்.

வியாபாரஞ்செய்வதென்றால், வாங்கிய பொருட்களை இரட்டிப்பு விலைக்கு விற்றுக் கொள்ளை இலாபமீட்டும் சுலபமான காரியமேயென்று பாமரமக்கள் தப்பெண்ணங்கொண்டிருக்கின்றார்கள். வியாபாரத்திலே, கொள்வனவு செய்தலில் எவ்வளவு விவேகமவசியமென்றும், ஒரு வியாபார ஸ்தலத்தின் நடைமுறைச் செலவுகள் எவ்வளவென்றும், மொத்தமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவுசெய்து சில்லறையில் விற்கும்பொழுது எவ்வளவு பொருட்கழிவு போகிறதென்றும் அவர்கள் உணர்வதில்லை. இவ்வித சிரமங்கள் செலவுகளுக்கு வேண்டிய அளவுக்கு மேலதிகமாக இலாபம் வைத்தே வியாபாரம் நடக்கிறதென்பது நாமறிந்த விடயம். நிலைமை இவ்வாறிருப்பின், விடாமுயற்சியுடன் ஒத்துழைக்க விருப்பும் ஆர்வமுங்கொண்ட மக்கள் இடைப்பார்களேயானல், கூட்டுறவுச் சங்கத்துக்கு இடமுண்டு.

ஓரிடத்திலுள்ள மக்கள் அங்குள்ள வியாபாரிகளிடம் அநியாய விலைகொடுத்து பொருள் கொள்ளவேண்டியிருக்கிறதேயென்று தம்மை நொந்து பேசிக்கொண்டிருப்பதுடன் திருப்தியடையாமல், தமக்குவேண்டிய பொருட்களைத் தாமே பெற்றுப் பங்கிடு செய்வதற்குப் பண்டகசாலைகளை ஸ்தாபிக்கவேண்டும். இவ்வித பண்டகசாலைக்கு அவசியமான தளபாடங்களையும், விநியோகஞ்செய்ய விரும்பும் பொருட்களை வாங்குவதற்கு வேண்டிய பணத்தையும் அவர்கள் திரட்டவேண்டும். அங்கத்தினர் செய்யும் கொள்வனவு குறித்துவைக்கப்பட்டு, வசதியைப்பொறுத்துக் குறிக்கப்பட்ட தவணைகளில் கணக்கு முடிக்கப்படவேண்டும். போதிய ஒரு தொகையைச் சேமிப்பு நிதியாக ஒதுக்கிவைத்து, எஞ்சிய இலாபத்தை அங்கத்தினர் தமக்குள்ளே, தாம் சங்கத்தில் செலவுசெய்த தொகை ரீதிப்படி பங்கிட்டுக்கொள்ளலாம்.

வியாபாரிக்கு ஏற்படுஞ் செலவுகள் இவ்வித பண்டகசாலைக்கும் உண்டாதலால், பொதுவாக, மற்றக் கடைகளில் விற்கப்படும் விலைக்கே சங்கக்கடையிலும் விற்கவேண்டும். வியாபாரி இலாபம் முழுவதையும் தனதாக்கிக்கொள்ளுவான். ஆனல் சங்கக்கடையிலோ, இவ்விலாபம் அங்கத்தினரிடையே பங்கிடப்படுகின்றது. ஒரு கூட்டுறவுப் பண்டசாலையின் அம்சங்கள், நிர்வாக சபையினருக்கு மட்டுமல்ல, எல்லா அங்கத்தவருக்குந் தெரிந்திருக்கவேண்டும். மட்டான அறிவுள்ளவர்மீதும் ஏமாந்து போகக் கூடியவர்மீதும் முக்கிய கவனஞ்செலுத்துவதவசியம். அவர்கள் சங்கத்தில் கொண்டிருக்கும் பற்று பாதிக்கப்படாமல் பாதுகாத்துக்கொள்ளப்படவேண்டும். பெண்களும் இவ்விடயத்தில் முக்கிய பங்கெடுக்கவேண்டியவர்கள். சில சமுதாயங்கள் அவர்களைப் பொது அலுவல்களில் கலந்துகொள்ள அனுமதிப்பதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறிடங்களில் அவர்கள் கூட்டங்களுக்கு வரினும், பெண்களுக்கே உரிமையான அடக்கமும் மௌனமும் சாதித்துச், செயலற்றிருக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இவ்வித குறைகளைப்போக்க வழிதேடவேண்டும்.

உரிய முறையில் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுறவுப் பண்டகசாலை பற்பல நன்மைகளை அடையக்கூடியதாயிருக்கின்றது. அவை யாவன :-

1. பற்றுள்ள வாடிக்கைக்காரரை நிரந்தரமாகப் பெறல்,

2. கடனுக்குப் பொருள் விற்பது முற்றுகத் தவிர்க்கப்பட்டு, ரொக்கத்துக்கு மட்டுமே பொருள்வாங்க அங்கத்தவர் பழகிக்கொள்தல்;

3. சங்கம் தமக்கும் சொந்தமானது என்ற அபிமானங்கொண்ட அங்கத்தினர் கௌரவ தொண்டுபுரிந்து, வேண்டிய மேற்பார்வை செய்துவருவது அரிய வியாபார இலட்சணமாயிருக்கின்றது.

இப்படிப்பட்ட சங்கம் பிரதிகூலமடைவதற்குக் காரணங்கள் வருமாறு :-

1. எஞ்சிய இலாபமெல்லாம் ஈற்றில் தமக்கே சொந்தமென்பதை மறந்து, வியாபாரியின் விலை சிறிது குறைந்ததாயிருப்பின் அற்ப ஆசைக்காக அவனிடம் செல்லுஞ் சில அங்கத்தவரின் பற்றற்ற தன்மை;

2. விவேகமற்ற பொருள் கொள்வனவும் அதனால் ஏற்படும் பொருட் சேதமும் நஷ்டவிற்பனையும்;

3. புதுமை மங்கியதும், தக்க கண்காணிப்புச் செய்ய வேண்டிய தம் கடமையை அங்கத்தினர் கைவிடுதல்.

சங்கத்தை ஸ்தாபிக்கும் காலத்தில் போதியளவு பயிற்சியளிப்பதாலும், கடமைகளையும் பிரமாணங்களையும் இடித்துச் சொல்லி அங்கத்தவர் மனதில் பதியச்செய்வதாலும், பற்றில்லாத அங்கத்தவர்மீது காரசாரமான நடவடிக்கை எடுப்பதாலும் வீழ்ச்சிக்கு ஏதுவாயிருக்கும் குறைகளைத் தவிர்க்கலாம். முதலாம் வருடமுடிவில், இலாபத்தைப் பங்கிடுசெய்யுங்காலம் வரை அங்கத்தவர் ஆரம்பத்தில் காட்டிய உற்சாகத்தைத் தொடர்ந்து காட்டி வருவார்களாயின், சங்கம் உய்வது நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கனம்

மாதாந்தச் சம்பளம் பெறுபவன் தான் பெறவிரும்பும் கடனுக்குக் கொடுக்கக்கூடிய பிணை தனது சம்பளமும் உத்தியோக பெலமுமேயாகும். இவ்வித பிணைகளுக்கு கடனுலகத்திலே மதிப்புக்குறைவு, உத்தியோகம் அற்றுப்போகக்கூடியது. என்னேரமும் சுக தேகியாயிருப்பதும் சாத்தியமில்லை. இவ்வித உத்தியோகத்தர் வேலை மாற்றங் காரணமாக இடம்பெறவேண்டிய நிர்ப்பந்தங்களும் ஏற்படுவது சகஜம். ஆதலால் மாதச் சம்பளத்தையே நம்பியிருப்பவன் கடனுக்குக் கொடுக்கக்கூடிய பொறுப்பு மதிப்புக்குறைவானது. இவ்வித குறைகளுக்கு ஈடு செய்வதுபோன்று அவன் கொடுக்கவேண்டிய வட்டி இரட்டித்ததாகவே இருக்கும்.

வருவாய்க்குள் சீவிப்பதும், எதிர்பாராத அவசியங்களேற்பட்டாலொழியக் கடன்படாதிருப்பதும் இலட்சியக்குறிக்கோளாயிருக்கலாம். ஆனால் நடைமுறையில் இது சாத்தியமில்லையென்பது ஓர் கசப்பான உண்மை. வாழ்க்கையில், வருவாய்க்குமேல் செலவு செய்யத் தூண்டுஞ் சந்தர்ப்பங்களும் சோதனைகளும் மலிந்து கிடக்கின்றன. மாதாந்தம், சம்பளம் பெற்றதும், ஐந்தோ பத்தோ ரூபாயைச் சேமிப்பு வங்கியில் போட்டுவைக்க வேண்டுமென்று தீர்மானிக்கின்றோம். ஆனால் இவ்வாறு தொடர்ந்து செய்துவர மனவுறுதி தேவைப்படுகின்றது. உடை நலத்திலோ, விருந்தோம்பலிலோ, சடங்குச் செலவுகளிலோ-தனக்குச் சமானமானவர்களுக்கு நிகராக வாழவிரும்புவது மனித இயல்பு. இதனால் அடிக்கடி கடன்படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. இவ்வித அவஸ்தைப்படும் மக்களுக்கு உதவியளிக்க வல்ல கூட்டுறவுச் சங்கமொன்றுண்டு. இவ்வித சங்க அங்கத்தவர் ஒவ்வொருவரும் (ஆணோ பெண்ணோ) தமது மாதாந்தச் சம்பளத்தில் தம் இயல்புக்கேற்ற ஒரு குறிப்பிட்ட தொகையைச் சங்கத்தில் போட்டுவைக்க ஒப்புக்கொள்ளவேண்டும். அவ்வித விருப்பைச் சம்பள அதிகாரிக்கு அறிவித்தால், அவர், மாதாமாதம் அவர்கள் சம்பளத்திலிருந்து அத்தொகையைக் கழித்துச் சங்கத்திற்குக்கொடுப்பார். இவ்வித ஏற்பாடு செய்வது சம்பள அதிகாரிக்குச் சிறிது சிரமமாயிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனுல், கடன் இக்கட்டிலிருந்து விடுபட்ட வேலையாட்களை வைத் திருப்பதினுல் ஏற்படும் பாக்கியம் இச் சிரமத்திலும் மேலானது. இவ்வாறு மாதாமாதம் கழிக்கப்படும் தொகை சங்கத்தில் பெருகி வளர்ந்து, அங்கத்தவர் இளைப்பாறுங்காலத்து அவருக் குக் கைகொடுத்துதவப் பயன்படுகின்றது. இடையிடையே அவ சர மேற்படுங்கால், ஒரு அங்கத்தவன், தனது சேமிப்பின் ஒரு பாகத்தைக் கடனுக எடுக்க உபவிதிகள் அனுமதித்த போதிலும், இவ்வித ஒழுங்கு விதிவிலக்காயிருத்தலே உசிதம்.

கிராமத்திலுள்ள கூட்டுறவுக் கடனுதவிச் சங்க அங்கத் தினர் ஒருவரையொருவர் நன்கறிந்தவராயிருப்பர். ஆனுல் சிக் கனச் சங்கத்திலோ இவ்வித பரஸ்பர உறவு இருக்க முடியாது. அதனுல் மேற்பார்வை செய்து சங்கத்தை நிர்வகித்து வருதல் மிகவும் சிரமமான காரியமாகும். இவ்வித சங்கங்களின் அங்கத் தவர் பெரும்பாலும் ஓரிடத்திலுள்ள அரசாங்க ஊழியராகவோ தொழிற்ஸ்தாபன ஊழியராகவோ இருப்பார்கள். ஆதலால், குறிக்கப்பட்ட பதவியில் இருக்கும்வரை அங்கத்தவர் அங்கத் துவத்தினின்றும் விலகலாகாது என்று உபவிதிகளில் குறிப் பிடுவது விரும்பத்தக்கது. பொய்யான காரணங்காட்டிக் கோ ரப்பட்ட கடன் நிராகரிக்கப்படுவதைப் பொறுக்காது, அநியாய மாகக் கோபங் கொண்டு அங்கத்துவத்தினின்று தாம் விலகு வதுடன் மற்றவர்களையும் விலக்கத் தூண்டும் போலி அங்கத் தவருக்கு இவ்வித நிபந்தனை தடையாய் இருப்பதுடன், பெரும் பான்மையோருக்குச் சேவை செய்யக் கூடிய ஸ்தாபனத்தைக் குரோதங்கொண்ட ஓரிருவர் அழிக்காமலும் அது பாதுகாக்கும்.

ஒவ்வொரு அங்கத்தவனும் சேமித்து வைத்திருக்கும் பணத்தின் ஒரு பகுதியையே கடனுகக் கொடுத்துவருவானுல் இவ்வித சங்கத்துக்கு எவ்வித ஆபத்தும் நேராது. கட்டாய மாக ஒதுக்கு நிதியைத்திரட்ட வேண்டுமென்ற விதி இவ்வகைச் சங்கங்களைப் பொறுத்த அளவில் அவசியமில்லை. நிர்வாகசபை எவ்வளவுக் கெவ்வளவு ஊக்கமெடுத்துப் பிரமாணிக்கமாகக் கடமையாற்றுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நன்மைகளைச் சங்க அங்கத்தவர் பெறுவர். சங்கத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் போதிய மேற்பார்வை இல்லாமையேயாகும். ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிய மேற்பார்வையிருப்பின் சங்க உத்தியோகத்தர் நேர்மை தவறி நடக்க இடமிருக்காது.

கைத்தொழில்

அநேக நாடுகளில் உள்ள குடிசைத் தொழிலாளரினதும், நெசவாளர், தச்சர், உலோகப்பொருள் வேலையாளர், சப்பாத்து தோல் வேலை செய்பவர் போன்ற கைத்தொழிலாளரினதும் எண்ணிக்கை குறைவாயிருந்தபொழுதிலும், அவர்கள் பொருளாதார வர்க்கத்திலே பிரதானமான இடம் வகிக்கின்றனர். அநேகமாக இத்தொழிலாளர், தமது சுயாதீனத்தை அழிக்கவும், முன்னின்று செய்யும் ஆற்றலை வாட்டவும், தொழிலிலே அவர்களுக்குள்ள பெருமையைக் குறைக்கவுங் கூடியசந்தர்ப்பங்களுக்கு அடங்கியே தொழில் செய்கின்றனர். இவ்வித நிலைமைக்கு ஏதுவாயுள்ள சமூக, பொருளாதார சந்தர்ப்பங்களை நாம் ஊன்றி அவதானிக்கவேண்டும். தொழிலாளருக்கு வேண்டிய நூல், மரம், பித்தளை, தோல் முதலிய மூலப்பொருட்களை மொத்த விலைக்கு வாங்கி வழங்குவதற்கும், அவர்கள் தொழிலியற்றும் முறையையும், பொருளின் தராதரத்தையும் அபிவிருத்தி செய்வதற்கும், செய் பொருட்களை விற்பதற்கும், ஒரு கூட்டுறவு ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதே அன்னாரின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு வழியென்று அனுபவ வாயிலாக அறிகின்றோம்.

தாமே விரும்பிப் பரஸ்பர முறையில் செயலாற்றும் முறையை அங்கத்தவரிடையே அபிவிருத்தி செய்வதன் மூலம் இவ்வித சங்கம் அவர்களுக்குள்ள சுயாதீனத்தைப் பாதுகாத்தும், இழந்த சுதந்திரத்தைத் திரும்பப் பெற்றுக்கொடுத்தும் பேருதவி புரிகின்றது. ஒரு சங்கத்தை அமைக்குமுன், அது உற்பத்தி செய்யவிருக்கும் பொருட்களுக்கு உண்மையான பொருளாதாரத் தேவையுண்டாவென்றும், அவ்வட்டாரத்திலே இயந்திர சாதனங்களினுதவியால் அப்பொருள் பெருந்தொகையில் மலிவாகச் செய்யப்படுமாயின் சங்கத்தின் முயற்சி வீணாகி விடாதா வென்றும் தீர்க்கமாக ஆராயவேண்டும்.

அநேக நாடுகளில் இவ்வித தொழிலுக்கு மானமுண்டு. அதேபோன்று இங்குமிருப்பின் கைத்தொழில்களையும் குடிசைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்குக் கூட்டுறவு முறையில் சங்கங்களமைத்து, அவற்றின் உதவியால் தேவையான மூலப்பொருட்களை மொத்தவிகிதத்தில் இலாபகரமாகப் பெற்றும், அவற்றைப் பண்டங்களாக மாற்றி விற்பனை செய்தும் வரலாம். சிலவேளைகளில் இவ்வித முயற்சி வீழ்ச்சியடையக் கூடும். ஆனால் அவ்வாறு நேருமெனக் காணும் போதெல்லாம், அதற்கு ஏதுவாயுள்ள காரணங்களைக் கண்டுபிடித்து, அவற்றை, மேலே கூறியிருக்கும் பிரகாரம் நிவர்த்தி செய்யவழி வகைகள் தேடவேண்டும்.

கூட்டுறவினால் சமுதாயத்திலேற்படக் கூடிய தன்மைகள்

ஆராய்ந்து பார்த்தால், அபிவிருத்தி குறைவான நாடுகளிலுள்ள மக்களெல்லோரும், பொதுவாக. தம்முன்னோரைப் போலவே, ஏதோ ஒரு சில கஷ்டங்களையும் வசதிக்குறைவுகளையுஞ் சகித்துக்கொண்டு வந்திருக்கின்றனர் என்பது புலனாகும். அவர்கள், தம் நிலையைச்சீர்படுத்தக் கூடிய சாதனங்கள் இல்லாத பட்சத்து, இவ்வித மிடியிலிருந்து விடுதலை பெறலாமென்று காத்திருக்கவில்லை. தனித்து முயல்வதால் அவர்கள் எதையும் சாதிக்கப்போவதில்லை. கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள தம் தோழரோடு சேர்ந்தும், ஆற்றலும் ஆர்வமுங் கொண்டவர் ஆலோசனையை அனுசரித்தும் அவர்கள் தங்கள் நிலையை அபிவிருத்தி செய்யலாம். சங்கத்தை ஸ்தாபிக்க முயல்வோரை அவநம்பிக்கையுடனும் சமுசயத்துடனும் நோக்குவது இயல்பாகிவிட்டது. விவேகமும் கல்வி யறிவும் படைத்தவர்கள் பாமரரையும் ஏழைகளையும் வஞ்சித்துத் தஞ் சுயநலத்தைப்பெருக்க அவர்களைக் கருவிகளாக உபயோகிக்கிறார்கள் என்ற எண்ணம் பலருக்குண்டு. ஆகவே தூய கருத்துடன் பணிசெய்ய வருவோரையும் சமுசயத்துடன் நோக்குவதற்கு நியாயமுண்டு என்பதை நாம் மனதில் பதித்தல்வேண்டும். இவ்வித தடைகளைச் சமாளித்து, நம்பிக்கையுடனும் உறுதியுடனும் பாடுபட்டு உழைத்தால், சங்கத்தை நன்முறையில் ஸ்தாபிக்கலாம். மக்களின் சமுசயத்தை அகற்றி அவர்கள் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டால், சங்கம் உருவாகா விடினும் இவ்வஸ்திவாரமே பெருஞ்சேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தபடியாக, சங்கத்தை ஸ்தாபிக்கத் தலைப்படவேண்டும். ஆரம்பவேலை நன்றுயிருப்பின் சங்கம் வெற்றிகரமாக உருவாகும். தனித்தமுறையில் பலங்குன்றியவர்களாகவும், வறுமையும் அறியாமையும் பூண்டவர்களாகவும் இருந்தமக்கள், கூட்டுறவு முறையில் ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதன் மூலம் கணிக்கத்தக்க நன்மைகளை யடைதல் சாமானிய காரியமல்ல. முன்னொரு போதும் அடைந்திராத செயலாற்றலும் பெருமையும் தன்னம்பிக்கையும் அங்கத்தவருக்கு உண்டாவதுடன், இவர்களுடைய வெற்றியைப் பார்த்து மெச்சிய அயலார், விசேட செல்வமோ கல்வியறிவோ ஆற்றலோ இல்லாதவர் பெற்றதைத் தாமும் ஏன் பெறக்கூடாது என்று தமக்குள் சிந்திக்க ஆரம்பிக்கின்றனர்.

நல்லமுறையில் நடந்து வருங் கூட்டுறவுச் சங்கங்கள் சமுதாயத்திலுள்ள அவநம்பிக்கையை அகற்றி, மக்களின் தன்னம்பிக்கையையும் சுய ஆற்றலையும் பெருக்கி, காலந் தாழ்த்தாமையின் முக்கியத்தை உணர்த்திவருகின்றன. மக்கள் தம் கருமங்களை முறையாக நடாத்தி, தவறுது கணக்கு வழக்குகளை வைத்து, கிரமமாக அவற்றைப் பரிசோதனை செய்து வருகின்றனர். இவையெல்லாம் நாட்டின் பெலத்துக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்யும் பணிகளாகும்.

கூட்டுறவின் சட்டமுறை

சட்டம்

கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றிய சட்டம் பொதுவாக மூன்று பிரிவுகளை யுடையதாக விருக்கும்.

முதலாவதாக: நாட்டிலே வழங்கிவரும் சட்டம். இதில் மூலாதார அம்சங்களும் அத்தியாவசியமான பொதுக் கொள்கைகளும் காணப்படும். இது சட்ட ரீதியாயிருக்கு மாதலால் திருத்தியமைக்கக்கூடியதாகவோ வசதிக்கு ஏற்றவாறு மாற்றக் கூடியதாகவோ இராது, ஆதலால் இவ்வித சட்டம் விபரங்களைத் தவிர்த்ததாயிருக்கவேண்டும். அவசியமெனக்காணும் போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவரமான விதிகளை வகுப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரத்தைக்கொடுக்கும் பிரிவு இதில் இடம் பெறவேண்டும்.

இரண்டாவதாக: மேற்கூறிய சட்டத்தின்கீழ் வகுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இன்னென்ன விடயங்கள் பற்றி உபவிதிகளை இயற்றலாம் அல்லது இயற்றவேண்டுமென்று இவ்விதிகள் குறிப்பிடவேண்டும்.

மூன்ருவதாக : ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் நடவடிக்கைகளை வகுத்து அது இயக்கவேண்டிய முறையை விதிக்கும் உப விதிகள்.

உப விதிகள் ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் முக்கிய ஆதாரமாகும். பதிவுக்கு அவை அவசியம். சங்கம் என்னென்ன செய்யலாம், அவற்றை எவ்விதஞ் செய்யலாம் என்று அங்கத்தவருக்கு விளங்கக்கூடிய முறையில் எடுத்துக்கூறவேண்டும். சாதாரண அங்கத்தவரால் இவ்வுபவிதிகளை ஆக்க முடியாமலிருக்கலாம், அதனல் பதிவு அதிகாரியவர்கள் மாதிரி உப விதிகளைச் சங்கத்துக்குக் கொடுத்து உதவ வேண்டும். அவற்றின் விபரங்களை அங்கத்தவர் ஆராய்ந்து முடிவுக்குவரலாம்.

அரசாங்கத்தின் கடமைகள்

கூட்டுறவுச் சட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டபின் அதைப் பரிபாலிக்க ஒரு உத்தியோகத்தரை அரசாங்கம் நியமனஞ் செய்யவேண்டும். இவ்வித உத்தியோகத்தர் உதவியாட்களுடன் தனது கடமைகளை நிறைவேற்றுவார். சங்கங்களைப் பதிவு செய்தலும், அவசியம் நேர்ந்தபோது அப்பதிவை ரத்துச்செய்தலும் அவரது சட்டபூர்வமான கடமையாகும். இதனுலேதான் பல நாடுகளில் இவ்வுத்தியோகத்தர் பதிவாளர் என்றழைக்கப்படுகின்ருர். அச்சங்கங்களின் கணக்குகளைத் தானே பரிசோதித்தும், தகுதியுடைய எண் பார்வையாளரைக்கொண்டு பரிசோதித்தும் வருவது இவர்கடமைகளுளொன்ருகும்.

கூடிய அபிவிருத்தியடைந்த நாடுகளில் இவரது கடமைகள் இவற்றுடன் முடியும். ஆனல், சங்கத்தில் அங்கத்தவராகச் சேரக்கூடியவர்கள் ஏழைகளாகவும், பாமரராகவும் வியாபார விடயங்களில் அனுபவமோ பயிற்சியோ இல்லாதவர்களாகவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ள நாடுகளில், கூட்டுறவு இயக்கத்தை முதன்முதலாக உதிக்கச் செய்யும் பொறுப்பையுமுடைய உத்தியோகத்தரின் கடமைகள் மேற்கூறியவற்றைவிட அதிகமாகவே இருக்கும்.

சங்கங்களுக்கு வேண்டிய ஆதரவு கொடுத்து, உற்சாகமூட்டி, வழிகாட்டி, அவைகளின் கருமங்களை முறையாக நடப்பித்து வரும் பொறுப்பு இவருடையதாகின்றது. அதே போன்ற மற்ற நாடுகளில் இவ்வித சங்கங்கள் புரிந்துவரும் தொண்டை ஆராய்ந்து, அவற்றின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் ஏதுவான காரணங்களை அவதானித்துக் கடமையாற்றி வருவதற்கு அதிக ஆற்றல் தேவை.

இவ்வுத்தியோகத்தர், சங்க அங்கத்தவர் செய்யவேண்டிய கடமைகளைத் தாம் செய்யாது அவர்களையே செய்யவிட்டு, அவர்களுக்கு வேண்டிய உதவியும் ஒத்தாசையும் புரியவேண்டும். போதிய கண்காணிப்பு இல்லாவிட்டால் அங்கத்தவர் உப விதிகளுக்கு அடங்காத கருமங்களில் தலையிட்டும், தம் சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களைச் செய்யமுயன்றும், முறைதப்பி நடந்தும் சங்கத்தைப் பாழாக்குவார்கள். அத்துடன், பிரமாணிக்கமில்லா நடத்தையாலும், கணக்குவழக்குகள் ஒழுங்காக எழுதாமல் விட்டும், தெரிந்தோ தெரியாமலோ சங்கத்தின் பணத்தைத் தம் சொந்தப் பாவிப்புக்குத் துர்ப்பிரயோகஞ் செய்தும் வருவார்கள்.

குறைவான மேற்பார்வை எவ்வாறு சங்கத்தைப் பாதிக்குமோ அதேபோன்று மிதமிஞ்சிய உத்தியோகக் குறிக்கிடும் தீமை விளைவிக்கும். அனுவசியமாகச் சங்கத்தின் நியாயமான விடயங்களில் தலையிடுவதனால் அங்கத்தவர் ஆர்வமிழந்து, சங்கத்தை நடத்தும் முழுப் பொறுப்பும் அரசாங்கத்தாருடையதே என்று எண்ணுவர். இவ்வித மனப்பான்மை கூட்டுறவின் நோக்கத்துக்கு முழுதும் மாறானது. மக்கள் தமது சங்கத்தின் கருமங்களைத் தாமேசெய்து, அதனாலேற்படும் பலா பலன்களை நன்கு உணரச்செய்வதே இவ்வியக்கத்தை வளர்க்க முற்பட்ட அரசாங்கத்தின் கருத்தாயிருக்கவேண்டும். ஆரம்பத்தில் சங்கங்களை ஸ்தாபித்தலில் அதிக காலஞ் செலவாகவேண்டியிருப்பினும், அவை தம் நிலையை நன்றாக ஸ்திரப்படுத்தப் போதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவகாசங் கொடுத்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக அமையச்செய்தலே விவேகமாகும்.

ஆரம்பத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வேண்டிய பண உதவியை நேரடியாகப் புரிந்து அவற்றை ஆதரிக்கவேண்டியது அரசாங்கத்தின் கடமையாயிருக்கலாம். ஆனால் சங்கங்கள் தமக்குவேண்டிய நிதியைத் தாமே சேகரிக்க வேண்டுமென்பதை அவர்களுக்கு அறிவுறுத்தி, அவர்கள் அவ்வாறு செய்வதற்கு வேண்டிய மார்க்கத்தைக் காண்பித்துங் கண்காணித்தும் வரவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சங்கம் தான் பின்னுள் அறவிட எண்ணும் வட்டி விகிதத்தையே அரசாங்கமும் அதனிடமிருந்து பெறவேண்டுமேயொழிய, தருமம் போலோ அல்லது பொருள் விருத்திக்குப் பாதகமாகக்கூடிய மிகமிகக் குறைந்த விகிதத்துக்கோ கொடுக்கக்கூடாது. வட்டியின் விகிதம் அதிகமெனப்படும்பொழுது அதில் ஒரு பகுதியை ஒதுக்கிவைத்து, கூட்டுறவுக் கல்வி வளர்ச்சிக்கோ மேற்பார்வைக்கோ அல்லது இரண்டுக்குமோ அதைச் செலவிடலாம்.

தமக்குவேண்டிய ஏதோ ஒரு விதச் சேவையைத் தாமே செய்யக்கருதி மக்கள் ஒன்றுசேர்தலையே கூட்டுறவு என்றழைக்கின்றோம். அவ்வாறு செய்கையில், சாதாரண வியாபார விவேகத்துடன் அவர்கள் கொள்வனவுக்கும் விற்பனைக்குமிடையிலோ, கடன் எடுப்பதற்கும் கடன் கொடுப்பதற்குமிடையிலுள்ள வட்டி விகிதங்களுக்குமிடையிலோ ஓரளவு மிச்சத்தைச் சேகரித்து வருகின்றனர். இந்த இலாபத்தைக்கொண்டு, அங்கத்தவர் தம் சேமத்துக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் நிதியைப் பெருக்கியும், பண்டகசாலைகளிலாயின், கொள்வனவுக்கு ஏற்ற விகிதத்தில் இலாபப் பங்கிடு செய்தும், கடனுதவிச் சங்கத்தில் கடன் கொடுக்கும் வட்டி விகிதத்தைக் குறைத்தும், விளைபொருள் விற்பனைச் சங்கத்தில் மேலதிக கிரயமாகக் கொடுத்தும் வருகின்றனர்.

அநேக சங்கங்களில் நிதிப் பாதுகாப்புக்குப் போதிய வசதிகளிருப்பதில்லை. அவ்விடங்களில் அரசாங்கம் வேண்டிய வசதிகள் செய்து உதவலாம். சங்கங்களை ஸ்தாபித்து, மேற்பார்வைசெய்து, எண்பார்வைசெய்து வருவது அரசாங்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாதலால், இவ்வேலைகளைச் செய்யும் சமாசங்களுக்கு அரசாங்கம் நன்கொடையாகப் பணஉதவிபுரிந்து வரலாம். பதிவு செய்வதற்குரிய முத்திரை வரியிலிருந்தும், கடன் முறிப் பத்திரங்கள், வழக்குத்தொடர்தல் சம்பந்தமான கட்டணங்களிலிருந்தும் சங்கங்களை விலக்கி, அவைகளுக்கு உதவிசெய்யலாம். வழக்குத் தொடர்ந்து அதற்கு வீண் செலவு செய்யாமல் தடுப்பதற்கு மத்தியஸ்தத்தீர்ப்பு முறையைச் சட்ட முறையாக ஏற்படுத்தலாம்.

அதிக சலுகைகளாலும் வலிந்துதவுதலாலும் சங்கங்களின் ஆர்வத்துக்குப் பங்கம் விளைத்து அவற்றைப் பலவீனப்படுத்தாது அரசாங்கம் என்றும் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

அத்தியாயம் II

வினாக்கள்:

1. எத்தனை வகைக் கூட்டுறவுச் சங்கங்களை நீரறிவீர்? அவற்றைக் குறிப்பிடுக.
2. அவற்றிலெவை அதிக சித்தியடையக் கூடியவை? காரணம் கூறுக.
3. நீரறிந்த சங்கங்களில் நாலு இனத்தைக் குறிப்பிட்டு அவையொவ்வொன்றும் வெற்றி பெறுவதற்கு ஏதுவாயுள்ள காரணங்களைக் கூறுக.
4. நீர் வசிக்கும் சமுதாயத்திலே கூட்டுறவின் மூலம் எவ்வித அபிவிருத்தி யேற்படலாமென்று விபரிக்க.
5. அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி செய்து வரும் நாடுகளிலுள்ள கூட்டுறவுச் சட்டங்களின் 3 பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக. உமக்கு அதிகம் தெரிந்த அம்சம் எது?
6. பதிவாளர் அவசியமா? நன்றாக அபிவிருத்தியடைந்த சமுதாயத்திலுள்ள பதிவாளரின் கடமைகளுக்கும் அபிவிருத்தியடையாத சமுதாயத்திலுள்ள பதிவாளரின் கடமைகளுக்குமுள்ள வேற்றுமைகள் எவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் III

கூட்டுறவின் தேவையை நிர்ணயித்தல்

சேர்ந்துழைப்பதால் ஏற்படும் நன்மைகள்

மக்களின் பொருளாதார, சமூக நிலைகளிலேயே கூட்டுறவுச் செயலாற்றலின் அவசியந் தங்கியிருக்கின்றது. அநியாய வட்டி விகிதம், அதிக விலையாலும் கூடாத பொருட்களைச் சேர்ப்பதாலும் பொருள் வாங்குவோருக்கு வியாபாரி செய்யும் வஞ்சனை, விற்பனை வசதிகளை ஏற்படுத்த வகையற்ற வராயிருக்கும் உற்பத்தியாளர் நியாயமான கிரயத்தைப் பெறமுடியாமை, தொழிலாளருக்குத் தம் தொழிலிலுள்ள பெருமையையும், ஊக்கத்தையும் சுயாதீனத்தையும் நாசமாக்கும் சூழ்நிலை ஆதியன இத்தேவையைக் குறிக்கின்றன.

இவ்வித தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கடனுதவிச் சங்கங்கள், பண்டக சாலைகள், விற்பனைச் சங்கங்களைப் பற்றிமேலேகுறிப்பிட்டிருக்கின்றோம். அவற்றைஸ்தாபிக்கையில், அவற்றின் பொருளாதாரத் தன்மையை நன்காராய வேண்டும். சுயமுயற்சியாலும், பரஸ்பர உதவியின் பலத்தாலும், அவ்வித சங்கங்கள், தனிப்பட்டவரின் சுயாதீனத்தை நிலைநாட்டியும், இழந்து போனதை மீட்டுக்கொடுத்தும் உதவுகின்றன. அதே நேரத்தில், பரம்பரை பரம்பரையாகப் பெற்ற சாதுரியத்தை இழக்காமலிருக்கவும், அபிவிருத்தி செய்யவும் ஒத்தாசை புரிந்து, தொழிலாளருக்குத் தம் தொழிற் கருவிகளின் உரிமையையும் பொறுப்பையுந் திரும்பக் கொடுத்துதவுகின்றன. வாழ்க்கையின் சமுதாய—பொருளாதார அம்சங்களிலே கூட்டுறவு முயற்சியின் பயன் புலப்படுகின்றது. இது, இவ் விரு அம்சங்களிலுஞ் சனநாயக முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் பயனாக, சமூக உணர்ச்சி உற்சாகப்படுத்தப் பட்டும், அபிவிருத்தி செய்யப்பட்டும் வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி குன்றிய சமுதாயங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அங்கத்தவர் எளிதில் விளங்கி நடத்தக்கூடிய அமைப்புள்ளனவையாயிருக்க வேண்டும். உதாரணமாக: தம் பருத்தியைக் கூடிய விலைக்கு விற்றல் போன்ற ஒரே பொருளாதாரப் பொது நோக்கம் எல்லா அங்கத்தவரிடமும் இருப்பது விரும்பத்தக்கது.

பருத்தி, கோப்பி, அரிசி போன்ற பல்வேறு பொருட்களை விற்க விரும்புவோரும், கடன் தேவைப்படுவோரும், நல்ல பொருட்களை நியாயமான விலையில் வாங்க எத்தனிப்போரும் ஒரு சங்கத்தில் சேரமுடியாது.

அங்கத்தவரிடையே வேறுபட்ட பொருளாதார நோக்கங்கள் இருப்பதால், ஒவ்வொரு அங்கத்தவரும், அவ்வித சங்கத்தின் ஏதோ ஒரு அலுவலில், எவ்வித சம்பந்தமுமில்லாதவராகவே இருந்து வருவர். ஒரு பொருளில் ஏற்படும் நஷ்டத்தை இன்னொரு பொருளில் ஏற்படும் இலாபங்கொண்டு மறைத்து வருவர். அங்கு வைக்கப்படவேண்டிய கணக்குகள், சாதாரண அங்கத்தவருக்கு விளங்கக் கூடியனவாக இரா. வெவ்வேறு அங்கத்தவர், உபவிதிகள், கடன்-பொறுப்பு, முதலியவற்றைக் கொண்ட ஆறேழு சங்கங்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரேயொரு கூட்டுறவுச் சங்கம் செய்ய முயலுவதில்தான் தவறு தங்கியிருக்கின்றது.

ஆரம்பத்தில் கைக்கொண்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்யுந் தசையை அடைந்த சங்கங்கள், தம் அங்கத்தவரின் ஏனைய பொதுக் குறைகளையுந் தீர்க்க முயல்வது வழக்கமாகி விட்டது. கிராமத்திலேயுள்ள மக்களின் பொருளாதார தேவைகளனைத்தையும் பூர்த்திசெய்யச் சாதாரண கடனுதவிச் சங்கம் போதாது என்றும், இதற்குத் தக்கமான வேறுவித சங்கம் வேண்டுமென்றும் உணருஞ் சில நாடுகள், கிராமத்திலுள்ள நாணய சங்கங்களைப் புதியவோர் கோணத்திலிருந்து மதிப்பிட்டுவருவது, இங்கு குறிப்பிடத்தக்கது. அனுபவத்தையும் பலத்தையும் அடையடைய, இவ்வித சங்கம், தனது அங்கத்தவர் உற்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்குத் தேவைப்படும் பொருட்களை மட்டுமன்றி, அவர்கள் நாளாந்த தேவைக்கு வேண்டிய பண்டங்களையும் பெற்றுக் கொடுக்க முற்படுகின்றது. அத்துடன், அவர்களுடைய விளை பொருட்களை விற்க உதவிசெய்தும், அவை விலைப்படுவதை நிச்சயப்படுத்தியும் வருகின்றது. சுருங்கச் சொல்லுமிடத்து, இன்று அது "பல வகைப்பட்ட நோக்கமுடைய சங்கம்" ஆக மாறிவிட்டது.

மற்றசங்கங்களை அங்கத்தவராகக் கொள்ளாத ஒரு தனிச் சங்கத்தில் இவ்வித பலவகைப்பட்ட கருமங்கள் கையாளப் படுவதென்றால், அதன் அங்கத்தவர், பலதுறைகலிலும் அறி வுள்ளவராய் இருக்கவேண்டும். சங்கத்தின் நாளாந்த கருமங்களைச் செய்தல், நிர்வகித்தல், கணக்குவழக்குப் பார்த் தல், போன்ற நிர்வாகத்தின் பல அம்சங்களும் கடினமான வையாகிக் கொண்டு வருவதால், தலைவர்களின் ஆற்றல் அவைக் கேற்ப பெருகிக்கொண்டும் வரவேண்டும். சங்கத்தை உருவாக் கல், அங்கத்தினரதும் நிர்வாக சபையினரதும் கடமைகள், போதனை-பயிற்சி, முதலிய விடயங்களைப்பற்றி விசேஷ ஆராய் வும் அவதானமுமின்றி இவ்வித கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் இயங்கிவர முடியாது.

நீவினைகளைத் தவிர்த்து, திறம்பட வாழ வகை செய்யவும், வியாதிகளைத்தடுக்கவும், சுகாதார சேவைகள் செய்யவும், வழக்குகளிலே செலவைக் குறைத்து உதவிபுரியவும் வெவ் வேறு சங்கங்களிருப்பதை இங்கு குறிப்பிடலாம். இவ்வித சங்கங் களிலே நேரடியாகப் பொருளாதார நலன் உண்டாகாவிடினும் மறைமுகமாய் ஏற்படும் பொருளாதார நன்மைகள் அபாரம்.

நோக்கங்களின் திட்டமான அர்த்தம்

ஒரு கூட்டுறவுச் சங்கம் வெற்றிபெற வேண்டுமாயின், அதன் நோக்கங்கள் எவையென்று அதை ஸ்தாபிக்கும் போதே அதன் அங்கத்தவர் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சங்கங்கள் செய்யவேண்டிய கருமங்கள் அனைத்தையும் அடக்கக் கூடியதாக உபவிதிகள் அமையவேண்டியது அவசியம். தங்கள் சக்திக்கு மேற்பட்டதும், போதிய ஆற்றல் படைக்காத தால் அவர்களுக்குச் சாத்தியமாகக் கூடாததுமான சிக்கலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது பாரிய திட்டங்களில் அங்கத்தவரை ஈடுபடத்தூண்டாமல் தடுப்பதற்கும் இது அவசியம். அனுபவமும் ஆற்றலும் வளர வளர, அதற்கேற்ப உபவிதிகளைத் திருத்தி யமைத்து, வேலைத் திட்டங்களைப் பெருக்கிக் கொண்டு வரலாம்.

உபவிதிகளைத் திருத்தி அமைப்பதற்குக் கூடியளவு பெருந் தொகையான அங்கத்தவர் சமுகங்கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டது. சங்கத்தின் அமைப்பை முற்றுக மாற்றவல்ல இவ்வித நடவடிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதை எல்லா அங்கத்தவருக்கும் உணர்வுறுத்தவே இவ்வித நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது. முறையான அதிகாரியவர்களால் அங்கீகரிக்கப் பட்டாலொழிய இவ்வித உபவிதி மாற்றம் சட்டபல முடையதாகாது என்னும் நிபந்தனை அங்கத்தவருக்கு இன்னுமொரு பாதுகாப்பாக அமைகின்றது.

கிளைகள் அல்லது தனிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்

சிலநாடுகளில் கூட்டுறவு இயக்கம் பரவி, பலமடைந்து, மற்றவர்களும் பின்பற்றுந் தசையை அடைந்து இருக்கிறது. இவ்விடங்களிலுள்ள சங்கங்கள் தம் குறிக்கோளை அடைவதற்கு கிளை ஸ்தாபனங்களை ஏற்படுத்தலாம் அல்லது வேண்டிய இடங்களில் புதுச்சங்கங்களை அமைக்கலாம். சந்தர்ப்பத்திற் கேற்ற வாறு பிரமாணங்கள் வகுக்கப்படவேண்டும். சுமாரான வெற்றியீட்டி வருஞ் சங்க அங்கத்தினர், தமது வெற்றியின் பெருமிதத்தினுல் தமது ஆற்றலையும் அனுபவத்தையும் மிகைபட நினைத்து, சங்கத்தை இன்னும் பெருப்பிக்க எண்ணிக்கிளைகளை ஆங்காங்கே ஏற்படுத்த முனைகின்றனர். சில இடங்களில் இம் முயற்சி வெற்றிக்கு வழியாயிருப்பினும், இத்துணிபில் ஆபத்தும் கலந்திருக்கிறதென்பதை மறக்கலாகாது.

சங்கம் பெரிதாகிக் கொண்டுவர, அவ்வளவுக்கு அங்கத்தவரின் நிர்வாகப் பொறுப்பும் அதிகரித்துக் கொண்டுவரும். ஆனல் எல்லோராலும் இவ்விலட்சியத்தைக் கடைப்பிடிக்க முடிவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஆங்காங்கே, வேண்டியபோது, புதுச்சங்கங்களை ஸ்தாபிப்பதால், ஆர்வமும், ஆற்றலும் பாதிக்கப்படாமல் வளர்ந்துவர வழியேற்படுகின்றது. வெவ்வேறு சங்கங்களை ஒரே வட்டாரத்தில் ஸ்தாபித்து, அவற்றைச் சமாசமாக இணைத்து மொத்த வியாபார அனுகூலங்களைப் பெற்று வருவதே உசிதம்.

அத்தியாயம் III

வினாக்கள்:

1. உம்முடைய வட்டாரத்திலே கூட்டுறவு முயற்சி வேண்டி நிற்கும் தேவைகளைக் குறிப்பிடுக. அவையெல்லாம் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றனவா?

2. மேலே கூறியவாறு, எத்தேவைகளுக்கு, கூட்டுறவு முயற்சி விரும்பத்தக்கதாயிருந்தும், இன்னுங் கவனிக்கப் படாதிருக்கின்றதென்று குறிப்பிடுக. இவைகளுள் எத்தேவையை முதலாவதாகப் பூர்த்தி செய்ய நீர் முயலுவீர்? ஏன்?

3. இரண்டாவது வினுவிலே குறிக்கப்பட்டதும்......39ம் ....பக்கத்தில் உள்ளதுமாய் முதன்மையான தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சங்கமொன்றை ஸ்தாபிக்க நீர் எடுக்கும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

4. உமது வட்டாரத்திலே புதிய சங்கம் தேவைப்படுகின்றதா? அப்படியாயின் சுருக்கமாய்க் குறிப்பிடுக. ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கும் பொழுது, அயலில் எவ்வித நிலமை இன்றியமையாததெனெ நீர் கருதுகின்றீர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் IV

கூட்டுறவுச் சங்கத்தை ஸ்தாபித்தல்

கூட்டுறவுச் சங்கங்களும் சட்டமும்

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றைய வியாபார ஸ்தலங்களைப் போல் இலாபந் தேடுதலையே நோக்கமாகக் கொள்ளாது, அங்கத்தவருக்குள் தன்னுதவியை வளர்க்க விரும்புவதால் சில விசேட அனுகூலங்களைப் பெறுகின்றன. சட்ட பூர்வமான கூட்டுறவு விதிகளை அனுஷ்டித்தாலன்றிச் சலுகைகள் கிடைக்கமாட்டா.

சங்கம் பதிவு பெறுவதற்குப் பதிவாளருக்கு மனுப்பண்ண வேண்டும். மனுப் பத்திரத்துடன், சங்கத்தின் நோக்கங்கள் என்ன வென்றும், அவற்றை அடைவதற்குக் கையாள உத்தேசிக்கும் நடைமுறைப் பிரமாணங்கள் எவையென்றும் விவரித்து அனுப்பவேண்டும். அவை கூட்டுறவு முறையிலே அமைக்கப் பெற்றிருக்கின்றனவாவென்று பரிசோதிப்பது கூட்டுறவுச் சங்கங்களின் பரிபாலிப்புக்குப் பாத்திரராகிய பதிவாளரின் கடமையாகும். பதிவு செய்யும்படி மனுப்பண்ணும் பத்திரத்தில், அச்சங்கத்தில் சேர விரும்பும் அங்கத்தினரில் பொதுவாக 10 பேரும், சிலவேளைகளில் 7 பேரும், கையெழுத்திடவேண்டுமென்று சட்டம் விதிக்கிறது. கையெழுத்து வைப்போரின் தொகையிலிருந்தும் தராதரத்திலிருந்தும் சங்கம் வெற்றிகரமாக இயங்குமாவென்று அனுமானிக்கக்கூடியதாயிருக்கும்.

மனுப்பத்திரத்துடன், அங்கீகரிக்கப்படவேண்டிய உபவிதிகளின் பிரதிகளும் அனுப்பவேண்டும். இவை பதிவாளரால் பரிசீலனை செய்யப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டால், சங்கம் பதிவு செய்யப்பட்டதின் அடையாளமாக அத்தாட்சிப் பத்திரம் ஒன்று அனுப்பப்படும். அத்துடன், அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகளின் பிரதி ஒன்றும், அங்கீகார முத்திரையுடன் சங்கத்துக்கு அனுப்பப்படும். இதுவே சங்கத்தின் சட்ட சம்பந்தமான அமைப்பு. இதற்கியையவே அது கடமையாற்றிவரவேண்டும். காலத்துக்குக்காலம், தேவைகளுக்கேற்றவாறு உபவிதிகள் திருத்தி அமைக்கப்படலாம். ஆனால் அவ்வித மாற்றங்களும் இவ்வித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான அங்கிகாரமும் பதிவும் பெறவேண்டும். பதிவாளரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் பெற்றதும், சங்கம் சட்டமுறையில் உருப்பெறுகின்றது. பொதுவாக, உடனே அது தன் முதற் கூட்டத்தைக் கூட்டி, புதிய அங்கத்தவரை ஏற்றுப் பதிவுசெய்து, பங்குப்பணத்தைச் சேர்க்கத் தலைப்படுகின்றது. பதிவுசெய்யப்பட்டதன் பலங்கொண்டு, சங்கம் சட்டமுறையில் தான் வழக்குத் தொடரவும், தனக்கெதிராக வழக்குத் தொடரப்படவுங் கூடியதாக இருக்கின்றது. இந்தவிதமான சட்டசலுகை இல்லாவிட்டால் சங்கமானது தனிப்பட்ட அங்கத்தவரின் குழுமாகமட்டுமே இருந்து, தான் வழக்குத் தொடரும்பொழுதும், தனக்கெதிராக அவ்வித நடவடிக்கை எடுக்கப்படும்போதும், ஒவ்வொரு அங்கத்தவரும் தனித்த முறையிலேயே, வழக்காளியாகவோ, எதிராளியாகவோ நிற்கவேண்டியிருக்கும். இவ்வித நடவடிக்கையால் ஏற்படக்கூடிய சிரமத்தை உத்தேசித்து, எந்த வியாபாரியும் சங்கத்துடன் வர்த்தகத் தொடர்புகொள்ள விரும்பமாட்டான்.

கூட்டுறவுச் சங்கங்களின் வகைகளும் நோக்கங்களும்

எல்லையைக் கணித்தல்

ஒரு சங்கம் செய்யமுயலும் வேலையையும் அமைப்பையும் பொறுத்தே அதன் எல்லை அமையும். வரையறுக்கப்படாத உத்தரவாதமுள்ள கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்திலே, தனது கடனை இறுக்கத்தவறும் அங்கத்தவரின் கடனை மற்றைய அங்கத்தவர் இறுக்கவேண்டியவராதலால், சொந்த ஆஸ்தியையும் இழக்க நேரிடும். இதனால் விரும்பத்தகாத அங்கத்தினரைச் சங்கத்தில் சேர்க்காது எச்சரிக்கையாயிருத்தல் அவசியம். அத்துடன், கொடுக்கப்பட்ட கடன் குறிக்கப்பட்ட நோக்கங்களுக்குச் செலவிடப்படுகின்றதாவென்றும், விளைபொருள் எப்போ அறுவடை செய்யப்பட்டு விற்பனையாகின்றது என்றும், கடனைத் தீராது பணம் துர்ப்பிரயோகஞ் செய்யப்படுகிறதாவென்றும் மேற்பார்வைசெய்வது அங்கத்தவரின் கடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வித மேற்பார்வை தகுந்தமுறையில் நடப்பதற்குச் சங்கத்தின் எல்லை குறுகியதாக இருத்தல்வேண்டும். சன நெருக்கத்தையும் போக்குவரத்து வசதிகளையுங் கவனித்தே எல்லையை நிர்ணயிக்கவேண்டும். பொதுவாக அங்கத்தவர் ஒரு மைலுக்குட்பட்ட தூரத்தில் இருத்தலே விரும்பத்தக்கதாயினும், சனம் மிகக்குறைவான இடத்திலே இது சாத்தியமாகாது.

அங்கத்தவரின் விளைபொருளை விற்கும் நோக்கமுடைய சங்கத்தின் எல்லையோ அப்பொருள் விலைப்பட்டுவரும் வட்டாரத்தை ஒட்டியே அமையும். ஆனால் இவ்விதிப்படி வரையறுக்கப்பட்ட எல்லை, ஒரே நாளில் அங்கத்தவர் தமது விளைபொருளைச் சங்கத்திற்கொப்புவித்துத் திரும்பிச் செல்லவியலாத அளவு பெரிதாயிருக்குமாயின், ஆங்காங்கே பொருள் சேகரிக்கும் நிலையங்களை ஏற்படுத்தவேண்டும்.

தொழிற் சங்கங்களின் எல்லை ஆலை அல்லது இயந்திர சாதன நிலையத்தையொட்டியே நிர்ணயிக்கப்படும்.

கூட்டுறவுப் பண்டகசாலைகளின் எல்லை அங்கத்தவரின் பிரமாணிக்கத்திலும், ஆதரவிலுமே தங்கியிருக்கின்றது. பண்டகசாலையானது ஆரம்பத்தில் மக்களின் பிரமாணிக்கத்திலே தங்கியிருப்பினும், நாளடைவில், அதன் நாணயம், சேவை, விலை முதலியவற்றின் பலத்தாலேதான் வளரவேண்டும். பெரும்பான்மையான ஆதரவாளரின் வசதியை உத்தேசித்தே பண்டகசாலை அமைக்கப்படவேண்டும். சங்கங்களை அங்கத்தவராகக் கொண்ட சமாசங்களின் நோக்கம் வித்தியாசமாயிருக்கும். ஒரு வங்கியின் வருமானம், அது கடன்கொடுக்கும் வட்டிவிகிதத்துக்கும் வைப்புப் பணம்மீது கொடுக்கவேண்டிய வட்டியின் விகிதத்துக்கும் உள்ள வித்தியாசமேயாகும். இவ்வருமானம் அதன் தாபரிப்புச் செலவுகளுக்கும், பங்குப்பணவட்டிக்கும் சேம நிதிகளுக்கும் போதியதாக இருக்கவேண்டும். இவ்வித வருமானத்தைக்கொடுக்கக்கூடியளவு கொடுக்கல்வாங்கல்செய்யும் சங்கங்களே அதன் எல்லையை வரையறுக்கக் கூடியனவாகவிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவையான முதலும் நடைமுறைச் செலவுகளும்

ஆரம்பத்தில் வாக்குறுதிகளைவிட பணத்தையே ஒரு சங்கம் தனது மூலதானமாகச் சேர்க்கவேண்டும். வாக்குறுதிகளை இலகுவாகச் சேகரிக்கலாம், ஆனால் தேவைக்கு வேண்டியது பணமே தான். சில சங்கங்கள் அங்கத்தவருக்குப் பெருந்தொகையான பங்குகளைக்கொடுத்துப் பணத்தைச் சிறுதொகைகளாகப்பிரித்துப் பலவருடங்களில் சேர்க்க முனைவதுண்டு. இவ்வாறு செய்யுங்கால், அடுத்த வருடங்களில் வந்துசேரவேண்டிய பங்குப்பணத்தை அறவிடுவது கடினமாகிவிடுகின்றது. கட்டவேண்டிய காலத்தில் பங்குப்பணத்தைக் கட்டாதவர்கள் சங்கத்தில் தமக்குள்ள உரிமைகளைப் பிரயோகிக்க முடியாதென உபவிதிகள் கூறினும், அங்கத்தவர் பலவேளைகளிலும் இவ்விதியை மீறிநடப்பதில் கைதேர்ந்தவர்கள். பெருந்தொகையான முதல் தேவைப்பட்டால், அதை அங்கத்தவரே சிறுகச் சிறுகச் சேர்த்து, அதன்பின் தொழிலை ஆரம்பிப்பதே உசிதம்.

அங்கத்தவரின் எண்ணிக்கை போதியதாகவும், அவர்கள் கைக்கொண்டு நடத்தும் கருமங்கள் சிறாகவும் இருந்தால், சங்கம் தனக்குத் தேவையான முதலை இலகுவில் பெற்றுவிடுகின்றது. முதலுக்கேற்றவாறு மட்டாக ஆரம்பித்து, நாளடைவில் விருத்திசெய்துகொண்டு போதல் எல்லாச் சங்கங்கள் மட்டிலும் சாகுவதமாகாது. உதாரணமாக: ஒரு கடனுதவிச் சங்கம் தனது நோக்கத்தைப் பூரணமாய் நிறைவேற்றவேண்டின், அது தனது அங்கத்தவரின் நியாயமான தேவைகளுக்கெல்லாம் கடன்கொடுத்து உதவக்கூடியதாக இருக்கவேண்டும். இவ்விதஞ் செய்யத் தவறின், அங்கத்தவர் தம் தீர்க்கப்படாத கடன்களையடைக்கப் பிறரிடமிருந்து அரு வட்டிக்குக் கடன் எடுக்க வேண்டியிருக்கும். அவ்வாறு இரு இடங்களிலும் கடன்படுவோருக்கு கடனிறுக்கும் வேளையில், 30% முதல் 50% வரையுள்ள வட்டியுடைய பிற கடனையோ-10%-12% வட்டியுள்ள சங்கத்தின் கடனையோ தீர்ப்பது என்ற பிரச்சினை உண்டாகும். இவ்வித நெருக்கடியில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக வட்டியுள்ள பிறகடனைக் கொடுப்பதே இயல்பாகையால், சங்கத்தின் கடன் காலந்தவறுகின்றது. சங்கத்தின் வேலைத்திட்டம் இதனுல் பாதிக்கப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் 12 மாதத் தவணைக்குட்பட்ட கடன்களையே சங்கம் கொடுக்கவேண்டும். காணி வாங்குவது, பழைய கடன் தீர்ப்பது போன்ற நீடிய காலத் தவணையுள்ள கடன்களைக்கொடுக்க முற்படுமுன், ஒரு சங்கம் போதிய முதலையும் அனுபவத்தையும் பெறவேண்டும்.

இதற்குத்தேவையான முதல் எவ்வளவென்று கணிக்கும் முறை பின்வருமாறு:-

1. அங்கத்தவரின் கடனெல்லையைக் கணித்தல்:

இதற்கு ஒவ்வொரு அங்கத்தவரினதும் நிலைமையை நன்காராய்ந்து, அவரது நியாயமான தேவையைப் பூர்த்திசெய்யப் போதுமானதும், அவரால் முறையாகப் பாவிக்கப்படக்கூடியதும் உரிய காலத்தில் திருப்பிக்கட்டக்கூடியதுமான தொகையை நிர்ணயிக்கவேண்டும்.

எல்லா அங்கத்தவரும் தமது எல்லையளவான பணத்தை ஒரே நேரத்தில் எடுக்கவேண்டியிராது என்பதையும் மனதில் பதித்தே சங்கத்தின் தேவையைக் கணிக்கவேண்டும்.

தமக்குத் தேவையான பணத்தைத் தாமே தேடக்கூடிய அங்கத்தவர், வரையறுக்கப்படாத கடனுத்தரவாதத்தை ஏற்க வேண்டிய அவசியமில்லையெனினும், பரஸ்பர உதவியின் விதியை அனுசரித்து, தமது மனப்பூர்வமான ஆதரவுகாட்டி கூடியளவு பெருந்தொகையான பணத்தைப் பங்குப்பணமூலம் திரட்டவேண்டும். மேலதிகமாகத் தேவைப்படும் பணத்தைத் திரட்ட, சங்கம் தனது மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதத்தை ஈடாக வைக்கலாம். அங்கத்தவர் கொடுத்த பொருட்களைத் தரப்படுத்துவதற்கும், சாதகமான விலையை எதிர்பார்த்து வைத்திருப்பதற்கும் ஓர் (கிட்டங்கி) களஞ்சியசாலை அவசியமாதலால், பொருள் விற்பனைச் சங்கத்துக்கு இந்நோக்கத்துக்கும் முதல் தேவைப்படுவது வழக்கம். அத்துடன் பொருள் கொடுப்போருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசிய பணமுடை ஏற்படுவது இயல்பாதலால், பொருளை ஏற்றவுடனே அல்லது அதற்கடுத்த நாட்களிலோ, பொருளை விற்கக்கூடிய விலையில் ஒரு பாகத்தையெனினும் முற்பணமாகக் கொடுத்துதவவும் பணம் தேவைப்படும். பிற்கூறிய சந்தர்ப்பத்தில் வேண்டிய பணத்தைப் பொதுவாக சங்கம், தன்னிடமுள்ள விளைபொருளைப் பிணையாகக் கொண்டு பெறக்கூடியதாக விருக்கும்.

ஒரு பண்டகசாலையை ஆரம்பிக்குமுன் அதற்குத் தேவைப்படக்கூடிய முதல் எவ்வளவென்று ஆராயவேண்டும். பண்டகசாலையின் அளவையும் நிர்ணயிக்கவேண்டும். போதிய முதலின்மையே பல பண்டகசாலைகளின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருக்கின்றது. ஒரு பண்டகசாலையின் தொழிலும் சேவையும் அதன் முதலையும் அளவையும் பொறுத்தே இருக்கும்.

கீழ்க்காணும் விடயங்களை அவதானித்தே ஒரு பண்டகசாலைக்குத் தேவையான முதலைக் கணக்கிடவேண்டும்.

1. வேலைத்தலம் (வாடகைக்கெடுப்பதா விலை கொடுத்து வாங்குவதா?)
2. தளபாடங்கள் (கடைக்கும் காரியாலயத்துக்கும் போதியன)
3. கையிருப்பு (நடைமுறையில் கையிலிருக்கவேண்டிய பண்டங்கள்)
4. வேலையாட்களின் சம்பளம் (முதல் 2, 3 மாதங்களுக்குப் போதுமான தொகை)

இவ்வகையில் செலவிடப்படும் பணம் எண்பார்வையின் போது எஞ்சும் இலாபத்திலிருந்து பெறக்கூடியதாயிருக்கும்.

முதல் இரண்டு விடயங்களையும் இலகுவாகக் கணிக்க முடியுமெனினும் கிடைக்கக்கூடிய வாடிக்கைக்காரரின் தேவைகளை அனுமானித்தே மூன்றாவதைக் கணிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் வாங்குவதாக அங்கத்தவர்களிடமிருந்து வாக்குறுதி பெறல் வழக்கம், ஆனல் இவ்வாக்குறுதியை அவர்கள் பிரமாணிக்கமாக நிறைவேற்ரு விடின் அக்கூட்டுறவுச் சங்கம் மிதமிஞ்சிய பொருட்களை வைத்திருக்க நேரிடும்.

உபவிதிகளைத் தயாரிக்கையில், ஒவ்வொரு அங்கத்தவரும் கொடுக்கவேண்டிய ஆகக்குறைந்த பங்குப்பணத்தைத் தீர்க்கமாய் ஆலோசனை செய்யவேண்டும். இதற்கு, முன்னே சொல்லப்பட்ட விடயங்களை மனதில் பதித்தல் அவசியம்.

தனது பெறுமதியையும் வியாபார ஆற்றலையும் நிரூபிக்கப் போதிய அவகாசங்கிடைக்காததால், பண்டகசாலை ஆரம்பகாலத்தில் இலகுவாகக் கடனெடுக்க முடியாமலிருந்தது. பண்டகசாலையிலுள்ள பொருட்களே அதன் பிணையாயிருக்கின்றது. உபவிதிகளில் பங்குப் பணத்தைச் சாட்டுதல் பண்ணலாமே யொழிய திருப்பிப்பெற முடியாது என்ற நிபந்தனை உண்டாயின், அவ்வித பங்குப்பணத்தொகை ஓரளவு பிணையாக உதவும். ஆனல் பங்குப் பணம் பெரும்பாலும் தளபாடங்கள், உபகரணங்கள், வியாபாரப் பொருட்களிலே அடங்கிக்கிடப்பதால் பலாத்கார ஏலவிற்பனையின் போது இவற்றின் பூரணகிரயத்தைப் பெறமுடியாது.

கூட்டுறவின் தரமும் அதன் சேவையும் உயர உயர, சங்கத்தைக்கொண்டு நடத்த ஏற்படுஞ் செலவும் குறைந்துகொண்டு வரவேண்டும். கடனுதவிக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் எந்தத் தேவைக்குக் கடன் கொடுக்கப்பட்டதோ அதேதேவைக்கு அது பயன் படுத்தப்படுகின்றதா என்று கண்காணித்து வருவர். கடனாளி எப்பொழுது அறுவடைசெய்கின்ருன் என்றுபார்த்திருந்து, அப்போது, அவன் அவ்வூதியத்தைக் கொண்டு சங்கக் கடனைத் தீர்க்கின்ருனு வென்று மேற்பார்வை செய்துவருவது இவ்வித பரஸ்பர மேற்பார்வை வியாபாரத்துறையில் எவ்வளவோ மதிப்புடையதாகின்றது. வர்த்தகஞ் செய்யும் வேறெந்த ஸ்தாபனமும் இவ்வித சேவைக்குப் பணங்கொடுத்தே ஆகவேண்டும். இதேபோன்று பண்டகசாலைகளிலும், சிலர் முன்வந்து, சங்கம் விற்கும் சில பொருட்களைக் கணக்கெடுக்க உதவிவருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாகாலம் இருப்புத்திட்டமெடுக்கையில் அங்கத்தவர் வந்து உதவிபுரிகின்றனர். வர்த்தக ஸ்தாபனத்திலே எந்தச்சேவை செய்ய நிர்வாகசபையினருக்குப் பெருந்தொகையான சம்பளங் கொடுக்கப்படுகின்றதோ, அதேசேவையைக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகசபையார், இனமாகவோ மிகமிகக் குறைந்த (வெறும் பிரயாணச்) செலவிலோ செய்து உதவுவர்.

பொறுப்புகள்: தவிர்க்கவேண்டியனவும் ஏற்கவேண்டியனவும்.

இவ்விடயத்தை முற்றுய் அலசி ஆராயப் பலநூல்கள் வரையவேண்டும். அவதானிக்கவேண்டிய முக்கிய குறிப்புகளையே இங்கு சொல்லக்கூடும். கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களிலே மத்தியகாலத் தவணைக்கும், நீண்டகாலத் தவணைக்கும் கடன்கொடுத்தலும், பலவருட பலன்கொண்டு தீர்க்கக் கூடிய நோக்கங்களுக்கு 6 மாத அல்லது 9 மாதத் தவணைகுறிப்பிட்டுக் கடன் கொடுத்தலுமே ஆபத்துக்கேதுவானவையாகும். திறமை பூண்ட வழிகாட்டிகளும் மேற்பார்வையாளரும் இல்லாத போது, சந்ததி சந்ததியாகவோ, வருடக்கணக்காகவோ பட்டுத் திரண்ட கடன் விலங்கிலிருந்து தன் அங்கத்தினரைச் சில மாதங்களிலேயே மீட்டுவிடச் சங்கங்கள் ஆரம்பத்தில் முனையக்கூடும். மிதமிஞ்சிய நிலப்பசி இன்னொரு பிணி. பணத்தை உபயோகிக்கும் முறையில் பயிற்சி பெறுதவர், அதிக நிலம் வாங்கக் கடன்பட முயல்வதும் இயல்பு. தம்மிடமுள்ள நிலத்துக்குப் பட்டகடனை முதலில் தீர்ப்பது அல்லது உபயோகமற்றுக் கிடக்கும் தரிசு நிலத்தைத் திருத்திப் பண்படுத்துவது உசிதம் என்று அவர்களுக்குச் சாதுரியமாகப் புத்தி புகட்ட வேண்டும்.

விற்பனைச் சங்கமானது, எவ்விதகாரணங் கொண்டும் தனது அங்கத்தவரிடமிருந்து பொருளை முழுவிலையுங் கொடுத்து வாங்கக்கூடாது என்ற நிபந்தனையை அனுஷ்டிக்க வேண்டும். பொருளை விற்பனை செய்வதில், பொருள் அங்கத்தினரின் சொந்தமானதாகவும், சங்கம் ஓர் வினையாளியாகவுமே இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகச் சொல்லுமிடத்து, அறுவடையை அடுத்தநாட்களில் பொருட்களின் விலை மிகக்குறைவாகவே இருக்கும். பயிர்செய்யும் எல்லோரிடமும், கோதுமை, அரிசி, குரக்கன் முதலியதானியங்கள் அதிகமாய் இருத்தலாலும், பணம் அவசிய தேவையாயிருத்தலாலும் அவர்கள் குறைந்த விலைக்குவிற்க ஆயத்தமாய் இருக்கின்றார்கள். இவ்வாறு விலைவிழ்வதற்கு இன்னொரு காரணமுமுண்டு. சிலர் அறுவடையின்போது பெறக் கூடிய விலையைத்தானும் மதியாது, தமது அவசிய தேவையே பெரிதெனக்கருதி, மிகக்குறைந்தவிலைக்கு வி ளை பொ ரு ளை க் கொடுத்து, தங்கடனைத்திர்க்கின்றனர். அதன்பின், விலைஉச்சமேறி திரும்பவும் விழத்தொடங்குகின்றது. கிடைக்கக்கூடிய அதிக விலைக்குப் பொருளை விற்பதற்கு சங்கம் பொருளைத் தன்னுடையதாக்கவே விரும்பும். அல்லாவிடில், அங்கத்தினர், பொருளை விற்கவேண்டிய விலையைப்பற்றித் தம்மைக் கலந்தாலோசிக்க வேண்டுமென்றும், விலைபேசுமுன் தம் சம்மதமும் அவசியமென்றும் வாதாடுவர். இவ்வித ஆலோசனைகள் செய்து முடிப்பதனுல் ஏற்படும் தாமதத்தால்—பெறக்கூடிய சலுகைகளை அநேகமாக இழக்கவேண்டியேயிருக்கும். இவற்றையெல்லாந் தவிர்த்து நடக்க, விற்கவேண்டிய தருணத்தை நிர்ணயிக்கும் பொறுப்பு, உபவிதிகளின்படி, நிர்வாக சபையுடையதாயிருக்கவேண்டும். "இன்னளவில் தான் விலைஉச்ச நிலையை அடைந்திருக்கின்றது, இதற்குமேல் இறங்குமேயொழிய ஏருது" என்று எவ்வித திறமையும் அனுபவமும் வாய்ந்த வியாபாரியாலுந் திட்டமாய்ச் சொல்ல முடியாது. அப்படியாயின், கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள சாதாரண மக்களைக் கொண்ட நிர்வாகச் சபைக்கு இது இன்னுங் கடினமாகின்றது. அறுவடையை அடுத்து விற்கவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து அங்கத்தவரைக் காக்க கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவோ உதவுகின்றன. விலைமாற்றத்தைத் திறமையாக அனுமானித்தல் அவசியம். கூட்டுறவுச்சங்கங்கள் விளைபொருட்களை விற்கவேண்டிய தருணத்தைத் தவறவிடுதல் அசாதாரணமானதல்ல.

நல்லவிலை வருமளவுங் காத்திருப்பதால் இலாபத்தைவிட நட்டம்அதிகமாக ஏற்படுகின்றதென்று கீர்த்திவாய்ந்த வர்த்தக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபுணர்வலியுறுத்திக் கூறுகின்றனர், காத்திருக்கவேண்டிய கால எல்லையை வரையறுக்கும் உபவிதிகளையுடைய சங்கங்களும் உண்டு. எவ்வாருயினும், பின்னுல் தான் விற்பனை செய்யும் நோக்கத்துடன் அங்கத்தவரின் விளைபொருட்களை முழுக்கிரயங் கொடுத்து வாங்கும் பொறுப்பைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஏற்கக்கூடாது.

முறையான ஒழுங்குத்திட்டங்களை வகுத்து, தனது பொறுப்பை ஒரு ஐக்கிய பண்டகசாலை குறைத்துக்கொள்ளலாம். நிர்வாக சபையினரும் அங்கத்தவரும், தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் ஐயமின்றி அறிவதின் மூலம், ஆரம்பத்தில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களைக் குறைக்கலாம்.

தவிர்க்கவும் ஏற்கவும் வேண்டிய பொறுப்புகளில் சில பொருளாதார வகையைச் சேர்ந்தனவாயிருக்கின்றன. மற்றவை அங்கத்தவரைத் தனித்த முறையில்ஒட்டியவை. இவை இலகுவாகக்குறிப்பிட முடியாதன. சுருங்கச்சொல்லின், ஏற்கவேண்டிய பொறுப்புகள்:—

1. வியாபாரத்திலே இயல்பாகவுள்ள விலை ஏற்றமும் இறக்கமும்;
2. பொருள் மானமும்;
3. அங்கத்தினரின் தேவைகளுமாம்.

தவிர்க்க வேண்டியன:—

1. முதலீட்டுக்குத் தேவையானவற்றைக் குறைத்து மதித்தல்;
2. மிதமிஞ்சிய பொருட்களைக் கொள்வனவு செய்து வைத்திருத்தல்;
3. பொருட் சோர்வு;
4. மிதமிஞ்சிய வீண்செலவு;
5. மொத்தக் கொள்வனவு விலைக்கும் சில்லறை விற்பனவு விலைக்கும் இடையில் போதிய வித்தியாசமின்மை;
6. சக்திக்கு மீறி வியாபாரத்தைப் பெருப்பித்தல்.
7. எல்லை மீறிய பயம்;
8. குறைவான ஒதுக்கு நிதி, முதலியனவுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையால் கடமையை உணராது விடும் ஆபத்து இருக்கு மிடங்களில் சங்க உத்தியோகத்தினரதும், அங்கத்தினரதும் அறிவு வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும்.

அங்கத்தவரோடு பொருந்தும் முறை

பொருளாதார சம்பந்தமான கொடுக்கல் வாங்கலிலேயே ஈடுபடும் அநேகமாக எல்லாச் சங்கங்களும் தம் சேமத்துக்குப் போதியளவு மிச்சத்தைச் சேகரிக்கக்கூடிய முறையில் தொழில் செய்யவேண்டும். மற்றவர்களைத் தம்மிடம் வட்டிக்குப் பணஞ் சேமித்து வைக்கத் தூண்டக்கூடிய வட்டிவிகிதத்திலும் கூடுதலாகவே கடனுதவிச் சங்கம் அங்கத்தவரிடம் கடன்பேரில் அறவிட வேண்டும். பொருள் விற்பனைச் சங்கங்கள் அங்கத்தவருக்குக் கொடுக்கும் பணம், பொருள் விற்பனை மூலம் பெறக் காத்திருக்கும் தொகையின் ஒரு பகுதியாகவே இருக்கும். பண்டகசாலைகளிலும் விற்கும்விலை, கொள்வனவிலும் உயர்ந்ததாகவே இருக்கும். கடனுதவிச் சங்கங்களையும் விற்பனைச் சங்கங்களையும் பொறுத்தவரையில் இவ்வித வருமானத்தைக் கொண்டுதான், நிர்வாக சபையினரின் பிழையாலோ, கடன் வாங்குவோருக்கு ஏற்படக்கூடிய எதிர்பாராத துரதிர்ஷ்டத்தாலோ, பொருள் மதிப் பிழிவாலோ, கையிருப்புப் பொருளின் விலை வீழ்ச்சியாலோ, அவற்றின் தரங்குன்றிப் போவதாலோ ஏற்படும் நஷ்டங்களையும், சம்பளம் முதலிய நடைமுறைச் செலவுகளையும் ஈடுசெய்ய வேண்டும்.

இலாப வீதம் உயர்தல் சங்கத்துக்கு நன்மையென்பது வெளிப்படை. தாம் பொருள்கொடுக்கும் விலையைப்பற்றியோ, பொருள் வாங்கும் விலையைப்பற்றியோ அங்கத்தவர் யோசிக்க வேண்டியதில்லை யென்பதை ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்கு வலியுறுத்திக் கூறவேண்டும். ஏனெனில், மிச்சமாகும் பணமெல்லாம் ஒவ்வொரு அங்கத்தினரதும் ஆதரவுக்குத் தகுந்தபடி அவர்களுக்கே இலாப பாகமாகவோ, எஞ்சிய கிரயமாகவோ திருப்பிக்கொடுக்கப்படும்.

கடனுதவிச் சங்கங்களில், அங்கத்தவரின் ஆதரவுக்குத் தகுந்தபடி இலாபத்தை அவர்களுக்கிடையில்பங்கிட்டுக் கொடுப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமானது. அதில் பல சிக்கல்கள்உண்டு. அங்கத்தவருக்கும் மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமென்னும் ஆபத்துக்குமிடையில் இவ் விலாபச் சேமிப்பு ஒரு பாதுகாப்பு அரணுக அமைகின்றது. இதைக்கொண்டு அங்கத்தவரின் வட்டிவிகிதம் குறைக்கப் படக்கூடியதாகின்றது.

அங்கத்தவரின் வசதியைப்பொறுத்தே இலாபப் பங்கீடு செய்யும் நாளைக் குறிக்கவேண்டும்.

வருமான வரி, விமாத் தவணைப்பணம், பள்ளிக்கூடச் செலவு, வருடாந்த உல்லாசப் பிரயாணம், தலைவரி முதலிய செலவுகள் கட்டப்படவேண்டிய தவணையை ஒட்டி இலாபப் பங்கிடு செய்வது அங்கத்தவருக்குப் பேருதவியாகும்.

ஆரம்ப வேலை

பொருளாதாரப் பேறு, கல்வி முதலியவை குறைவாயுள்ள மக்களின் நன்மைக்காக ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிக்குமுன் அவதானிக்கவேண்டிய விடயங்கள் பல.

கூடிய அபிவிருத்தியடைந்த நாட்டில், கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தின் உதவியை வரவேற்பதுமில்லை, அது தங்கருமங்களில் தலையிடுவதை விரும்புவதுமில்லை.

கூட்டுறவு முறையில் ஒன்றுசேர்ந்து இயங்குவதால் குறைவான வாழ்க்கைத்தரமுடைய மக்களே கூடிய நன்மைகளை அடையக் கூடியவர்களாயிருப்பார்கள். ஆனல், வறுமை, அறியாமை அல்லது வேறு பொருளாதாரப் பெலவீனங்கள் காரணமாக முயற்சி மிகவும் மந்தமாகத் தொடங்கலாம், அல்லது ஆரம்பிக்காமலே போகலாம். சில சந்தர்ப்பங்களில், பொதுசன முயற்சியால் கூட்டுறவுச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படலாமெனினும், குறைவான அபிவிருத்திபுடைய நாடுகளில், மேற்கூறிய காரணங்களையிட்டு, கூட்டுறவு இயக்கத்தை உருவாக்கி வளர்ப்பதற்கு அரசாங்கத்தின் உதவி தேவைப்படுகிறது.

கூட்டுறவு இயக்கத்தை உருவாக்குதல் இலகுவான காரியமன்று. அதுவுமன்றி, வியக்கத்தக்க பலாபலன்கள் உடனடியாக ஏற்படுமென்று எதிர்பார்க்கக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்திலே, கூட்டுறவு இயக்கத்தை உண்டுபண்ண முற்படும் அரசாங்கமோ தனிப்பட்ட நபரோ, கூட்டுறவின் ஆதாரவிதிகளை மக்களுக்கு ஐயமற விளக்கவேண்டும். பரஸ்பர உதவியால் உண்டாகும் பலாபலன்களை விளக்கும் உதாரணங்களை எடுத்துக் கூறுவதால் இதை மனதில் பதியச்செய்யலாம். வசதியான போதனு முறைகளையும் பயன்படக் கையாளலாம். இவற்றின் உதவியால் குறைவான கல்வியறிவு படைத்த மக்களும் சுய உதவியினதும் பரஸ்பர உதவியினதும் பெறுமதியை உணர்ந்து, சங்கத்தைப் படிப்படியாக ஸ்தாபிக்கக் கற்றுக்கொள்ளுவார்கள்.

கூட்டுறவின் ஆதார விதிகளை நன்றுக விளக்கிக்கூறி அவை அங்கத்தவர் மனதில் பதியச்செய்வதில்தான் சங்கத்தின் பலந் தங்கியிருக்கின்றது.

சங்கங்களின் எண்ணிக்கையே பிரதானமென்று கருதி, அவற்றை ஸ்தாபிக்க முற்படுதல் விவேகமாகாது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள் வீழ்ச்சியடையின், அவ்விடங்களில் புதிய சங்கங்களை ஸ்தாபிப்பது கடினமாகும். ஆரம்பத்தில் அங்கத்தினரின் ஆர்வம், விவேகத்தையும் மறந்துசெல்ல முயற்சிப்பது வழக்கம். ஆனுல் அவ்வேளைகளில் அவர்களின் ஆர்வத்தைச் சிதைக்காது, தகுந்த போதனை, விளக்கம், முன்மாதிரி முதலியவற்றுல் ஆ ர் வ த் தை த மட்டுப்படுத்தி, ஏற்றவழியில் அதைச் செலுத்தவேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தர், தாம் அங்கத்தவரின் சுய ஆற்றலை உரியவழியில் வளர்த்து வழிகாட்டிவரும் உதவியாளராக மட்டுமே இருக்கின்றனர் என்பதை அங்கத்தவர் மனதில் பதியச்செய்யவேண்டும்.

தமது ஊக்கத்தையும் ஆதரவையுங் காட்ட எண்ணி, போதிய ஆயத்தமின்றி வேலையில் முனைய எத்தனிப்போருக்கு அவர்கள் செய்யவிரும்பும் தொழிலைத் தீர்க்கமாக ஆராய்ந்து, தாரதம்மியத்தை உணர்ந்து, திட்டமிடுவது எவ்வளவு அத்தியாவசியமென்பதை உணர்த்தவேண்டும்.

எவ்வளவோ சிரமமெடுத்து ஆரம்பிக்கப்பட்ட அநேக சங்கங்கள் பதிவுசெய்யப்படும் நிலையை அடையாமலே போகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பெரும் ஏமாற்றத்துக்கு இடமெனினும், சித்தியடைய முடியாத சங்கத்தை ஸ்தாபித்து, அது விழ்ச்சியடைவதைப் பார்ப்பதைக்காட்டிலும் இவ்வேமாற்றம் கொடியதாகாது. ஒரு சங்கத்தை உருவாக்கிப் பரிசோதித்துப் பாதுகாத்து, ஈற்றில் அதைக் குலைப்பதாயின் எவ்வளவு பிரயாசை, காலம், பணம் எல்லாம் வீண்போகும்?

கூட்டுறவுச்சங்கப் பதிவாளரே, சங்கங்களுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள தொடர்பு ஆவர். மற்றைய அரசாங்க உத்தியோகத்தரைப்போல் அல்லாது, கூட்டுறவுப்பகுதி உத்தியோகத்தருக்கு, பொதுசனத்தைத் தண்டிக்கவோ அவர்கள் மட்டில் பலாத்காரப் பிரயோகஞ்செய்யவோ அதிகாரங்கிடையாது. இதனுல் ஏனைய அரசாங்க உத்தியோகத்தரைப் பொறுத்தளவில் ஏற்படும் சந்தேகத்துக்கும் அவ நம்பிக்கைக்கும் கூட்டுறவு உத்தியோகத்தர் ஆளாக மாட்டார். எவ்வளவுக் கெவ்வளவு மக்களுடன் ஒன்றுசேர்ந்து உண்மைத் தொண்டராக உழைக்கின்றனரோ, அவ்வளவுக் கவ்வளவு இவர்கள் வெற்றியீட்டுவார்கள்.

அபிவிருத்தி ஆரம்ப தசையிலுள்ள நாடுகளில் கூட்டுறவுப் பகுதியாரின் முக்கிய தொடர்பு கிராம மக்களுடனேயே இருக்கும். இவ்வேலையைச் சுமித்திரையாய்ச் செய்வதற்கு, விவேகமும், உண்மையான கிராமியப்பற்றுமுள்ள உத்தியோகத்தரே தேவை. இவர்கள் எளிதில் கிடைப்பது அரிது. இன்னொரு வகையிலும் கூட்டுறவுப்பகுதி உத்தியோகத்தரின் நோக்கம் விசித்திரமானது. ஏனைய உத்தியோகத்தரைப்போல் அல்லாது இவர்கள் தமது வர்க்கம் இல்லாதொழிதலையே தங்குறிக் கோளாகக் கொண்டுளர். கணக்குப் பரிசோதனைச் சமாசங்கள், மேற்பார்வைச் சமாசங்கள், மத்திய வங்கிகள் முதலியவற்றை ஸ்தாபிப்பதால், காலகதியில் இவைகள், இவ்வுத்தியோகத்தரின் வேலையைத் தாமேசெய்யத் தலைப்படும். முற்றுக இவ்வேலையை அவை ஏற்குங்காலத்தில் இவ்வுத்தியோகத்தருக்கு இடமில்லாது போகும். ஆனுல், புதிய சங்கங்களை ஸ்தாபிக்க அவசியமிருக்கும் தற்பொழுதைய நிலை இருந்துவருமாயின் இவ்வுத்தியோகத்தருக்குப் போதியளவு வேலை இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள முக்கிய தொடர்பு கூட்டுறவுப் பகுதியேயாயினும், இச்சங்கங்கள், எத்தனையோ வகைகளில் மற்றைய அரசாங்கப்பகுதியாருடனும்-அவர்களுக்கும் தமக்கும் பயன்படும் வகையில் தொடர்பு பூண்டு ஒத்துழைத்து வரலாம். இவ்வித தொடர்பு முக்கியமாக, (விளைபொருட் சங்கங்களைப் பொறுத்தவரையில்) விவசாய இலாக்காவுடனேயே இருக்கலாம்.

உதாரணமாக: இவ்விலாக்கா பன்மடங்கு பலன்தரக்கூடிய ஒரு புதிய இன விதையை ஆராய்ச்சியின் பயனாகக் கண்டுபிடித்துப் பிரபல்யப்படுத்த விரும்புகிறதென்று வைத்துக்கொள்ளுவோம். இக்குக்கொருவராகத் தூர இடங்களில் சிதறிக்கிடக்கும் நிலச் சொந்தக்காரர்மூலம் இப்புதிய விதை வர்க்கத்தைப் பரப்ப விவசாய இலாக்கா உத்தியோகத்தர் நீடியகாலமெடுக்கவேண்டியிருக்கும். அவ்வாறு சந்தித்துப் பேசக்கூடியவர்கள் அதிக நிலம் படைத்த பணக்காரராகவே இருப்பர். இதனால், பயிர் விளைவிப்போரில் பெரும்பகுதியார் இந்த நன்மையை உணரவழியில்லாமலே போகலாம்.

இவ்வித சேவையைச்செய்யக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த சாதனமாயுதவுகின்றன. சங்கத்தை நன்கறிந்தவரும் அவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரருமான கூட்டுறவுப் பரிசோதகர் கிருஷிகப்பகுதி உத்தியோகத்தருக்கு இவ்விடயத்தில் சிறந்த உதவிபுரியக்கூடியவராயிருப்பார்.

இதே போன்று, சுகாதாரப் பகுதியினரும், மலேரியா, கொழுக்கிப்புழு வியாதிகளைத் தடைசெய்யும் திட்டங்களிலும், வேறு சுகாதார வைத்தியவேலைகளிலும், மக்களுடன் சிறந்த முறையில் தொடர்பு பூண்டு வெற்றிகரமாய் உழைக்கக் கூட்டுறவுச் சங்கங்களைச் சிறந்த மார்க்கமாகக் கொள்ளலாம்.

வித்தியா பகுதியாருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்குமிடையில் நெருங்கிய உறவு உண்டு. கூட்டுறவென்பது, நாளாந்த பொருளாதார விடயங்களில் மிகவுஞ்சிறந்த முறையான கல்விப் பயிற்சியென்றே கருதப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதியோர் கல்விப் பயிற்சியை நோக்கமாகக்கொண்ட சங்கங்களும், சிக்கனத்தைப் பயிற்றவும், பள்ளிக்கூடப் புத்தகங்கள் உபகரணங்கள் விற்பதற்கு (வயது வராத அங்கத்தினர் போதியளவு இராமையால்) பதிவுசெய்யப்படாத பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்களும் கல்வித்துறையிலேயே உழைத்து வருகின்றன. இச் சங்கங்களின் மூலம் அவற்றின் அங்கத்தினருக்கு ஏற்படும் அனுபவம் வியாக்கியானங்களைவிட அதி சிறந்தது. சேர்ந்து உழைப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் சாதிக்கக்கூடிய செயல்களையும் இச்சங்கங்கள் மாணுக்கருக்கு விளக்குகின்றன.

இதே போன்று, கைத்தொழில் வேலையாட்கள் சங்கம் கைத்தொழில், குடிசைத் தொழில் துறைகளுடனும், விடமைப்புச் சங்கங்கள் மராமத்துப் பகுதியாரு (P.W.D.) டனும், இன்னும் வேறு சங்கங்கள் வெவ்வேறு அரசாங்கப் பகுதியாருடனும் இணைந்து பயன்படக் கூடியனவாயிருக்கின்றன.

வினுக்கள்

1. ஓர் கூட்டுறவுச் சங்கத்தைத் தாபிக்கும்பொழுது அவதானிக்கவேண்டிய முக்கிய விடயங்களெவை?

2. அவற்றுள் அதிமுக்கியமானது எது? காரணங்கூறுக.

3. ஒரு கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவுசெய்வதால் ஏற்படும் நன்மைகளெவை?

4. ஓர் கூட்டுறவுச் சங்கத்தின் பங்குப்பணத்தைக் காசாகச் சேர்ப்பதன் இலாக்கியமென்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஒரு சங்கத்தின் பங்குப்பணத்தைக் கணக்கிடுகையில் எவற்றை அவதானிக்க வேண்டும்? இதனால் அங்கத்தவரின் பங்குப்பணம் எவ்வாறு பாதிக்கப்படும்?

6. கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பங்குப்பணம் சாட்டுதல் பண்ணக்கூடியதாக இருக்கவேண்டுமா அல்லது திருப்பிப் பெறக்கூடியதாக இருக்கவேண்டுமா? வெவ்வேறு சங்கங்களுக்கு இவ்விதி வேறாக இருக்கவேண்டுமா? காரணங் கூறுக.

7. நீரறிந்த சங்கங்களிலேற்பட்ட அனுபவப் பேறாக, ஒரு சங்கம் ஏற்கவும் தவிர்க்கவும் வேண்டிய பொறுப்புகளைக் கூறுக.

8. சில கடனுதவிச் சங்கங்களில் இலாபப் பங்கிடில்லாதிருப்பதேன்?

9. கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்குக் கூட்டுறவுத் துறை உத்தியோகத்தர் செய்யக்கூடிய தொண்டு என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் V

நிர்வாகமும் செயலாற்றலும்

அங்கத்தவரின் கடமைகளும் உரிமைகளும்

கூட்டுப் பங்கு வர்த்தகஸ்தாபனங்களிலே, அங்கத்தவரின் வாக்குரிமை அவரின் முதலீட்டைப் பொறுத்த தாகவே இருக்கும். சற்று ஆராய்ந்தால், இவ்வித ஸ்தாபனங்களில் பெரும் முதலீடு செய்திருப்பது ஒரு சிலரே என்றும், அநேகர் மிகச் சொற்ப தொகையே பங்குப் பணமாகக் கொண்டவர்கள் என்றும் தெரியவரும். அதனால் பொதுவாக—இவ்விதஸ்தாபனங்களின் நிர்வாக சபையாரைத் தெரிந்தெடுக்கும் பொறுப்பு பெருந்தொகையான பணத்தை முதலீடு செய்தவர்களிலேயே விடப்படும்.

இவ்விடயத்தில் கூட்டுறவுச் சங்கம் முற்றாக வேறுபட்டது. அதன் அங்கத்தவர் பொதுச்சேவை வேண்டிச் சேருகின்றார்களேயன்றி, முதலீடு செய்யும் நோக்கத்தவராகவல்ல. ஒரு அங்கத்தவருக்கு ஒரேவாக்குரிமை தானுண்டு என்ற நியதி கட்டாயமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது, ரு 1. முதலீடு செய்தவனுக்கும் 100 ரூ முதலீடுசெய்த வனுக்கும் ஒரேதகையதான வாக்குரிமையே உண்டு. அத்துடன் ஒவ்வொரு உண்மையான கூட்டுறவாளனும் எல்லாப் பொதுக் கூட்டங்களுக்குஞ் சமுகமளித்து, தனது வாக்குரிமையைச் செலுத்த வேண்டும். வரையறுக்கப்படாத கடன் பொறுப்பைக் கொண்ட கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் இது மிக அவசியமானது.

அவ்வித சங்கம் ஒன்று கடன்பட்டு, அதைத் திருப்பிக் கட்ட இயலாத சந்தர்ப்பத்திலே கடன் கொடுத்தவன் அதற்கெதிராக வழக்குத் தொடருகிறான் என்று வைப்போம். அவன் தனது சார்பாகத் தீர்ப்பைப் பெறுவானாயின் தனது பணத்தை அறவிட, வரையறுக்கப்படாத கடன் பொறுப்பைச் சாதகமாக்கிக்கொண்டு, அங்கத்தவர் எல்லோரிடமும் சிறிது சிறிதாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணம் அறவிடும் சிரமத்தைத் தவிர்த்து, பணம் அல்லது பொருள் படைத்த ஓரிரு அங்கத்தவரிடமிருந்தே அறவிடப்பார்ப்பான். இவ்வாறு கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இலக்கானவர்கள், தமது பங்குக்கு மேற்பட்ட தொகையை மற்றைய அங்கத்தவரிடமிருந்து அறவிடுவதற்குத் தாங்களே நடவடிக்கை எடுக்கவேண்டியவர்களாவார்கள்.

கடன்காரன் தனக்கு வரவேண்டியபணத்தை அறவிட்ட ஓரிருவர் சங்கத்துக்குத் தாம் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்த்தது மல்லாமல், தாம் பிணைநின்ற கடன்களையுங் கட்டுவித்தவர்களாயிருந்தால், மற்றவர்களின் பிழைக்குத் தாம் பலியாவது அநியாயம் என்று மனம் நோகலாம். ஆனால், சங்கத்தின் கஷ்டநிலைக்குக் காரணமாயிருந்த ஒரு சில அங்கத்தவர் தங்கள் கடனைத் துர்ப்பிரயோகஞ் செய்வதற்கு இடங்கொடுக்காது, போதிய மேற்பார்வை செய்திருந்தால் அந்தக் கஷ்டநிலையைத் தவிர்த்திருக்கலாமென்பதை இவர்கள் மறக்கக்கூடாது. இதிலிருந்து நிர்வாகசபையார் ஒன்றில் அங்கத்தவரைத் தெரிந்தெடுப்பதில் போதியசிரத்தை எடுக்கவில்லை, அல்லது வழங்கப்பட்ட கடன் உரியவழியில் செலவிடப்பட்டதாவென்று கண்காணிக்க வில்லை யென்பது புலனாகின்றது. அது மட்டுமல்ல. முன்சொல்லப்பட்ட ஓரிருவர் தம்மட்டில் பிரமாணிக்கமாய் நடந்து கொண்டபோதிலும் கூட்டுறவாளருக்குரிய கடமையில் தவறியவர்களென்பதும் தெளிவாகின்றது.

உப விதிகளால் அவர்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பிரயோகித்து, ஒரு பொதுக்கூட்டத்தைக் கட்டாயமாகக் கூட்டி, நிர்வாக சபையாரின் தவறுகளை அம்பலப்படுத்தி, அவர்களுக்குப் பதிலாக, தம் கடமையை உணர்ந்து மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடக்கும் ஆற்றலுந் துணிவுங்கொண்ட புதிய நிர்வாக சபையாரைத் தெரிந்தெடுத்திருக்கவேண்டும். நிலைமை மோசமானதாக இராத பட்சத்தில் சித்தியும் எய்தியிருப்பார்கள். பரிகரிக்கக்கூடாத நிலையை அடைந்துவிட்டால் சங்கத்திலிருந்து ராஜிநாமாச் செய்திருக்கலாம். அவ்வாறு செய்வதால், விலகியநாளின் பின் சங்கம் ஏற்றுக்கொண்ட பொறுப்புகளுக்கு அவர்கள் உத்தரவாதிகளாகமாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கூட்டுறவுக் கடனுதவிச் சங்கத்தை உதாரணமாக எடுத்து விளக்கியதன் காரணமென்னவெனில், இதன் எல்லை மிகக்குறுகிய பரப்புடையதாயிருக்கும். அதனுல் இவ்வித சங்கத்தில்தான் கூட்டுறவைப் பரிபூரண நிலைக்குக் கொண்டுவரலாம். அதேபோல், இதன் அங்கத்தவர் அனைவரும் தங்கடமை தவறியவர்களாகவும், விழிப்பற்றவர்களாகவும் இருப்பின், இவ்வித சங்கத்தில்தான் மிகக்கூடிய நஷ்டமும் ஏற்படும். இதே விதிகள் எல்லாவித சங்கங்களுக்கும் பொதுவானவை. அங்கத்தவர், சங்கத்தைப் பொறுத்தளவில், தம் கடமையைப் பிரமாணிக்கத்துடன் நிறைவேற்றுவதுடன் தம் போன்றவர்களாலுருப்பெற்றிருக்கும் அச்சங்கத்தின் மற்றைய அங்கத்தவரும் தத்தம் கடமையைச் சரிவரச் செய்கின்றனராவென்று விழிப்பாயிருந்து கண்காணித்தல்வேண்டும். பண்டகசாலை அங்கத்தவர் அதைத் தாம் ஆதரிப்பதுடன், அவ்விதம் ஆதரிக்கா மற்றைய அங்கத்தவர்மீது உக்கிரமான நடவடிக்கைகள் எடுக்கத் தூண்டவும் வேண்டும். சங்கத்திலே குறைபாடுகளைக் கண்டால், அது தனக்கும் தன் சகாக்களுக்கும் சொந்தமானது என்பதை மறவாது, தனக்குள்ளே முறுமுறுப்பதையோ மற்றவர்களிடம் முறையிடுவதையோ தவிர்த்து-பொதுக் கூட்டத்திலே விஷயத்தை அலசி ஆராய்ந்து, ஒன்றில் குறைகளை நிவிர்த்திசெய்யவேண்டும்; அல்லது எதற்காக அவற்றைத் திருத்தமுடியாது என்பதை விளக்குவிக்கவேண்டும். விளைபொருள் விற்பனைச் சங்கத்திலும் இதேபோன்று, பொருளைத் தரப்படுத்தலிலே அநியாயஞ் செய்யப்படுகின்றது என்று கண்டால், அல்லது விற்கவேண்டிய நேரத்தை நிர்வாகசபை தவறவிட்டது என்று அறிந்தால், அவ்விடயங்களைப் பொதுக் கூட்டத்தில் பகிரங்கமாகப்பேசி ஆராயவேண்டும். அங்கத்தவரேதான் நிர்வாகசபையாரைத் தெரிவுசெய்து அவர்களுக்கு அச்சங்கத்தை நிர்வகித்து நடத்தும் அதிகாரத்தை அளித்தனர். இவர்கள் தம் கடமையைத் திருப்திகரமாகச் செய்யாத பட்சத்தில் அவர்களை விலக்கி அந்தஸ்தானத்தில் அவ்விதம் செய்யக்கூடியவர்களை நியமிக்கலாம். குறைகளை ஆரம்பத்தில் ஆராய்வது விரும்பத்தக்கது. சனநாயக ஆட்சிமுறையிலும் கருமங்களை ஒழுங்காய் நிர்வகிப்பதிலும் கூட்டுறவு சிறந்த பயிற்சியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கங்கள் மட்டில் அங்கத்தவரின் கடமைகளிவ் வாறிருக்க-அவர்கள் உரிமைகளை ஆராய்வோம். பொதுக்கூட்டத் திலே மற்றைய அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் இருப்பது போல, ஒருவருக்கு ஒரே வாக்குரிமை உண்டு. ஒருவன் முறை தவறி நடந்த குற்றத்துக்காக விலக்கப்படவேண்டும் என்று மற் றைய அங்கத்தவர் அவன்மேல் குற்றஞ்சாட்டினுல், அவன் செய்த தவறு என்னவென்று அறியவும் பொதுக்கூட்டத்திலே பிரதி வாதஞ்செய்யவும் அவனுக்கு உரிமை உண்டு.

எல்லா அங்கத்தவரையுங்கொண்ட பொதுக் கூட்டம் நாளாந்த நிர்வாக விடயங்களை வகுத்து நடத்துவதற்கு ஏற்ற தல்ல. இதற்காகவே, ஒரு நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டு இப் பொறுப்புகள் அதற்கு ஒப்படைக்கப்படுகின்றன. இவற்றை முறையாக ஏற்று நடத்துங்கால், கடனைக் கொடுக்கவோ, குறைக் கவோ, மறுக்கவோ அதற்கு அதிகாரமுண்டு. அங்கத்தவனு யிருப்பதால் மனுப்பண்ணிய கடன் கிடைக்கவேண்டுமென்று உரிமை பாராட்டமுடியாது. அங்கத்தவன் தனது பங்குப்பணத் தைத் திருப்பிப்பெறும் உரிமை விபரங்கள் உபவிதிகளிலே அடங்கியுள்ளன. கூட்டுறவுக் கடனுதவிச் சங்கத்திலே-அங்கத் துவம் முடிவடையுமுன்னர் பங்குப்பணம் திருப்பிக்கொடுக்கப் படுவது வழக்கமில்லை. பண்டகசாலைகளிலும், விளைபொருள் விற்பனைச் சங்கங்களிலும் பங்குப்பணத்தை பிறருக்குச் சாட்டு தல் பண்ணலாமேயொழிய திருப்பிப்பெறமுடியாது. அவ்வித சாட்டுதல் பெறுபவர், சங்கத்தின் அங்கத்தவராயிருக்க வேண்டும் அல்லது அங்கத்தவராகத் தகுதியுடையவராயிருக்க வேண்டும்.

ஒவ்வொரு அங்கத்தவனுக்கும் பொதுக்கூட்ட அறிவித் தல் அனுப்பப்படவேண்டும். தான் கையாளும் பொருட்களின் தராதரத்துக்குக் கீழானதாகாத பொருளை அங்கத்தவனிடமிருந்து ஏற்றுக்கொள்வது விற்பனைச் சங்கத்தின் கடமை. மற்றைய அங்கத்தவரின் வைப்புப் பணக்கணக்கைத் தவிர்த்த மற்றைய கணக்குப் பதிவுகளைப் பார்வையிடும் உரிமையை உண்மையான கூட்டுறவாளன் ஒவ்வொருவனும் பாராட்டியே தீருவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவுச் சங்கத்தின் அமைப்பு

பொதுக் கூட்டம்

சனநாயக ஆட்சிமுறையே கூட்டுறவுச் சங்கத்தின் அத்திவாரம். இதனுல்-ஒருவருக்கு ஒரே வாக்குரிமையுள்ள அங்கத்தவரைக்கொண்ட பொதுக்கூட்டமே முழு அதிகார பீடமாயிருத்தல் வேண்டும். இந்நியதி எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுவானது. சில கருமங்களைப் பொதுக்கூட்டம் மட்டுமே கையாளவேண்டும். இவற்றுள் சில பின்வருமாறு:-

1. உத்தியோகத்தரையும் நிர்வாக சபையையுந் தெரிவு செய்தல்.
2. வருடாந்த எண்பார்வை அறிக்கையையும் பதிவாளரின் குறிப்புகளையும் ஆராய்தல்.
3. எஞ்சிய பணத்தைச் சட்டத்துக்கமைய பங்கிடு செய்தல்.
4. நிர்வாகசபையார் அனுமதித்த புதிய அங்கத்தவரை ஏற்றுக்கொள்ளல்.
5. வைப்புப் பணம் போட விரும்புபவரிடமிருந்தோ ஏனையோரிடமிருந்தோ வாங்கக்கூடிய கடனுக்கு எல்லை குறித்தல்.
6. ஐக்கிய நாணய சங்கத்திலே ஏற்றுக்கொள்ளும் வைப்புப் பணத்துக்கும், அங்கத்தவருக்குக் கொடுக்கும் கடனுக்கும் வட்டிவிகிதம் குறித்தல்.

   விற்றுக் கொடுக்கும் விளைபொருளின்பேரால் கழிக்கும் தரகுக்கூலி (கமிஷன்) விகிதத்தைக் குறித்தல்.
7. விதிக்கப்பட்ட விசேட முறைப்படி உபவிதிகளை மாற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக சபை

நாளாந்த காரிய நிர்வாகத்திலே முடிவுகளைத் தீர்மானிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்பொழுதெல்லாம் பொதுக் கூட்டத்தைக் கூட்டுவது அசாத்தியம். இதற்காகவே நிர்வாகசபை தெரியப்பட்டு அதற்கு விவரிக்கப்பட்ட அதிகாரங்கள் அளிக்கப்படுகின்றன. இவற்றுள் முக்கியமானவை பின்வருமாறு:-

1. எல்லாப்பண வரவு செலவு விபரங்களையும் பண்டக் கொள்வனவு விற்பனை விபரங்களையும் எழுதிவைத்து வருடாந்தப் பொதுக்கூட்டத்துக்கு கணக்கு விபரத்தைச் சமர்ப்பித்தல்.
2. மாதாந்தக் கூட்டங்களில் கணக்கு வழக்குகளைப் பரிசோதித்து, கைரொக்கத்தைப் பார்வையிட்டு எண்ணுதல்.
3. அங்கத்துவ இடாப்பை எழுதிவரல்.
4. எல்லாக்கடன் விண்ணப்பங்களையும் பரிசிலனை செய்து ஒரு முடிவுக்குவருதல், கால எல்லை வரையறுத்தல், பிணை அங்கீகாரஞ்செய்தல், அவசியமானபோது கடனைப் புதுப்பித்தல்.
5. அங்கீகரிக்கப்பட்ட நோக்கங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன் உரிய வழியில் செலவிடப்படுகின்றதா என்று கண்காணித்தல்.
6. கடனை இறுக்கத் தவறுங்கால் அல்லது வேறு வகைகளில் செலவிடப்படுமிடத்து வேண்டிய நடவடிக்கை எடுத்தல்.
7. பொதுக் கூட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்கடங்க நாளுவித செலவுகளை அனுமதித்தல்.
8. பொதுக்கூட்டத்தால் விதிக்கப்பட்ட எல்லைக்குட்பட கடன் எடுத்தல், வைப்புப்பணம் ஏற்றுக்கொள்ளல்.
9. சங்கத்தின் சார்பாக வழக்கு விவகாரங்களைத் தொடர்தல், நடத்தல்; சங்கத்துக்கெதிராகத் தொடரப்படும் வழக்கு விவகாரங்களில் பிரதிவாதஞ்செய்தல், சமரசம் பேசல், மத்தியட்சத்துக்கு மனுச்செய்தல் முதலியனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பொதுக்கூட்டத்தாரால் கொடுக்கப்பட்ட அதிகார எல்லைக்குள் நடைமுறை விதிகளை வகுத்தல். இவ்விதிகள் பொதுக்கூட்டத்தினதும் பதிவுகாரியஸ்தரதும் அங்கீகாரத்துக்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

11. பொதுக்கூட்டத்தாரின் அனுமதியுடன் நிலம் வாங்கல், கட்டிடங்கள் நிறுவுதல் முதலியன.

12. சங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட விளைபொருளைப் பாதுகாத்து அதை விமாச்செய்தல்.

13. பொருட்களில் கலப்பு ஏற்படாது கண்காணித்தல்.

14. தரப்படுத்தல், வேறுபொருளாக மாற்றல், பெட்டிகளில் அடைத்தல் முதலியனவற்றை மேற்பார்வை செய்தல்.

15. பொருட்களில் சிலவற்றை மாதிரிக்குச் சரிபிழைபார்த்து, தேவையான காலங்களில் இருப்புத்திட்டம் எடுத்தல்.

சங்கத்தின் கருமங்களில் நிர்வாக சபையார் சாதாரண வர்த்தக ஞானத்தைக் கையாளவேண்டும். சட்டம், பிரமாணங்கள், உபவிதிகளை மீறுவதால் ஏற்படும் நஷ்டத்துக்குத் தாமே பொறுப்பாளிகள் என்பதை உணரவேண்டும். ஒப்பந்தஞ்செய்தல், கட்டிடவேலை மேற்பார்வை செய்தல் முதலிய விசேட அலுவல்களுக்கு அவ்வப்போது ஏற்ற சிற் சபைகளை நிர்வாக சபையார் ஏற்படுத்தலாம். ஆனல் அவ்வித சிற் சபைகள் தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுகின்றனவாவென்று பார்க்கும் பொறுப்பு நிர்வாகசபையாரையே சாரும்.

தேர்தல்கள்

தேர்தல்கள் வருடத்துக்கு ஒருமுறை நடக்கவேண்டும். அப்பொழுதுதான் சங்க அங்கத்தவரின் பற்றையும் ஊக்கத்தையும் பலப்படுத்தலாம்; சங்க உத்தியோகத்தர் அல்லது நிர்வாகசபை அங்கத்தவரின் வேலைக் கிரமம், நடத்தை, வேலைத்திறன் முதலியவற்றைக் கணிக்கலாம். அத்துடன், சங்க நிர்வாகத்திலே பங்கெடுப்பதால், சாதாரண அங்கத்தவரும் எவ்வளவோ கற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாசங்களில், தேர்தல்களை ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்கொருமுறை நடத்தலே உசிதம். அவ்வாறு நடக்கும்போது, நிர்வாக சபையாரின் ஒருபகுதி காலத்துக்குக் காலம் மாறி, விலகுபவரினிடத்தில் புதியவர் தெரிந்தெடுக்கப்படலாம், அல்லது அவரே மீண்டும் தெரிவுபெறலாம். இவ்வாறு செய்வதால் அனுபவப்பேறுன ஆற்றல் முறிந்துபோகாது பாதுகாக்கப்பட்டுவருகிறது.

கூடுமானபொழுதெல்லாம்-அங்கத்தவர் நேரில் சமுகமாயிருந்து ஒருவருக்கு ஒரே வாக்குரிமை என்ற நியதிப்படி தேர்தலை நடத்தவேண்டும். கூடிய மட்டுக்குப் பிறர்மூலம் வாக்குரிமை கொடுப்பதைத் தவிர்க்கவேண்டும். அரசாங்க ஊழியர்கள்போன்றவர்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் வேலை மாற்றமாகச்சென்று தொழிலாற்ற வேண்டியவர்களாதலால், அவர்களை அங்கத்தவராகக் கொண்ட சிக்கனச் சேமிப்புச் சங்கங்களில் எல்லோரும் ஒரே பொதுக்கூட்டத்துக்கு நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்துவந்து ஒன்றுசேர முடியாமலிருக்கலாம்.

இவ்வித சந்தர்ப்பங்களிலும் பிறர்மூலம் வாக்குரிமை கொடுப்பதைத் தவிர்த்தல் நன்று. ஒவ்வொரு அங்கத்தவனுக்கும் வாக்குரிமைச்சீட்டை அனுப்பி, மத்திய ஸ்தானத்தில் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி, அதில் அச்சீட்டுக்களைச் சேர்த்து எண்ணலாம்-அல்லது வட்டாரத்திலே சங்கத்தின் எல்லையை வசதிப்படி வலயங்களாகப் பிரித்து, அவை ஒவ்வொன்றிலும் பொதுக்கூட்டத்தைக் கூட்டலாம்.

உத்தியோகத்தர்

வழமையில் சங்கத்தலைவரே எல்லாக் கூட்டங்களுக்கும் நிர்வாக சபைக்கும் அக்கிராசனராக விருப்பார். ஒரு விடயத்திலே இருதரப்பிலும் சமமான வாக்குகள் ஏற்படுங்கால், தனது அங்கத்துவ வாக்குரிமையைவிட இவருக்கு அக்கிராசனரென்ற வகையில் "தீர்மானிக்கும் வாக்குரிமை" யுமுண்டு. ஒருவருக்கு ஒரே வாக்குரிமை என்ற விதிக்கு இது ஒன்றே விலக்கு. தலைவர் வராதிருக்கும் இடத்து, உபதலைவரே அக்கிராசனம் வகிப்பர். அவரும் வராவிடத்து கூட்டத்தில் ஒருவர் அக்கிராசனராகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தெடுக்கப்படுவார். அவ்வித அக்கிராசனருக்கும் தீர்மானிக்கும் வாக்குரிமை உண்டு. பொதுக்கூட்டத்தின் அங்கீகாரம் பெற்ற ஒப்பந்தம், உடன்படிக்கைகளுக்கும், வங்கியிலிருந்து பணம் எடுக்கும்போதும் கைச்சாத்திடுபவர்களில் அநேகமாகத் தலைவரும் ஒருவராக இருப்பர். பொதுவில் அவ்வித பத்திரங்களில் தலைவரும், காரியதரிசி அல்லது தனாதிகாரியுமே கைச்சாத்திடுவர். தலைவருக்குப் பொதுக் கூட்டத்தைக் கூட்டவும் அதிகாரம் உண்டு.

பரந்துநோக்கின், காரியதரிசியே நிர்வாக சபையின் எல்லாக் கடமைகளையும் நிர்வகிப்பவர். சங்கத்தின் புத்தகங்களை எழுதுவதும், கடிதப்போக்குவரத்து அலுவல்களைக் கவனிப்பதும், தலைவரின் கட்டளைப்படி நிர்வாகசபைக் கூட்டங்களையும் பொதுக் கூட்டங்களையும் கூட்டி அவற்றுக்குச் சமுகங்கொடுப்பவர்களில் ஒருவராயிருப்பதும், இவ்வித கூட்டங்களின் குறிப்புகளை எழுதுபவரும் அவரே. சங்கத்தில் வேண்டிய கூட்டுறவு உணர்ச்சி இல்லாத இடத்து, இவ்வித கருமங்களையெல்லாஞ்செய்துவரும் காரியதரிசி மெல்ல மெல்ல சர்வாதிகாரங்களையும் தனதாக்கிக் கொள்ளும் ஆபத்து இருந்துவருகின்றது.

நிர்வாக சபையாரும், ஓரளவுக்கு ஒவ்வொரு அங்கத்தவரும்-இவ்வாறு நேராது எச்சரிக்கையாயிருத்தல்வேண்டும். இவர்களுக்கு ஆரம்பத்திலேயே போதிய பயிற்சியளிக்கப்பட்டிருந்தால் இவ்வாறு நேராது தடுக்கலாம்.

காரியதரிசி மனேச்சராக (முகாமைக்காரனாக) வும் கடமையாற்றலாம். பொதுவாக இவர் சம்பளம் பெறும் உத்தியோகத்தராகவேஇருப்பர். அதனால் அவருக்கு வாக்குரிமை இருத்தலாகாது. ஆனால் அவர் கூட்டங்களுக்குச் சமுகங்கொடுத்து, தலைவர் அவற்றைத்திறமையாக நடாத்துவதற்கு வேண்டிய விடயங்களை வகுத்தும் விபரங்களைக் கொடுத்தும் உதவ வேண்டும்.

காரியதரிசியின் கடமைகளையும் தனாதிகாரியின் கடமைகளையும் வெவ்வேறு ஆட்கள் செய்துவருதலே விரும்பத்தக்கது. இது ஒரு பாதுகாப்பாகவும் தடையாகவும் அமையும். அதனால் களவுகளும் தவறுகளும் நேருவதற்கு இருவராவது சம்பந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவேண்டியிருக்கும். இவ்வித கடமைகளை ஒருவரே செய்யக் கூடாது என்று சில சங்கங்களின் உபவிதிகளிலே குறிப்பிடப் பட்டும் இருக்கின்றது.

தனதிகாரியே பணத்துக்குப் பொறுப்பாளியென்பது அவரது பெயரிலிருந்து பெறப்படுகிறது. நிர்வாகசபை அங்கீகரித்த தொகைகளையெல்லாம் அவர்பெற்றும், கொடுத்தும்வரவேண்டும். சில இடங்களில் அவரே ரொக்கப் புத்தகம் எழுதியும் வருவார். இவ்வாறு செய்வது சாத்தியமாயின் மிகவும் நலமாகும்; ஆனால் அதற்கு மற்றைய புத்தகங்களையெல்லாம் எழுதிவரும் காரியதரிசியுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு வேண்டியிருப்பதால் அவ்வாறு செய்வது அனேகமாக அசாத்தியமாயிருக்கும்.

குறிக்கப்பட்ட தொகைக்கு மேற்பட்ட பணமெல்லாம் வங்கியில் கட்டப்படவேண்டியது அவசியம். வங்கிக்குப்பணம் அனுப்புவதில் சிரமம் அல்லது அதிகசெலவு ஏற்படும் எனக்காணும்போதெல்லாம் அதைக் கையிருப்பாகவே வைத்திருக்க விரும்புவது இயல்பு. இது பல காரணங்களையொட்டி விரும்பத்தகாதது. போதிய பாதுகாப்பளிக்கக்கூடிய இரும்புப்பெட்டி வாங்கக்கூடிய பணம் ஆரம்ப தசையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களிடமில்லை. அவ்வித பெட்டியை அவை வாங்கக்கூடியதாயிருந்தாலும் அதை வைத்திருக்கக்கூடிய கட்டிடம் கிடைப்பதரிது. அதுமட்டுமல்ல, கையிருப்பாகக் கிடைக்கும் பணம் வட்டி உழைப்பதில்லை.

தனதிகாரி பிறருடைய பணத்தைக் கையாளக்கூடிய ஆற்றல் படைக்காதவராக இருக்கும்போதெல்லாம் அவருக்கு இவ்வித தொகையான பணம் ஓர் இடைஞ்சலும் ஆபத்துமாகவே முடியும். இவ்விடயம் நன்கு கவனிக்கப்பட்டுவரவேண்டும். நிர்வாகசபை, ஒவ்வொரு கூட்டத்தின்போதும் கையிருப்பாகவுள்ள பணத்தை எண்ணிக் கணக்கிடவேண்டும். இதிலும் விபரீதம் நேரலாம். வர்த்தகமுறை நன்கு தெரியாதவர்களிடம் கையிருப்புப் பணத்தைக் காட்டும்படி கேட்டால், அவர்கள் தமது நேர்மை அவமதிக்கப்படுவதாகக் கருதிக் குறைவிளங்குகின்றார்கள். இதற்காகவே, நிர்வாக சபையாரின் கடமைகளைக்குறிக்கும் உபவிதிகளில், ''கையிருப்புப் பணத்தை எண்ணிப் பார்வையிடவேண்டும்'' என்றும் குறிப்பிடவேண்டும். அப்பொழுது அவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களுக்கு உப விதிகளில் பாதுகாப்புண்டு.

நடைமுறை

ஓர் கூட்டுறவுச் சங்கத்தின் நடைமுறை அது செய்ய எத்தனிக்கும் சேவையையும், அதை நிர்வகிக்கவேண்டிய அங்கத்தவரின் கல்வித் தராதரத்தையும் வர்த்தக ஞானத்தையும் பொறுத்ததாகவே இருக்கும்.

ஒவ்வொரு சங்கத்தினதும் உபவிதிகளும் கணக்கு முறையும் அதன் நோக்கத்துக்கும், அதைக்கொண்டு நடத்தும் அங்கத்தவரின் ஆற்றலுக்கும் ஏற்றதாக அமையவேண்டும். எல்லாச் சங்கங்களுக்கும் பொதுவாயிருக்கவேண்டிய அதி முக்கிய பாதுகாப்பு: முறையான கணக்குவழக்கும் போதிய எண்பார்வையுமாம். இதன் முக்கியத்தைப் பயிற்சியற்ற புதிய சங்க அங்கத்தவர்கள் உணர்கின்றார்களில்லை. தங்களுடைய சொந்த விடயங்களிலேயே கணக்குவழக்கு வைத்திருந்தறியாதவர்கள் வியாபாரிகளுக்கும் வட்டிக் கடைக்காரருக்கும் இலகுவான இரையாகின்றார்கள். தாம் வாங்கும் பொருட்களுக்கோ, கடனுக்கோ வட்டி கொடுப்பதில்லை என்று மனப்பால் குடிக்கும் இவர்கள் உண்மையில் கடனடைக்க விளைபொருள் கொடுக்கும் விகிதத்திலும் கடனுக்கு வாங்கும் பொருட்களுக்குக் கொடுக்கும் விலையிலும் எவ்வளவு வட்டி மறைந்து செல்கின்றதென்பதை உணருவதில்லை.

இவ்வித மக்களுக்கு மிகவும் எளிய நடையில் கணக்கு வழக்குகள் எழுதக் கற்றுக்கொடுத்து-அவற்றை நன்கு எழுதி வரும் வரைக்கும் போதிய உதவிசெய்யவேண்டும்.

வேண்டிய பயிற்சியளிக்க முன்வருபவர் இவ்விடயத்தில் சாந்தத்தைக் கடைப்பிடித்து, கணக்குகளைத்தாமே எழுதத் தூண்டும் ஆசையை அடக்கி, சங்க உத்தியோகத்தரையே நன்கு பயிற்றி, அவரைக்கொண்டே அவ்வேலையைச் செய்விக்கவேண்டும். அரசாங்க உதவி இன்றியமையாத இவ்வாரம்ப தசையிலே சாதுரியமாக உதவிசெய்யவேண்டும். தமக்கு வேண்டிய ஆதரவும் ஒத்தாசையும் இருக்கிறதென்ற உணர்ச்சி, தங்கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் செய்வதற்கு வேண்டிய சக்தியையும் உற்சாகத்தையும் சங்க உத்தியோகத்தருக்குக் கொடுக்கும்.

கூட்டுறவென்பது ஒருவகைச் சுய உதவி என்னுங்கொள் கையை மறத்தலாகாது. குறைவான கல்விப்பயிற்சியுள்ள மக்க ளுக்காக உண்டாக்கப்படுஞ் சங்கங்கள் மிகவும் இலகுவாகக் கிர கிக்கக்கூடிய முறையில் இருந்துவரவேண்டும்.

மிகச்சீக்கிரத்தில் அதிகஞ்சாதிக்க முயலுவதே அனேக சங்கங்களின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருக்கின்றது. இதனு லேயே ஒரே நோக்கத்தைக்கொண்ட சங்கங்கள் சித்தியெய்தக் கூடியனவாயிருக்கின்றன. சங்கங்கள் ஆரம்பித்துச் சொற்ப காலத்துள் வீழ்ச்சியடையாது முக்கிய கவனமெடுக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் வீழ்வதால் நஷ்டமாகும் பணம் சொற் பமாயினும், இது வறியமக்கள் அரும்பாடுபட்டுச் சேகரித்த பணமாயிருப்பதுடன்-இவ்வாறு சூடுகண்ட மக்கள் அதற்குப் பின் இவ்வித முயற்சிகளில் ஈடுபடாமலும் விட்டுவிடுவார்கள் என்பதை மனதில் பதிக்கவேண்டும்.

மற்றைய கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு

கல்வி முறை

அபிவிருத்தி குறைவான நாடுகளிலுள்ள மக்களுக்கு கூட்டுறவென்பது நாளாந்த வாழ்க்கையில் ஓர் சிறந்த பொரு ளாதாரப்பயிற்சி முறையாய் அமைகின்றது. இதைப் போதனு சாலைகளில் பாடமாகக் கற்பித்தல் கடினம். பாடசாலைப் பாடத்திட்டத்தில் கூட்டுறவும் ஒரு பகுதியாயமைய வேண்டு மெனப் பல முறைகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இது நல்ல தெனினும் இவ்வகையில் சாதிக்கக்கூடியது எதுவும் இல்லை யென்றே சொல்லவேண்டும். பாடசாலைகளில் கூட்டுறவைக் கற்பிக்கச் சிறந்த மார்க்கம்-மாணுக்கரை அங்கத்தவராகக் கொண்ட சங்கங்கள் ஏற்படுத்தி-அவைமூலம் சிக்கனத்தைக் கற்பித்துப் பாடசாலைப் புத்தகங்கள் உபகரணங்கள் வழங்குதல், சாப்பாடு ஒழுங்குசெய்தல் முதலியனவாம் இவ்வித முயற் சிகளை எவ்வளவுக் கெவ்வளவு மாணுக்கரே செய்தும், அவைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளில் ஆசிரியர் ஈடுபடாமலும் இருந்துவருகின்றனரோ, அவ்வளவுக் கவ்வளவு கூடிய பிரதிபலன் ஏற்படும்.

சட்டத்தின்படி குறைவான வயதுள்ள மாணுக்கரை அங்கத்தவராய்க்கொண்ட இவ்வித சங்கங்களைப் பதிவுசெய்ய முடியாது எனினும், இது பசுமரத்தாணிபோன்று மனதில் பதியும் காலமாதலால், இவ்வித சங்கங்களில் அங்கத்தவராயிருந்தவர் பிற்காலத்தில் தங்கள் கிராமஞ்சென்று தம்முதியோர் மத்தியில் இக்கொள்கைகளைப் பிரசாரஞ்செய்து, தாமே சங்கங்களின் உத்தியோகத்தராகவும், சிலவேளைகளில் கூட்டுறவுப்பகுதி உத்தியோகத்தராகவும் ஆகியிருக்கின்றனர்.

கூட்டுறவு அபிவிருத்தியின் ஆரம்ப தசையிலே, அரசாங்கங்களால் உருவாக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களில், கூட்டுறவுப் பயிற்சி போதனு வகுப்புக்கள்மூலமும், கலந்துரையாடல், திருஷ்டாந்த அப்பியாசங்கள், சலனப்படங்கள்மூலமும், கூட்டுறவுப் பகுதி உத்தியோகத்தராலேயே அளிக்கப்பட்டு வருகின்றது. நாளடைவில், போதனு-பயிற்சி விடயங்களை எல்லாம் சங்கங்களே கவனித்துவரவேண்டும். இயக்கத்தின் ஒவ்வொரு பகுதியிலும் போதனு பயிற்சி அவசியம். அரசாங்கப்பகுதி உத்தியோகத்தருக்கு வேண்டிய பயிற்சியளிக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது. இதைவிடச் சங்கத்தின் அங்கத்தவர், உத்தியோகத்தர், ஊழியராகிய காரியதரிசிகள், முகாமைக்காரர், விற்பனையாளர், லிகிதர்கள் முதலியோருக்கும் பயிற்சி அவசியம். முக்கியமாக இவர்களின் பயிற்சியையே சங்கங்கள் கவனித்தல் வேண்டும். நன்ருக அபிவிருத்தியடைந்த இயக்கத்திலே இவ்வர்க்கத்தினருக்கு வேண்டிய பயிற்சி வகுப்புக்களை எல்லாம் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களே ஒழுங்குசெய்து நடாத்திவருகின்றன.

இவ்வபிவிருத்தி மிகவும் விரும்பத்தக்கது. கூட்டுறவு மக்களின் இயக்கமாக மாறுவதற்கு இது உதவுவதுடன், பயிற்சி வேண்டி நிற்பவர்களுக்கு வேண்டிய சந்தர்ப்பத்தை அருகாமையிலேயே அளிப்பதால், காலத்தையும் பணத்தையும் வீண் விரயஞ்செய்யாது காப்பாற்றுகின்றது. அத்துடன் அரசாங்கத்துக்கும் செலவைக்குறைத்து உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகம்

ஆரம்பத்திலே ஒவ்வொரு சங்கமும் தன் நிலையை ஸ்திரப் படுத்தி-நாளாந்தம் எழும் புதிய சிக்கல்களை விடுவித்து, குறைகளை நிவாரணஞ்செய்து, புதிய முயற்சியைக்கற்பதிலே முற்றிலும் ஈடுபட்டிருப்பதால், மற்றைய கூட்டுறவுச் சங்கங்களுடன் தொடர்பு ஏற்படுத்துவதை ஆலோசிக்க அவகாசமில்லாதிருக்கின்றது.

முன்னேற்றமும் அனுபவசித்தியும் அதிகரிக்க, புதிய சந்தர்ப்பங்கள் தோற்றத் தலைப்படுகின்றன. கூட்டுறவு முறையில் அபிவிருத்திசெய்யப்பட்ட வட்டாரங்களிலே கடன் கொடுக்கவும் விளைபொருள் விற்பனைசெய்யவும் நாளாந்த பாவனைக்கு வேண்டிய பண்டங்களைப் பங்கிடு செய்யவும் சங்கங்கள் இருக்கும்.

பூரண தசையை அடைவதற்கு, ஓர் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவரின் நியாயமான கடன் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடியதாயிருக்கவேண்டும் என்று முன்னுல் குறிப்பிட்டிருக்கின்றோம். விளைபொருள் விற்பனைச் சங்கம் விற்றுத்தரும் விளைபொருளைப் பயிர்செய்வதற்கு வேண்டிய விதை, பசளை, இயந்திர சாதனம் முதலியனவற்றை வாங்குவதே அவ்வித சங்க அங்கத்தவரின் கடன் நோக்கங்களில் பிரதானமானவையாகும். பயிர் அறுவடைசெய்து விற்கப் படும்வரை உணவு முதலிய வீட்டுச்செலவுக்கு வேண்டிய பணம் கடனின் இன்னொரு நோக்கமாகும்.

ஒரு அங்கத்தவன் கோதுமை விளைவிக்கக் கடன்வேண்டி நிற்பானுயின், கடனுதவிச் சங்கம் அவனுக்கு வேண்டிய பணத்தைக் கடனுகக் கொடுத்துதவுமுன், விளைபொருள் விற்பனைச் சங்கத்தில் ஒரு அங்கத்தவனுகி, அதன்மூலமே அவன் தனது விளைபொருளை விற்கவேண்டும் என்ற நிபந்தனையை ஏற்படுத்தலாம். விற்பனைச் சங்கம், அங்கத்தவரின் விளைபொருளை விற்றவுடன், தனது செலவு பாகத்தைக் (கமிஷனைக்) கழித்துக்கொண்டு மீதியை அவனிடம் கொடுக்காது, கடனுதவிச் சங்கத்தால் அறிவிக்கப்பட்டபடி, கடனுதவிச் சங்கத்துக்கனுப்ப, அச்சங்கம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு வரவேண்டிய கடன், வட்டி முதலியவற்றை எடுத்துக் கொண்டு மீதியாயிருப்பதை அங்கத்தவனுக்குக் கொடுக்கும்.

இவ்விதமாக அங்கத்தவனுக்கு உதவிசெய்வதுடன், இச் சங்கங்கள் ஒன்றுக் கொன்று உதவியாயிருக்கின்றன. பொருளாதார நிலை அங்கத்தவனைத் தனது ஜீவனத்துக்குக் கடனுதவிச் சங்கத்திடம் கடன் வாங்கத்தூண்டலாம். இது நிகழுங்கால், அவ்வாறு கொடுக்கப்படுங் கடன் வாங்கப்படும் நோக்கத்துக்காகவே செலவிடப்படுகின்றதா வென்று கண்காணித்தல் அவசியம். இதை நிச்சயப்படுத்துவதற்குக்-கடனை ரொக்கமாக அங்கத்தவனிடம் கொடுக்காது, அப்பணத்துக்குத் தேவைப்படும் பண்டங்களை அவனுக்குக் கொடுக்கும்படியாக ஓர் உத்தரவுச் சீட்டைப் பண்டசாலைக்கு கடனுதவிச் சங்கம் அனுப்பலாம். இதில் ஈடுபடும் இரு சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களாயிருப்பதாலும், கடனுளி இரண்டிலும் அங்கத்தவனுயிருப்பதாலும், இச்சலுகை துர்ப்பிரயோகஞ் செய்யப்படாதென எதிர்பார்க்கலாம். கடனுதவிச் சங்கங்கொடுத்த சீட்டில் உள்ள பொருள்களில் கொடுக்கப்படாதன எவையென்று பண்டகசாலை தகவல் தெரிவிக்கவேண்டும். இவ்வித ஒழுங்குகள் என்றும் விரும்பத்தக்கன. இவை கணக்குவழக்குகளைச் சற்றுச் சிக்கலுள்ளனவையாக்கலாமெனினும், சங்கம் பூரண தசையும் போதிய ஆற்றலும் அடைந்த பின்னரே இவ்வொழுங்குகள் செய்ய நேரிடுகிறது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஏற்படக்கூடிய நெருங்கிய தொடர்புகளில் ஒன்றைச்சற்றே விவரித்துக்கூறியிருக்கின்றோம். ஆனால் இதைப்போன்று பல்வேறுவகைகளில் நெருங்கிய பரஸ்பர தொடர்பு ஏற்பட இடமுண்டு. எந்தப் பண்டத்தினதும் பொருளாதார வாழ்க்கை: ஒரு பகுதியாரால் உற்பத்திசெய்யப்படுவதில் ஆரம்பித்து, பொதுவாக-இன்னொரு இடத்திலும் வேறு உருவிலும்-வேறொரு பகுதியாரால் உபயோகிக்கப்படுவதில் முடிவடைகின்றது.

பொதுவாக, ஒரு பொருளை உற்பத்தி செய்பவன் பெறும் கிரயத்துக்கும், ஈற்றில் அதை உபயோகிப்பவன் கொடுத்துவாங்கும் விலைக்குமிடையில் அதிக வித்தியாசமுண்டு. இது அநேகமாக அநியாயமானது என்பதும் நாமறிந்த விடயம். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாசத்தைக் குறைத்து, உற்பத்திசெய்பவனுக்கும் ஈற்றில் உபயோகிப்பவனுக்குமிடையில் ஏற்படும் கைமாற்றங்களைத் தவிர்க்கச்செய்யும் ஒழுங்குகள் எல்லாம் உற்பத்தியாளனுக்கும் உபயோகிப்பவனுக்குஞ் சாதகமாகவே அமையும். கூட்டுறவு மார்க்கம் இவ்விருபகுதியாருக்குமிடையில் நேரடியான தொடர்பை ஏற்படுத்த அளிக்குஞ் சந்தர்ப்பங்கள் அபிவிருத்திக்கு வழியாயமைகின்றன. இவ்வித கூட்டுறவு முயற்சி வியாபாரிமாரை ஒழிக்க வழியாயமைந்து, இருவிதச் சங்க அங்கத்தவருக்கும் நன்மை பயக்குகின்றது.

சமாசங்கள்

தனிப்பட்ட அங்கத்தவரைக்கொண்ட சங்கங்கள் பூரண தசையை அடைந்ததும், கூட்டுறவு முறையை அனுசரித்து இன்னும் வேறுவிதமான சிலாக்கியங்களையும் அடையக்கூடியதாகின்றன. ஒரு குழுவினர் (அல்லது சங்கம்) இன்னொரு குழுவினருடன் (அல்லது சங்கத்துடன்) தொடர்பு பூண்டு ஒழுகலைச் சமாசமென்றழைக்கின்றோம். இவ்வித சமாசங்கள் உண்மையிலே கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவுச்சங்கங்களேயாகும். ஏனெனில், ஒரு பகுதியில் அல்லது ஒரு நாட்டில் உள்ள பண்டகசாலைகள், மொத்தமாகக் கொள்வனவுசெய்தல், பொருள் உற்பத்தி செய்தல், எண்பார்வை செய்தல், போதனை-பயிற்சியளித்தல், பிரசாரஞ்செய்தல் முதலிய பொதுநோக்கங்களை உத்தேசித்து ஒரு சமாசமாக இணையலாம்.

தனித்து இயங்குவதால் பெறமுடியாத சலுகைகளை ஒன்றுசேர்ந்து சமாசமாக இணைந்து செயலாற்றுவதன் மூலம் இச் சங்கங்கள் தம் அங்கத்தவர்களுக்குப பெற்றுக்கொடுக்கக் கூடியனவாயிருக்கின்றன.

இவ்விதமான சமாசங்கள், தம் இணைச்சங்கங்களின் பலங்கொண்டு, தனித்து நின்று செயலாற்ற முடியாமல் முறிந்து போகக்கூடிய பெலவீனமான சங்கங்களுக்குக் கஷ்டவேளைகளில் கைகொடுத்து உதவக்கூடியனவாயிருக்கின்றன.

கூட்டுறவுச் சமாசங்களை: பணஉதவிச் சமாசங்கள், வர்த்தக சமாசங்கள், நிர்வாகச் சமாசங்களென மூன்று பெரும் பிரிவுகளாக வகுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கூறப்பட்டன அநேகமாகக் கடனுதவிச் சங்கங்களைக் கொண்ட சமாசங்களாயினும், வேறு சங்கங்களும் இவற்றில் சேரலாம். இரண்டாவது வகுப்பில், வியாபாரத்தில் ஈடுபடும் விற்பனைச் சங்கங்களும், விநியோகச் சங்கங்களும், விளைபொருட் சங்கங்களும், கைத்தொழிற் சங்கங்களும் அங்கத்தவராகச்சேரும். மூன்றாவது வகுப்பில், ஒன்றல்லது பல இனச் சங்கங்கள், எண்பார்வை செய்தல், சட்டசம்பந்த உதவிபெறல், நிர்வாக விடயங்களில் வேண்டிய புத்திமதி பெறல், பயிற்சி, பிரசார சேவைகள் முதலிய பொது நோக்கங்களுக்காக இணைக்கப்படுகின்றன. ஒரு நாட்டுக்கு அவசியமான சமாசத்தின் வர்க்கம் அந்நாட்டின் தேவையைப் பொறுத்தே இருக்கும். சில இடங்களில் மேற்கூறிய மூன்று வகைச் சேவைகளையும் ஒரேசமாசஞ் செய்து வருதலும் உண்டு.

நிதி சம்பந்தமானவை

எவ்வாறு தனக்கு வேண்டிய பணத்தைத் தனித்துப் பெறமுடியாத ஒருவன் அதைப்பெறக் கடனுதவிச் சங்கத்தில் சேருகின்றானோ, அதேபோன்று, பலசங்கங்கள் தமக்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்கு ஒரு வங்கியை ஸ்தாபிக்கலாம்.

தனிப்பட்ட அங்கத்தவரை மட்டுங் கொண்ட சங்கத்துக்கும் அதன் அங்கத்தவருக்கும் உள்ள தொடர்பே, இவ்வித இணைச் சங்கங்களுக்கும் வங்கிக்குமிடையில் நிலவும். வங்கி கூட்டுறவுச் சங்கங்களின் நன்மைக்காகவே ஏற்படுத்தப்பட்டது. அதை நிர்வகிக்கும் குழுவினர் கூட்டுறவாளர். தம் இணைச் சங்கங்களைப்பற்றிய விடயங்களை அவர்கள் நன்கறிந்தவராயிருப்பர். கூட்டுறவு வங்கியின் ஆரம்ப தசையிலே, தனிப்பட்ட நபரையும் வங்கியின் இயக்குநகராகச் சேர்க்கலாம். ஆனால் அவர்கள் கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கையும் பற்றும் உள்ளவர்களாயிருப்பதுடன், தமது செல்வாக்கின் பலங்கொண்டு பொது சனத்தை வங்கியில் பணம் போட்டுவைக்கத் தூண்டக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்.

இவ்விதவங்கி, தனக்குத் தேவையான நிதியை, பொது மக்களிடமிருந்து வைப்புப் பணமாகவும்; தமதங்கத்தவரிடமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து வைப்புப் பணம் ஏற்கும் இணைச் சங்கங்களின் மீதிப்பண மாகவும் பெறுகின்றது. வங்கியின் பங்குப் பணமுதலும் அது சேகரித்துள்ள ஒதுக்கு நிதியும், பதிவுசெய்யப்பட்ட சங்கங்க ளுக்கு மட்டுமே கடன் கொடுக்கப்படும் என்ற நிபந்தனையும், அதன் பிணையாக உதவுகின்றன. ஈற்றில் சொல்லப்பட்டதே அதிமுக்கியமானது. ஏனெனில், ஒரு வங்கியின் பலம் அது கடன் கொடுக்கும் இணைச்சங்கங்களிலேயே தங்கியிருக்கின்றது.

பங்குப்பணத்தின் பேரால் கொடுக்கும் வட்டியின் விகிதத்தைக் குறைப்பதால் சங்கங்களுக்குக் கொடுக்கும் கடன் வட்டியைக் குறைக்கக் கூடியதாயிருக்கும். ஆனுல் பொதுசனத்தைக் கவருவதற்கு வைப்புப் பணத்தின் வட்டிவிகிதம் சற்றுக் கவர்ச்சிகரமாகவே இருத்தல் வேண்டும். வட்டிவியாபாரிகள் அதிகவட்டி விரும்பிக் கொடுக்கும் நிதியைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெறமுடியாது ஆனுல், முதுமையின் போது உதவக் கூடியதும், சீதனத்துக்காகச் சேமித்து வைப்பதும், வயது வராச் சிறுவர் சட்டவயது வரும் வரையும் பாதுகாக்க வேண்டியது மான நிதிகளுக்கு, இவ்விதவங்கி ஒரு சிறந்த சேமிப்பு ஸ்தல மாக உதவுகின்றது. அத்துடன், தல ஸ்தாபனச் சபையார் தெருப்பாது காப்புச் சபையார், சுகாதாரச்சபையார் முதலியோரும் தம் பணத்தை இவ்வங்கியில் வைப்புப் பணமாகப் போட்டு வைக்கலாம்.

அரசாங்கத்தார் வைப்பு நிதிகளை இவ்வங்கிகளில் போட்டு, பொதுசனத்துக்கு வங்கியில் நம்பிக்கை யுண்டாகச் செய்து, அவைகளுக்குக் கைகொடுத்து உதவிவருதல் விரும்பத்தக்கது. ஆனுல், அரசாங்கமும் பிறருக்குக்கிடைக்கும் வட்டியைப்போல் தாமும் வங்கியிடமிருந்து பெற்றுவரலாம். கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு இயங்குகின்றன, என்ன சட்டநிபந்தனைக்குட் பட நின்று அவை செயலாற்றுகின்றன, அவை நம்பிக்கைக் குப் பாத்திரமானவையா என்ற விபரங்களைத் தெரிந்து கொள்ளும் அளவுக்கே, அவர்களிடமிருந்து வைப்புப்பணம் எதிர்பார்க்கலாம்.

தனிச்சங்கங்கள் உருவாகிய காலந் தொட்டே இவ்வித விடயங்கள் விளம்பரப்படுத்தப் பட்டிருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுறவு வங்கியின் செலவுகள் சாதாரண வங்கிகளில் ஏற்படும் செலவுகளைவிடக் கூடியனவாயிரா. கூட்டுறவு வங்கியின் நிர்வாகசபையார் சம்பளமின்றிச் சேவை செய்பவர்கள். பிரயாணச் செலவுகளே அவர்கள் பெறக்கூடிய வேதனம். ஆனால், கட்டிடவாடை, தளபாடங்களின் விலை, லிகிதர்களின் சம்பளம் முதலியன கொடுக்கப்படவேண்டியதுடன், ஒதுக்கு நிதியும் திரட்டப்படல் வேண்டும். இதற்கு வேண்டிய பணம், வங்கி கடன் ஏற்றும் கொடுத்தும்வரும் வட்டிவிகிதங்களுக் கிடையிலுள்ள வித்தியாசத்திலிருந்தே பெறப்படுகின்றது.

வங்கியின் எல்லை அதிகப் பரந்ததாயின், அதன் பிரதிநிதிகள் பொதுக் கூட்டங்களுக்குச் சமுகங்கொடுத்தலுக்கு அதிக காலமும் பணமும் விண்கிரயஞ்செய்ய வேண்டி நேரும். ஆனால் போதிய அளவு சங்கங்களை அடக்கக் கூடிய எல்லையாயிருந் தாற்முன் அவைகள் கடனெடுக்கும் வட்டிவிகித (2%, 3%) வித்தியாசத்தைக் கொண்டு வங்கி தனது செலவுகளைச் சமாளிக்கக் கூடியதாயிருக்கும்.

ஆரம்பத்திலேயே வைப்புப் பணத்துக்கும் பங்குப்பணத் துக்கும் விகிதாசாரம் ஏற்படுத்துவது உசிதம். அவ்வித வங்கியை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் சாதகமாயிருந்தால் 8க்கு ஒன்று வீதத்தை ஆரம்பத்தில் கைக்கொள்ளலாம். நாளடைவில், அனுபவமும் தேர்ச்சியும் வளர வளர இவ்விகிதம் 10க்கு 1ம் அதற்கு மேற்படவும் அதிகரிக்கப்படலாம். தனது எல்லைக்குள்ளிருக்கும் எல்லாவிதக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இவ்வங்கி கடனுதவலாம். தனது அங்கத்தவரல்லாதவருடன் நாளாந்த பணக் கொடுக்கல்வாங்கல்களை இவ்வங்கி கூடியளவு தவிர்க்க வேண்டும்.

வர்த்தகச் சமாசங்கள்

இதுவரையும் நிதிசம்பந்தமான சமாசங்களைப் பற்றி ஆராய்ந்தோம். அதேவேளையில் இன்றே கூர்நாதிக் கோபுரத்தையும் நிர்மாணித்தல் அவசியம். கூட்டுறவுச் சங்கங்களின் வர்த்தக அலுவல்களை அபிவிருத்திசெய்வதே இதன் நோக்கம்.

தராதரமுடைய ஸ்தாபனங்கள் பொருளாதார வெளி எல்லையிலேதான் சாதாரணமாக ஆரம்பிக்கின்றன. உதாரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக—அரிசி, பருத்தி முதலிய பண்டங்களை விற்பனை செய்யும் மார்க்கம் திருப்திகரமானதல்ல வென்று வைத்துக்கொள்ளு வோம். ஆனதுபற்றி, போக்குவரத்து வசதிக் குறைவான இடங் களிலுள்ள பாமரமக்கள் தனித்து, தரப்படுத்தாத தமது விளை பொருளை வயலில் வைத்தே அலைந்து திரிந்து வாங்கும் வியாபாரிகளுக்கு அநியாய விலைக்கு விற்கிறார்கள். அவர்க ளிலிருந்து தான் கூட்டுறவு மார்க்கம் ஆரம்பிக்கும். இங்கு முதல் செய்யவேண்டியது, பயிர் விளைப்பவரை ஒன்று சேர்த்து ஓர் விளைபொருட்சங்கம் ஏற்படுத்தி, அவர்கள் விளைபொருளைத் தரப்படுத்தி, வியாபாரிகளிருந்து வரும் பட்டணத்திலோ, அல்லது அதற்கப்பால்—அப்பொருளை உபயோகிப்பவர்களுக்கோ, சாதக மான விலைக்கு மொத்தமாக விற்க ஒழுங்குசெய்வதாம்.

இதேகாலத்தில் அருகாமையிலுள்ள வட்டாரங்களிலும் இதேபோன்ற சங்கங்கள் ஸ்தாபிக்கப்படலாம். காலகதியில் இச்சங்கங்கள் எல்லாவற்றையும் ஒன்றுதிரட்டிச் சமாசமாக இணைத்து, பொருளை மொத்தமாக விற்பதனுல் விற்பனை மார்க்கத்தில் இன்னும் முன்னேறக் கூடியதாயிருக்கும். இவ்வா றே செய்து கொண்டு போனுல் நாடு முழுவதற்கும் ஒரு மகா சம்மேளனம் ஏற்படுத்தி, பிறநாடுகளுடன் வியாபாரத் தொடர்புபூண்டு அதிக பயன்பெறலாம்.

இவ்வித அபிவிருத்தியில், போதியளவு பொருட்களைக் கையாளும் பட்சத்தில், சமாசம், தானே பொருளைப் பதப் படுத்தி வேறு பொருளாக்க வேண்டிய இயந்திர சாதனங்களை அமைத்து, இன்னுங்கூடிய கூட்டுறவு உதவி அளிக்கலாம்.

இதே போன்று, பண்டகசாலைகளும் நாளடைவில் மொத் தக் கொள்வனவு செய்வதற்குத் தம்மை ஓர் சமாசமாக இணைக்கின்றன.

நிர்வாகம்

வேறு சமாசங்கள் தங்கள் இணைச்சங்கங்களின் நிர்வாகத் தரத்தைப் பாதுகாக்கவோ — இன்னுஞ் சிறந்ததாக்கவோ, வியாபாரத் தொடர்பற்ற கடமைகளைக் கைக் கொள்ளுகின்றன. அவ்வித சமாசங்களின் உத்தியோகத்தரும் தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி வேண்டிநிற்குஞ் சங்கங்களைத் தரிசித்து, அங்கே கூட்டங்கூடியும் கூட்டுறவுச்சங்க இயக்குநரினதும் உத்தியோகத்தரினதும் மகாநாடு கூட்டியும், ஆலோசக சேவைகள் புரிந்தும், காலாந்தரத் துண்டுப்புத்தகங்கள், சஞ்சிகைகள் பிரசுரித்தும் உதவிசெய்து வருவர். கூடிய கெதியில் இணைச் சங்கங்களின் அங்கத்தவர், நிர்வாகசபையார் ஊழியர் முதலானோருக்குப் போதனா வகுப்புக்களும் ஒழுங்குசெய்வர். மேற்பார்வை எண்பார்வை வேலைகளையும் இவர்கள் கைக்கொள்ளலாம். சில இடங்களில், இணைச்சங்கங்களின் கடன்மனுப்பத்திரங்கள் இச்சமாசங்கள் மூலமே வங்கிக்கு அனுப்பப்படுகின்றன. சமாசத்தின் கணிப்பு இத்தறுவாயில் மிகமதிப்புள்ளதாகி, அதன் அதிகாரத்தைப் பெலப்படுத்துகின்றது.

கடன் எடுப்பதில் வேறுதடைகள், பாதுகாப்புகள் ஏற்படுத்துமுன், நன்றாய் ஆலோசிக்கவேண்டும். பயிர்விளைவிக்கும் நோக்கங்களுக்காகக் கொடுக்கப்படும் கடன், உரிய திகதியில் கமக்காரனுக்குக் கிட்டாது விடின், உபயோகமற்றதாய் விடும். ஆதலால் நிர்வாக அலுவல்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சமாசம், தன் பிரதிநிதிகளில் ஒருவரை வங்கியின் நிர்வாகசபை அங்கத்தவராக நியமனஞ் செய்வதால், சிக்கல்களும் காலதாமதமும் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

நிர்வாக சமாசம் அநேகமாகப் பிரசார, வேலைகளிலும் புதிய சங்கங்களையும் ஸ்தாபிப்பதிலும் ஈடுபடும். நன்றாக அபிவிருத்தியடைந்த தசையை எய்தும் வரை, பதிவு செய்யும் அதிகாரி தனது உத்தியோகத்தரைக் கொண்டு பரிசோதனை செய்த பின்னரே, கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவுசெய்யவேண்டும். அப்படியாயின், சமாசத்திற்கு எவ்வளவோ உபயோகமான சேவை செய்ய இடமுண்டு.

வேலைத்திட்டத்தை வகுத்து நடத்தும் விடயத்தில் வேண்டிய உதவியை, அரசாங்கத்தைவிட நிதி நிர்வாக சமாசங்களே செய்யவேண்டும். நிதிசம்பந்தமான சங்கங்கள் அதில் ஈடு படக்கூடாது. மத்தியவங்கிகள் போன்ற நிதிஸ்தாபனங்கள் இதில் தலையிட்டதனால் சில வேளைகளில் விரும்பத்தகாத பலாபலன்கள் விளைந்திருக்கின்றன. அவ்வித சமாசத்தின் பொறுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பில் இவ்வேலையை விட்டால், அச்சமாசம் தன்னிடமிருக்கும் பணத்தை விட்டுப்பெருக்க எண்ணி—புதியசங்கங்களை உண்டாக்கத்தலைப்படுமே யன்றி, அவை அவ்விடங்களில் அவசியமா வென்பதை ஆராயப்புகாது. அத்துடன், அது பணவிடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து, எந்தச் சங்கத்தினதும் உண்மையான வெற்றி அதன் அங்கத்தவர் கூட்டுறவின் விதிகளை உணர்ந்து கடைப்பிடிப்பதிலேயே தங்கியிருக்கின்ற தென்பதை மறந்து விடுகின்றது.

சிலசமாசங்கள் எண்பார்வையிலே கவனஞ்செலுத்துகின்றன. பதிவு அதிகாரி எண்பார்வைக்குப் பொறுப்பாளி என்று சட்டம் பொதுவாகக் குறிப்பிட்ட போதிலும், அவ்வதிகாரியே இதைக்கட்டாயஞ் செய்யவேண்டு மென்று கருதப்படவில்லை. ஆரம்பதசையில், சங்கத்தை உருவாக்கி ஸ்தாபித்த உத்தியோகத்தரே எண்பார்வையுஞ் செய்து வருவர். ஆனால் ஒருசங்கத்தை உருவாக்கினவரே அதை எண்பார்வை செய்தல் புத்தியன்று.

கூட்டுறவு இயக்கம் தனது சங்கங்களை எண்பார்வை செய்ய எடுக்கும் முயற்சிகளுக்கெல்லாம் ஊக்கமளித்தல் வேண்டும். சமாசத்தினால் எண்பார்வை செய்ய நியமிக்கப்பட்டவர் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளைப் பதிவுகாரியஸ்தர் குறிப்பிடலாம். அல்லது அவ்வித பரிசோதகர் அரசாங்கப் பரீட்சையில் தேறவேண்டுமென்று விதிக்கலாம். எண்பார்வை செய்த சமாசத்துக்குத் தெரியாமல், அதனால் கணக்குப் பரிசோதிக்கப்பட்ட சங்கத்தின் கணக்குகளைப் பதிவுகாரிஸ்தரும் தனது எண்பார்வையாளரைக் கொண்டுதிரும்பப் பரிசோதிப்பிக்ககலாம்.

வினாக்கள்

1. வாக்களிக்கும் விடயத்தில், கூட்டுப்பங்கு ஸ்தாபனத்துக்கும் கூட்டுறவுச் சங்கத்துக்கு முள்ள பேதமென்ன?
2. பிரமாணிக்கத்தின் வெகுமதிகளையும், ஆதரவின்மையால் ஏற்படுங் கேடுகளையுங் குறிப்பிடுக. உமது அனுபவத்திலிருந்து பின்சொல்லப்பட்ட விளைவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணங் கூறுக. இவ்வித நிலைமையைச் சமாளிக்க என்ன செய்யவேண்டும்?

3. கூட்டுறவுச் சங்கத்தின் அதிகார பீடம் யாது? அதன் முக்கியகடமைகளெவை?

4. நிர்வாக சபையின் நோக்கங்களெவை? அதன்கடமைகளைக் குறிப்பிடுக.

5. சங்க உத்தியோகத்தரையும் அன்னவரின் கடமைகளையுங் குறிப்பிடுக.

6. "கவனமாகக் கணக்குப் பதிவு செய்வதும் போதிய எண்பார்வையும் எல்லாச் சங்கங்களிலும் அவசியம்". இதுஉண்மையா? இதைச் சுமித்திரையாக அனுஷ்டித்துக் குறைகளை நிவிர்த்தி செய்யும் மார்க்கங்களைக் குறிப்பிடுக.

7. எமது கிராமத்தவருக்குக் கல்விபுகட்ட ஓர் கூட்டுறவுக் கல்வித்திட்டம் அவசியமென்று கருதுகின்றீரா?

உமது கிராமத்திலுள்ள சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற கல்வித்திட்டமொன்று வகுத்து:

— அதை எவ்வாறு வகுக்கவேண்டும்?
— அதிலடங்கவேண்டிய விடயங்களெவை?
— அதன் நோக்கங்களெவையென்று குறிப்பிடுக.

8. ஓரே வட்டாரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு இணைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுக.

9. "ஏனைய அரசாங்க உத்தியோகத்தரைப் போலல்லாது, கூட்டுறவுத் துறை உத்தியோகத்தர் தம் உத்தியோகம் அற்றுப் போகவே உழைக்கின்றனர்" என்பதை விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் VI

முடிவுரை

எந்தவிதமான கூட்டுறவுச் சங்கத்தையும் உருவாக்கி, ஸ்தாபித்து நிர்வகிக்கப்புகுமுன் போதியளவு ஆராய்ந்து திட்டமிடல்வேண்டும். சங்கங்கள் காளான்போல் முளைப்பதில்லை. அவை எந்த இனத்தைச் சார்ந்தவை, அவற்றின் தேவைகள் என்னவென்று மதிப்பிட்டு, அவைகளைத்தரிசிக்கும்போது ஏற்படக்கூடிய சிக்கல்களை அலசி ஆராய்ந்து, அச்சங்கங்களை வெற்றிகரமாக ஸ்தாபித்து நடத்திவரத் தேவையான பணம், ஆட்பலம் முதலியவற்றை நன்கு ஆராய்ந்தறிதல் வேண்டும்.

ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று சொல்லும் பொழுது, அதில் ஆர்வங்கொண்ட மக்கள் எல்லோருடைய எல்லாக்குறைகளுக்கும் நிவாரணமேற்படுமெனச் சிலர் கருதுகின்றார்கள். இந்த நப்பாசை காரணமாக எதிர்பார்த்தளவு பிரதிபலனைக் காணாதபோது மனங் குன்றுவதால், சங்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டோ முற்றாக நின்றோ போகின்றது. சங்கத்தைத் தொடங்கினவர்கள் அதிகம் எதிர்பார்க்காமலிருந்தால் சங்கம் அபரிதமான வெற்றியை ஈட்டாவிடினும் ஒரு குறித்த துறையில் உபயோகமான சேவை செய்திருக்கக்கூடும்.

ஓர் கூட்டுறவுச் சங்கம் கைக்கொள்ளவிருக்கும் நோக்கங்களையும் எய்தக்கூடிய நன்மைகளையுந் திர்க்கமாக ஆராய்ந்து விளங்கிக்கொள்வதால்தான் அதன் அத்திவாரத்தைப் பலப்படுத்தமுடியும். குறிக்கப்பட்ட எல்லாச் சங்கங்களும் ஒரே முறையில் அமைந்தொழுகுவதில்லையாதலால், இவ்வித திர்க்க ஆராய்வு அத்தியாவசியம். அனேக சங்கங்கள் மிகச்சிறியன. சில வளர்ந்து நாளடைவில் நல்ல நிலையை அடைகின்றன. அனேக சங்கங்கள் ஓர் குறிக்கப்பட்ட எல்லைக்குள்ளேயே அடங்கி இயங்குகின்றன. வேறுசில, பரந்த (மண்டல) வலயங்களையும், சில சமயங்களில் நாடுமுழுவதையுமே தமது எல்லையாகக் கொண்டிருக்கின்றன. சில ஒரே நோக்கத்துக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்க, வேறுசில பலநோக்கங்களுக்காகவும் இயங்கிவருகின்றன. சில இடங்களில் ஒரு நோக்கத்துக்காக ஸ்தாபிக்கப்பட்ட சங்கம், சந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்ப்ப மாறுபட்டால் நாளடைவில் வேருெரு நோக்கத்தைக் கொண்டியங்குகின்றது. ஒரு சங்கம் ஒரேவேலையில் ஈடுபட்டோ, தொடர்புள்ள பல கருமங்களில் செயலாற்றியோ வருதலும், தனது அங்கத்தவரின் பொருளாதாரக் குறைகளில் அதிகமானவற்றை ஒரே காலத்தில் நிவிர்த்திசெய்ய எத்தனித்தலும், சூழ் நிலையையும் அதனங்கத்தவரின் விருப்பு, ஊக்கம், முதலியவற்றையும் பொறுத்தே இருக்கும்.

எவ்வாருயினும், கூட்டுறவுச் சங்கங்களின் அளவு, அவை ஈடுபடும் அலுவல்களின் தொகுதி, அவற்றின் சேவை, அங்கத்தவரின் நோக்கங்கள் ஆயன, சங்கங்களின் செயற்கைமுறையில் வித்தியாசத்தை உண்டுபண்ணுகின்றன. ஓர் சங்கத்தை உருவாக்கலிலும் கைக்கொள்ளப்படவேண்டிய முறைகள், அதன் சட்டப் பிரமாணத் தேவைகளிலும், நோக்கம், அங்கத்துவத்தின் அளவு, அதன் எல்லையின் குறுகிய அல்லது பரந்த தன்மை முதலியவற்றிலுந் தங்கியிருக்கின்றன. பரஸ்பர உதவிக் குழுக்கள் முதல்-பதிவுசெய்யப்பட்டுப் பலவகைப்பட்ட பொருளாதார முயற்சிகளில் ஈடுபட்டிருக்குஞ் சங்கங்கள்வரை-பல இனங்களுண்டு.

எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பொதுவாயுள்ள அம்சம் என்னவெனின்: அவற்றின் உடந்தைக்காரரும் அவற்றைக் கொண்டுநடத்துபவரும் அங்கத்தவரேயாவர். அவர்களுடைய பரஸ்பர நன்மைக்காகவே அவை ஸ்தாபிக்கப்பட்டு இயங்கிவருகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் சனநாயக முறைப்படி நடப்பிக்கப்படுகின்றன வென்ற உண்மையிலிருந்து, அவற்றின் வெற்றி அவைகளின் அங்கத்தவரின் ஆதரவிலே தங்கியிருக்கிறதென்பது புலனுகின்றது. தங்கள் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்யக் கூட்டுறவு முயற்சி எவ்வளவு உதவுகின்றதென்பதை உணருபவரே தாமாகமுயன்று ஆதரவளிப்பார்களெனப் பரந்த அனுபவத்திலிருந்து அறிகின்ருேம்.

கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கும் பொறுப்பை ஏற்பவர்கள், மக்களுக்கு அவற்றின் பொருளாதார நன்மைகளைமட்டுமன்றி, சேர்ந்து உழைப்பதன் பயனுக எவ்வாறு ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவனும் சங்கத்தை நடத்துவதில் பங்கெடுக்கின்றுன் என்றும், அதன் அலுவல்களில் மற்ற அங்கத்தவரைப் பொறுத்த மட்டில் ஒவ்வொருவனுக்கும் உரிய பொறுப்பு என்னவென்றுந் தெளிவாக விளக்கிக்கூறவேண்டும். சங்க அலுவல்களைத் திட்டமிட்டு வகுத்து நடத்தி மேற்பார்வை செய்வதற்குத் தாம் நியமிக்கும் நிர்வாகசபை அங்கத்தவர் மிகச் சிறந்தவராக இருக்கவேண்டியதன் முக்கியத்தைபும், சங்கத்தின் முன்னேற்றத்தைக் கூர்ந்தவதானித்து வருதலின் அவசியத்தையும், சங்க அங்கத்தவர்களின் மனதில் பதியச்செய்யவேண்டும். ஒரு சங்கத்தின் வெற்றியை, குறுகியகாலத்தில் எய்தக்கூடிய பலனைக்கொண்டல்ல, நீடியகாலம் நின்றுழைத்து பயக்குஞ்-செல்வாக்கைக்கொண்டே கணிக்கவேண்டும். தாங்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளுக்குத் தம் விருப்பையும் அபிப்பிராயத்தையும் தெரிவித்தலோடுநில்லாது, தங்களுக்குப்போதிய நன்மை பயக்கக்கூடிய அளவு சங்கத்தின் நிதிநிலையைப் பலப்படுத்துவதும் அங்கத்தவரின் கடமையாகும்.

பல நாடுகளில் கூட்டுறவுச்சங்கங்களைச் சிறந்த முறையில் அரசாங்கமும் அபிவிருத்தி செய்யலாம்.

தங்கள் கஷ்டங்களைக் கூட்டுறவு முறையில் எவ்வாறு நிவிர்த்திசெய்யலாமென்று அவர்களை ஆராயத் தூண்டலாம். சிற்சில இடங்களில், கூட்டுறவு முறையை அனுஷ்டித்துப் பயனடைய விரும்புவர்களுக்கு வேண்டிய போதனு வசதிகளை ஏற்படுத்தலாம். ஆரம்பதசையிலுள்ள சங்கங்களுக்கு வேண்டிய நுண்கலை அறிவையும், போதிய மேற்பார்வையையும் ஒழுங்குசெய்யலாம். இவ்வித சங்கங்கள் நின்றியங்குவதற்கு வேண்டிய சட்டங்களை ஏற்படுத்தியும் அவைகளுக்கு ஒத்தாசை செய்யலாம்.

சங்கங்களை ஸ்தாபித்து நடத்திவர ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் கூட்டுறவின் விதியை விளக்குவதில்லையென்பதை மறக்கலாகாது. உண்மையில், அநேக நாடுகளிலே கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுவதற்கு முன்னரே கூட்டுறவு முறையில் மக்கள் செயலாற்றிவந்திருக்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்களின் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைப் பாதுகாக்கவும், சங்கங்கள் இத்தன்மையை அனுசரித்துச் செயலாற்றவுமே சட்டம் நிறுவப்படவேண்டும்.

பொதுசன ஊழியர் எவ்வித பங்கெடுத்தபோதிலும், ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் வெற்றி, விடயமறிந்த அங்கத்தவர் முயன்று தீவிரமாய் ஒத்துழைப்பதிலேயே தங்கியிருக்கின்றது. ஆரம்பத்திலேயே, சங்கத்தில் சேரவிரும்பும் அங்கத்தவர் அனைவரும் அதன் கருமங்களில் கிரமமாய்ப் பங்குபற்றவேண்டுமென்ற நியதியை ஏற்படுத்திக் கடைப்பிடிக்கவேண்டும். அத்துடன் மக்களின் கூட்டுறவு அறிவும் அதிமுக்கியமானது. சங்கத்தை நிர்வகித்து நடப்பிக்க அதன்நிதி, கணக்குவழக்கு, திட்டக்கணக்கு முதலியவற்றில் மட்டும் பயிற்சிபோதாது. முதலாம் அத்தியாயத்தில் கூறியபடி:-

“தங்கள் பொருளாதார சுபீட்சத்தை வளர்க்க, மக்கள் தாமாக விரும்பி, சமத்துவம் என்னும் அத்திவாரத்தில், மனிதப்பிறவிகளாக ஒன்றுசேருஞ் சேர்க்கைமுறையே கூட்டுறவு” என்னும் கூட்டுறவின் உட்கருத்தை விளங்கி அதன்படி நடத்தலிலேதான் முழுவெற்றியுந் தங்கியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Y.M.H.A.
THIRUNELVELY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Y.M.H.A
THIRUNELVELY

கூட்டுறவு மொத்த
விற்பனை அச்சகம்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org